# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை (09.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 348


# ஜனாதிபதி - தமிழ்க்கூட்டமைப்பு சந்திப்பு எவ்வேளையும் இடம்பெறலாம்

## அரசியல் தீர்வு, மீள்குடியமர்வுக்கு பேச்சில் முக்கிய இடம்

கொழும்பு, நவம்பர் 09

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மிக விரைவில் பேச்சு நடத்தப்படும் எனத் தமிழ்க் கூட்டமைப்பு வட்டாரங்கள் நேற்றுத்தெரிவித்தன.

இச்சந்திப்பு இந்த வாரத்துக்குள் எந்த நாளிலும் இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

''அரசியல் தீர்வு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளோம். குறிப்பாக மீள்குடியமர்வு தொடர்பாகக் கூட்டமைப்பு சார்பில் 7 பேர் அடங்கிய பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்திருந்தோம்.

அரச தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெயர்ப் பட்டியல் ஒன்றைஜனாதிபதியும் முன்வைப்பார் என்று எதிர்பார்த்திருக்கின்றோம்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேற்றப்படாத மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கூட்டமைப்பின் (24ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் நேற்று இரு சிங்கள இளைஞர் கைது

சாவகச்சேரி, நவ. 9

பொலிஸ் அதிகாரிகள்என்று கூறி மீசாலைப்பகுதியில் வீடுகளுக்குச் சென்று பணம் சேகரித்த இரண்டு சிங்கள இளைஞர்கள் சாவகச்சேரி பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் .

இந்த சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

மீசாலை மேற்கு காளிகோயில் வீதியில் பிற்பகல் 3 மணியளவில் வீடுகளுக்குச் சென்று அனுராதபுரத்தில் இயங்கும் அநாதை சிறுவர் இல்லத்துக்கு என்று கூறி குறித்த இருவரும் பணச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது பணம் வழங்க மறுத்தவர்களை தாம் பொலிஸ் அதிகாரிகள் எனவும் அதுசம்பந்தமான புகைப்படங்களையும் காண்பித்துமிரட்டியுள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை செய்த போர்க் குற்றம் தான் என்ன? தெளிவுபடுத்த பிரிட்டனிடம் கோரிக்கை

லண்டன், நவ. 09

தமக்கெதிரான போர்குற்றச் சாட்டுக்கள் எவை என்பதை தெளிவு படுத்துமாறு இலங்கை பிரிட்டனைக் கேட்டுள்ளது.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் இதுதொடர்பான கோரிக்கையை பிரிட்டன் அரசிடம்சமர்ப்பித்துள்ளது. அதில் இலங்கை அரசு எந்தவகையான போர்க் குற்றங்களை இழைத்தது, அதில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ எவ்வகையான தவறு செய்துள்ளார் என்ற விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் திகால ஜெயசிங்க கேட்டுள்ளார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனில் வைத்துக் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் பிரிட்டனுக்கான பயணத்தை அவர் ஒத்தி வைத்தார்.என செய்திகள் வெளியான பின்னர் இலங்கைத் தூதரகத்தின் கோரிக்கை பிரிட்டன் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கையில் போர்க் குற்றங்கள்,(24ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டை சூதாட்ட வலயமாக மாற்றுவதற்கு அரசு முயற்சி

### ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.09

''இலங்கையை ஒரு சூதாட்ட வலயமாக மாற்றுவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. இன்னும் ஓரிரு தினங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள சூதாட்ட சட்டமூலத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கும் - என்று அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு குறித்து தமிழ்க் கட்சிகளுடன் பேசி வருகின்றோம் - ஜீ.எல்.பீரிஸ்



கொழும்பு , நவ. 9

நடைமுறைக்குச் சாத்தியமாகக்கூடிய அரசியல் தீர்வு பற்றி அரசாங்கம் தமிழ்க் கட்சிகளோடு மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருக்கிறது. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக நடைமுறைக்கு உகந்த சிபார்சுகளை முன்வைக்குமாறும் அக்கட்சிகளிடம் அரசு கோரியுள்ளது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தன்னைச் சந்தித்த ஜேர்மனி சர்வகட்சி குழுவிடம் தெரிவித்தார். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜேர் மனிய சர்வகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கடந்த சனிக்கிழமை வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தது. அதன்போதே பீரிஸ் மேற்கண்டவாறு அக்குழுவினரிடம் தெரிவித் துள்ளார்.

அச் சந்திப்பின் போது பீரிஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

5 அம்சத் திட்டத்தின் கீழ் நாட்டில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நிலைநிறுத்த அரசு பாடுபட்டு வருகிறது. நீண்டகாலமாக நிலவிவரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு நடைமுறைக்குச் சாத்தியமான அரசியல் தீர்வுபற்றி - 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட - தமிழ்க் கட்சிகளுடன் மீளவும் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறோம். இதன்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியமான சிபாரிசுகளையும் (24ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே

**பொன்சேகாவை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்**
சிறையில் வாடும் பொன்சேகாவை விடுவிக்கக் கோரி பல்வேறு இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டம் — பக்கம் 02

**முன்னாள் போராளிகளைக் கையாள்வது எப்படி?**
சிவில் சமூகத்தினருக்கு இராணுவத்தினர் விளக்கச் செயலமர்வு — பக்கம் 07

**பின்தொடரும் துயரின் குரல்**
முன்னாள் போராளிகளின் வலிகளைப் பேசும் கட்டுரை — பக்கம் 13


## அரச எம்.பிக்கள் நேற்று பட்ஜெட் குறித்து பேச்சு

கொழும்பு, ஒக். 9

அரச எம். பிக்கள் நேற்று அலரி மாளிகையில் சந்தித்து 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பாகவி கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பில் அமைச்சர்கள், பிரதி (24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, நவ. 9

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கால எல்லை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக் கப்பட்டுள்ளது.ஆணைக்குழுச் செயலாளரின் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டு இந்தக்கால நீடிப்பை வழங்கியுள்ளார்

அடுத்த ஆண்டு மே மாதம் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறை மோதலின் பின்னணியில் சிறைக்காவலர்கள்

### புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

கொழும்பு, நவ.09

கைதிகளுக்கும் பொலிஸாருக்குமிடையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலின்பின்னணியில்சிறைக் காவலர்கள் இருந்துள்ளார்களா என்பது குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் சோதனை நடத்தச் சென்ற பொலிஸாருக்கும் கைதிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 50 பொலிஸாரும், 5 சிறைக் காவலர்களும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலும் விசாரணை

கொழும்பு, நவ.09

தனது விசாரணைகளை மன்னாரிலும் நடத்துவது குறித்து நல்லிணக்க ஆணைக்குழு பரிசீலனை செய்து வருவதாக அதன் செயலாளர், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்புக்கு அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் மன்னார் மாவட்டத்திலும் இடம்பெற வேண்டும் என மன்னார் ஆயர் கடந்த 29ஆம் திகதி நல்லிணக்க (24ஆம் பக்கம் பார்க்க)


### தேவை

''போஸ்கோ'' நிறுவனத்துக்கு புத்தகம் கட்டுபவர்கள், பழகுபவர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
BOASCO - (நல்லூர் கோயில் முன்பாக)
252, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய ஆளணி, கணினி வசதிகள் உடன் ஏற்படுத்தப்பட வேண்டும்

## தபால் அதிபர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.மாவட்டத்தின் அஞ்சல் துறையின் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அதில் ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல் , கணினி சார் உபகரணங்களை வழங்குதல் என்பன மிகப் பிரதானமானவையாக உள்ளன. எனவே இவற்றை நிவர்த்தி செய்வதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் பணியாற்றும் தபால் அதிபர்களுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று யாழ்.பிரதான தபாலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே தபால் அதிபர்களால் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதபர் வி.குமரகுரு தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சின் செயலாளர் அசோக ஜெயசேகர தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் அஞ்சல் துறைக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கென அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் கவனத்துக்கு உங்கள் தேவைகளை சமர்ப்பிப்பேன். யாழ். மாவட்ட அஞ்சல் பயிற்சிக் கல்லூரிக்கு ஐந்து கணினிகளையும், அஞ்சல் நிலையத்துக்குக் குழாய்க் கிணறு அமைப்பதற்கும் உடனடியாக உதவ முடியும். விரைவில் ஆளணி வளங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். வட பகுதியின் அஞ்சல் துறைக்கெனப் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தவுள்ளோம் - என்றார்.

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்த அமைச்சின் செயலாளர், இன்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளார். அமைச்சின் செயலாளருடன் முன்னாள் செயலாளர் லீலானந்தாவும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

(த - 14)

# பளைப் பிரதேச மக்களின் அபிவிருத்திக் கூட்டம் இன்று

தென்மராட்சி, நவ.9

பளைப் பிரதேச மக்களின் மீளக்குடியமர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட அதிகாரிகள் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோப்பளை றோ.க.த.க. பாடசாலையில் நடைபெறும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெறும் இக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், கிளிநொச்சி அரச அதிபர், மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள், பளைப் பிரதேச செயலர், பிரதேச படை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொள்வர். இந்தக் கூட்டத்தில் மீள்குடியமர்ந்த, மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகள் பற்றி ஆராயப்பட உள்ளன.

இக்கூட்டத்தில் பிரதேச பொது அமைப்புகள் தமது தேவைகளை எழுத்து மூலம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் கையளிக்கலாம் என பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்கள் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார்.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் மக்களின் நலன்கருதி பளையில் இருந்து புலோப்பளைக்கு விசேட பஸ் ஒழுங்குகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# பொன்சேகாவை விடுவிக்கக் கோரி முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 09

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரி நேற்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கொழும்பு, லிப்டன் சுற்றுவட்டாரத்துக்கு முன்பாக யுத்தத்தில் அங்கவீனமுற்ற முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் பிற்பகல் 3.30 மணியளவில்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாத்தளை நகரில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ரஞ்சித் அலுவிகார ஆகியோரின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மேலும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கு மாறும், சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறும் கோரி ஹட்டனிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

(உ-சி)

ஓயாத குரல்கள்...



வேண்டும் விடுதலை: சிறையில் அடைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விடுவிக்கக்கோரி ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து நேற்று திருகோணமலையிலும் ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

## மேர்வினின் புது விளக்கம்

கொழும்பு, நவ.09

'சமுர்த்தி முகவரை மரத்தில் கட்டியதால்தான் டெங்கு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு டெங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.'

-இப்படி பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இணையத்தளமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'டெங்கு நோயை ஒழிப்பதற்கும், அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சட்ட விரோதமல்ல.

பண்டைக்கால அரசர்கள் வழங்கிய தண்டனைகள் இன்னமும் சில நாடுகளில் நடைமுறையிலுள்ளன. பண்டைக் காலத்தில் கிராமத் தலைவர்கள் குற்றமிழைத்தவர்களுக்கு மரத்தில் கட்டிவைத்துத் தண்டனை வழங்கியுள்ளனர் ' எனவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## ரூ. 8,000 கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.09

அரச ஊழியர்களுக்கு 8,000 ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் இன்று மருதானை ரயில்வே தலைமையகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது.

இதேவேளை, இரத்மலானை ரயில்வே வேலைத்தளம், தெமட்டகொட வேலைத்தளம் ஆகிய இடங்களிலும் நண்பகல் 12.00 மணி முதல் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும்.

நாடு முழுவதுமுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கு முன்னால் எதிர் வரும் 16ஆம் திகதிவரை மதிய போசன இடைவேளையின் போது ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

# பல்கலைக்கழக மாணவர்கள் 21 பேரும் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, நவ.09

உயர் கல்வி அமைச்சின் கட்டடத்துக்குள் பலவந்தமாக நுழைந்து அங்கு அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 21 பேரையும் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதித்தது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இம் மாணவர்கள் தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் செயற்பாடுகள் எதிலும் ஈடுபட வேண்டாம் எனவும் கல்வியைத் தொடருமாறும் இம் மாணவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர அறிவுரை வழங்கினார்.

இதேவேளை, குறித்த மாணவர்களுக்கு பிணை வழங்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் முன்னர் மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து குறித்த மாணவர்கள் சார்பில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜ ரான சட்டத்தரணி பிணை மனுவை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு கடந்த 3ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் அறிக்கை தேவையென அரச சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

அதனால் மனு பரிசீலனையை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்குமாறு அரச சட்டத்தரணி கேட்டுக் கொண்டதையடுத்து பிணை மனுபரிசீலனையை நேற்று வரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர ஒத்திவைத்திருந்தார்.

இந்நிலையில், பிணை கோரிக்கை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது குறித்த மாணவர்கள் 21 பேரையும் சரீரப் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர அனுமதியளித்தார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் கடந்த மாதம் 29ஆம் திகதி கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரட்ண எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஜனவரியில் யாழ்ப்பாணத்தில்

## வடபகுதி உற்பத்தியாளர் பதிவு செய்க

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணத்தில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2011 அடுத்த வருடம் ஜனவரி மாதம் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் மிகவும் பிரமாண்டமான முறையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் கைத்தொழில் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி என்திரி.ச.யோகராசசிங்கம் தெரிவித்தார்.

இதனை யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்நாட்டு, வெளிநாட்டு உற்பத்தி சேவை வழங்குநர்களுடன், வடமாகாண உற்பத்தி சேவை வழங்குநர்களும் இணைந்து தமது உற்பத்தி மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்துவதற்கு ஏதுவாக 200 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

தற்போதைய சமாதான சூழலில் கைத்தொழில் முயற்சியாளர்கள் அதிநவீன தொழில் நுட்பங்களுடனான தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இது பெரிதும் உதவும். அத்துடன் தர முகாமைத்துவத்துடனான சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்தல், புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல் என்பவற்றுக்கு மிகச் சிறந்த வாய்ப்பாக இந்தக் கண்காட்சி அமையவுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2011 இல் பங்கேற்பதற்கு ஆர்வமாகவுள்ள வடபகுதி உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஆனைப்பந்தியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு காட்சிக் கூடங்களுக்கான பதிவை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(த-14)

# வவுனியா நலன்புரி முகாம்களில் பளைப் பிரதேச மாணவர்கள்

## பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை

தென்மராட்சி, நவ.9

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பளைப் பிரதேச மாணவர்கள் இன்னமும் சொந்த இடங்களுகளில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாததால் பரீட்சைக்குத் தோற்றுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வேளையில் நலன்புரி நிலைய மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்த் தும் பணிகள் நடைபெற்று வந்ததால் சொந்தப் பாடசாலைகள் மூலம் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து பளைப்பிரதேச மாணவர்கள் பளைப்பாடசாலையொன்றுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

பளைப்பிரதேசத்தின் சில பகுதிகள் மக்கள் இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் மாணவர்கள் நலன்புரி நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதால் பரீட்சைக்கு தோற்ற முடியுமா என சந்தேகம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# யாழ். பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாநாடு 15 ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும் வருடாந்த ஆய்வு மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த கல்வி மான்களும், ஆராய்ச்சியாளர்களும் தமது ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்த மாநாடு துறைசார்ந்த ரீதியில் 5 அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களில் இருந்து 139 ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்தியாவில் இருந்து 10 அறிஞர்கள் கலந்துகொண்டு தமது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

வெளிமாவட்டங்களிலும் இந்தியாவிலும் இருந்து பங்குபற்றும் ஆய்வு அறிஞர்களுக்கான தங்குமிடவசதி உட்பட வசதிகளை யாழ்.பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

மாநாட்டை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து ஆய்வுரைகளை முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன், சென்னை சாய்ராம் இன்ஸ்ரிரியூட் வியாபார முகாமைத்துவ இயக்குநர் பேராசிரியர் கே.மாறன் ஆகியோர் வழங்குவர். தொடர்ந்து மாலை 6 மணிவரை ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி அஞ்சல்துறை அபிவிருத்திக்கு முதன்மைப்படுத்திய பல திட்டங்கள்

## அமைச்சு முன்னெடுக்கும் என்கிறார் செயலாளர்

யாழ்ப்பாணம், நவ. 9



வடபகுதியின் அஞ்சல் துறை அபிவிருத்திக்கு என முதன்மைப் படுத்திய பல செயற்திட்டங்களை அமுல் படுத்த அமைச்சு தயாராக உள்ளதாகத் தபால் தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயசேகர தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சின் செயலாளர், யாழ். பிரதம தபால் திணைக்களத்தில் வட பகுதி அஞ்சல் துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இந்த வருடத்துக்கென வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டம் மூலம் வடபகுதியில் அஞ்சல் துறை அபிவிருத்திக்கு 55.5 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதில் கட்டடப் புனரமைப்புக்கு 36 மில்லியன் ரூபாவும், உபகரணங்களுக்கு 4.5 மில்லியன் ரூபாவும், வாகனக் கொள்வனவுக்கு 15 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிமூலம் வடபகுதியில் 80 வீதமான கட்டடப் புனரமைப்புப் பணிகளும், 70 வீதமான உபகரணங்கள் வழங்கலும் இடம் பெறவுள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள அஞ்சல் அத்தியட்சகர்களுக்கு 'பிக்கப்' ரக வாகனம் இரண்டும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பல திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளோம். அதற்கான தயார்ப்படுத்தல்கள் தற்போது இடம் பெற்று வருகின்றன. தபால் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக இரவு நேரத் தபால் பஸ் சேவையை யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் விரைவில் மேற்கொள்ளவுள்ளோம். இவ்வாறு இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அத்துடன் நாட்டிலுள்ள தபாலகங்களை அஞ்சல் திணைக்களத் தகவல் தொடர்பாடல் வலைப் பின்னலில் இணைப்பதே எமது நோக்கமாகும். மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் பிரகாரம் கிராமங்கள்தோறும் தகவல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அந்தத் தகவல் நிலையங்களாக கிராமங்கள்தோறுமுள்ள உப அஞ்சல்நிலையங்களே செயற்படவுள்ளன.

நாட்டில் 746 தபால் நிலையங்களும், 3,410 உப தபால் நிலையங்களும் உள்ளன. அவை அனைத்தும் ஜனவரி மாதம் தொடக்கம் தகவல் தொடர்பாடல் வலைப் பின்னல் அமைப்பில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.

வடபகுதியின் அஞ்சல் துறைக்கெனப் பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கிளி நொச்சி மாவட்டத்தின் அஞ்சல் துறைக்கென 93 மில்லியன் ரூபாவும், மாங்குளத்துக்கென 62 மில்லியன் ரூபாவும், ஒட்டுசுட்டான் தபாலகத்துக்கென 17 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு பிரதம தபாலகத்துக்கென 79 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கென 17 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கெனப் பொருளாதார அமைச்சே நிதி ஒதுக்கியிருந்தது.

அக்கராயன்குளம், வட்டக்கச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலுள்ள தபாலகங்கள் புனரமைக்கப்பட்டு அவை மக்களுக்குச் சேவை வழங்கிவருகின்றன.

யோகபுரம், தாழையடி, நட்டாங்கண்டல், அடம்பன் ஆகிய இடங்களிலுள்ள தபாலகங்களுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடபகுதியில் கண்ணி வெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் அனைத்திலும் அஞ்சல் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் புதிய தபாலகங்களை அமைப்பதற்கு பொருளாதார அமைச்சிடமிருந்து நிதியை எதிர்பார்த்திருக்கிறோம்.

யாழ். பிரதம தபாலகத்தில் தற்போது 7 தபால் வாகனங்கள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தபால் சேவையை மேற்கொண்டு வருகின்றன.

யாழ். பிரதம தபாலகத்தின் மூலம் அர்ப்பணிப்பான சேவை மக்களுக்குக் கிடைப்பதனை அவதானிக்க முடிந்தது. தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சின் பணிப்பின் பேரிலேயே இங்கு நாம் வந்துள்ளோம். யாழ். மாவட்டத்திலுள்ள பணியாளர்களின் அடிப் படைத் தேவைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அஞ்சல் துறையின் குறைபாடுகள் தொடர்பாகப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு எமக்குத் தெரியப் படுத்த வேண்டும் - என்றார். (த-14-26)

### அதிபர்களுக்கான செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 9

தீவக வலயக்கல்வி அலுவலகத்தால் அதிபர்களுக்கான ஐ.சி.ரி செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை வேலணை கணினிவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு நாளை புதன்கிழமை தீவக வலயத்தில் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-10)

* * *

யாழ்ப்பாணம், நவ. 9

வலிகாமம் கல்விவலய அதிபர்களுக்கான நிலையறி பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் ஏற்கனவே இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)


### பாடசாலைகள் அபிவிருத்தி; நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 9

வடமாகாணக் கல்வி அமைச்சினால் 1,000 பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகளைப் பங்குபற்றி பங்களிப்பு வழங்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சர் கேட்டுள்ளதாக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ-10)

# யாழ். பிரதம தபாலகத்தில் 'வெஸ்ரேர்ன் யூனியன்' சேவை




யாழ்ப்பாணப் பிரதம தபாலகத்தில் மேலும் ஒரு சேவையாக வெஸ்ரேர்ன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. தபால் மற்றும் தொலைத் தொடர்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் அசோக ஜெயசேகர இதனை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைத்தார். இந்தச் சேவையானது வடபகுதியின் தபால்துறையில் முதன் முறையாக யாழ். பிரதம தபாலகத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்சாரப் பட்டியல் பணம் செலுத்தும் சேவை, வங்கியில் பண வைப்புச் சேவை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை யாழ். பிரதம தபாலகம் மக்களுக்கு வழங்கி வருகிறது. மேலும் சுங்கத்திணைக்களத்தின் சேவைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 03ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. அதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெறும் பொதிகளை யாழ். மாவட்டத்தில் விரைவாகப் பெறக் கூடியதாக இருக்கும். (த-14)

# ஊழியர் நம்பிக்கை நிதிய அலுவலகம் முதற் தடவையாக யாழ்ப்பாணத்தில்

## இன்று வைபவ ரீதியாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.9

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இதுவரை 200 பேர் மட்டுமே இணைந்துள்ளனர். யாழ். பிராந்தியத்தில் இந்த நிதியத்துக்கு ஒரு அலுவலகம் இன்மையே இதற்குக் காரணம். இதனாலே இந்த அலுவலகம் இன்று முதல் தடவையாக யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் திறந்து வைக்கப்படுகிறது என்று ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வடமாகாண பொது முகாமையாளர் ஏ.கே. எம்.எஸ்.ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் "ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை" 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் தொழில் அமைச்சின் கீழ் இயங்கிவந்த இந்த நம்பிக்கை நிதியம் 1997 ஆம் ஆண்டு முதல் நிதியமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்யும் பணியாளர் ஒருவருக்கு அவரது சம்பளத்தில் 3 வீதமான தொகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டும்.

அரச ஓய்வூதியம் பெறாத அரசகூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இதற்கான உறுப்புரிமைப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

குருநாகல், மாத்தறை, களுத்துறை, ஹற்றன், பதுளை, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய இடங்களில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அலுவலகங்கள் இயங்கி வந்தபோதும் யாழ்ப்பாணத்தில் இப்போதே முதற் தடவையாக இது ஆரம்பிக்கப் படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஊழியர்களின் நலன்கருதி இந்த அலுவலகம் இன்று 9 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இன்று முற்பகல் 9 மணியளவில் எமது அலுவலகத்தை பாரம்பரிய மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்- என்றார். (த-9)

# போதைப் பொருள் ஒழிப்பில் 20 நாள்களில் 11,000 பேர் கைது

கொழும்பு,நவ.9

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் 20 நாள்களில் 11,139 பேரைக் கைது செய்துள்ளனரெனப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியா அறிவித்துள்ளார்.

இதில் பெரும்பாலான கைதுகள் மேல் மாகாணத்திலேயே இடம் பெற்றுள்ளதெனவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டிய அரசாங்கம் தற்போது போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதெனக் கூறிய அவர், இந்த நடவடிக்கையின்போது பொலிஸார் யாருக்கும் எதுவித கருணையும் காட்டமாட்டார்கள் என்றார்.

# மீட்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை 30,000 கண்ணிவெடிகள் அகற்றல்

## இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ.9

இலங்கை இராணுவத்தினால் மீட்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இதுவரை 305,376 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெத வல கூறியுள்ளார். குறிப்பாக வடமாகாணத்தில் 1861 கிலோ மீற்றர் பரப்பளவில் இக்கண்ணி வெடிகள் அகற்றப் பட்டுள்ளன என்றார் அவர்.

கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் அரசசார்பற்ற நிறுவனங் கள் சிலவற்றுடன் 1000 இராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். கண்ணிவெடிகள் பெருமளவில் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதெனக் குறிப்பிட்டுள்ள அவர், 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின் இறுதிப் போர் இங்குதான் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும் - என்றார்.

கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முற்றாக முடிவுற்றதன் பின்னர் செட்டிகுளம் மெனிக் பாம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 24,000 இடம் பெயர்ந்த முல்லைத்தீவு மக்க ளில் எஞ்சியுள்ள 20,000 பேர் மீளக்குடியமர்த்தப்படுவரென அரசு கூறியுள்ளது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் அணுகாது தடுப்போம்

**இன்று நம்மில் பெரும்பாலானோர் நீரிழிவு நோயால் பீடிக்கப் பட்டுள்ளனர். இந்நோயை அணுகவிடாது தடுப்பது பற்றிய குறிப்புகள் அடங்கிய இக்கட்டுரை சர்வதேச நீரிழிவு தினத்தையொட்டி இங்கு பிரசுரமாகிறது.**



நீரிழிவு (Diabetes) உலகளாவியரீதியில் அதிகளவு மக்களைப் பாதித்துள்ள ஒரு நோயாகும். இது வயது வித்தியாசமின்றி எல்லோரையும் பாதிக்கக் கூடியது. எனவே இந்நோய்பற்றிச் சகலரும் அறிந்திருக்கவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் நீரிழிவை ஆரம்ப நிலையில் கண்டறிவதற்கும், தடுப்பதற்குமான அறிவை பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

உடலில் சுரக்கப்படும் இன்சுலினின் அளவு குறைவதினாலோ அல்லது இன்சுலினின் செயற்பாட்டில் தடை (Insulin resistance) ஏற்படுவதினாலோதான் நீரிழிவு உண்டாகின்றது.

**வகை I நீரிழிவு நோய் (Type I Diabetes)**

இது பொதுவாக இளம் பருவத்தினரிடையே ஏற்படுகின்றது. (Insulin depentent diabetes mellitus). இங்கு இன்சுலின் தேவையான அளவில் சதையச் சுரப்பியினால் சுரக்கப்படுவதில்லை. எனவே இதன்போது நோய்அறிகுறிகள் திடீரெனவும் பாரதூரமானதாகவும் வெளிப்பட வாய்ப்புண்டு.

**வகை II நீரிழிவு நோய் (Type II Diabetes)**

இவ்வகை பெரும்பாலும் வயது வந்தவர்களிடமும் மற்றும் உடற்பருமன் உள்ளவர்களிடமும் ஏற்படுகின்றது. (Non Insulin dependent diabetes mellitus) இங்கு சதையச் சுரப்பியினால் இன்சுலின் சுரக்கப்படுகின்ற போதிலும் அது சாதாரணமாகத் தொழிற்பட மாட்டாது. இந்த வகை நோயின் அறிகுறிகள் திடீரென வெளிப்படமாட்டாது. படிப்படியாகவே அதிகரித்துச் செல்லும்.

**நீரிழிவு நோயின் பொதுவான அறிகுறிகள்**

- சிறுநீர் அதிகளவு வெளியேறுதல்
- அதிகரித்த தாகம்
- அதிக களைப்பு, சோர்வு
- நிறைக் குறைவு
- அதிக பசி

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் பொதுவானவையாக உள்ள போதும், அறிகுறிகள் எதுவும் அற்றவர்களாகவோ, ஒன்றோ அல்லது சில அறிகுறிகள் உள்ளவர்களாகவோ கூட இந் நீரிழிவு நோயாளிகள் இருக்கலாம்.

**நீரிழிவு நோயை ஆரம்ப நிலையில் கண்டறிதல்**

ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளதா, இல்லையா என்பதைக் குருதிப் பரிசோதனை மூலம் கண்டறியலாம். அவையாவன-

1. 10 மணித்தியாலங்கள் பட்டினிக்குப் பின்னான குருதியில் குளுக்கோஸின் அளவு (fasting blood sugar)
2. உணவு உண்ட பின் 2 மணித்தியாலத்தின் பின்னர் குருதியில் குளுக்கோஸின் அளவு

குருதியின் குளுக்கோஸின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். கட்டுப்பாட்டில் இல்லாத போது கண், இதயம், சிறுநீரகங்கள், மூளை, நரம்பு மண்டலம் போன்றவற்றில் பாதிப்புகள் ஏற்படும்

**நீரிழிவு நோயுள்ளவர்கள் கீழ் வருவனவற்றைக் கடைப் பிடிக்க வேண்டும்.**

- உணவுக்கட்டுப்பாட்டுடன் இருத்தல்
- உடற்பயிற்சியும் யோகாசனமும்
- கிரமமான முறையில் மருந்துகளைப் பாவித்தல்
- வைத்திய ஆலோசனையைப் பெறுதல்
- பாதங்களை முறையாகப் பராமரித்தல்

உலக நீரிழிவு தினத்தையொட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் அனுசரணையுடன் பல்வேறுபட்ட பிரதேசங்களில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் அதன் முடிவில் நீரிழிவு தொடர்பான கருத்தரங்கும் நடத்தப்பட உள்ளன.

பிரதேச செயலக பிரிவுகளின் ரீதியாக நடை பெற இருக்கும் இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற முதலாம், இரண்டாம், மூன்றாம் வெற்றியாளர்களுக்குப் பரிசில்களும், பங்குபற்றி போட்டியை பூரணப்படுத்திய அனைவருக்கும் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன. இப் போட்டிகளில் 15 வயதுக்கு மேற்பட்ட எவரும் பங்குபற்றலாம். போட்டிக்கான தூரம் 15 கிலோ மீற்றர் ஆகும். போட்டிகளில் பங்குபற்ற விரும்பியோர் கீழ்வரும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இடங்களில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் சைக்கிள் ஓட்டப்போட்டிக்கான பாதையையும் அறிந்துகொள்ள முடியும்.

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆண்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும்-

நல்லூர்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெண்கள் கொக்குவில் மேற்கு வள்ளுவர் சனசமூக நிலையம், கந்தர் மடம் ஜனசக்தி சனசமூக நிலையம், கலைமகள் சனசமூக நிலையம், காமாட்சி சனசமூக நிலையம் ஆகியவற்றிலும்-

நல்லூர்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆண்கள் தத்தம் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகங்களிலும்- கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆண்கள்-புத்தூர் சூர்யா பார்மஸி-, அச்சுவேலி சூர்யா பார்மஸி-, புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையம்-, நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையம்-, நீர்வேலி வடக்கு மக்கள் வைத்தியசாலையிலும்-

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட போட்டியாளர்கள், வியாபாரிமூலை கே. ரி. ஆர். பூம்புகார் ஸ்டோர்ஸ்-, கற்கோவளம் சனசமூக நிலையத்திலும்-

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்கள், அளவெட்டி கஜமுகன் பல்பொருள் வாணிபம்-, அளவெட்டி மகாஜன சபையிலும்-

சண்டிலிப்பாய்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்கள், ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபம், ஆனைக்கோட்டை அஸ்ரன் கல்வி நிலையம், ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் கோவிலிலும்-

'வேலணைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்கள்- அல்லைப்பிட்டி பராசக்தி பாடசாலையிலும்

தமது பதிவுகளை மேற்கொண்டு சைக்கிளோட்டப் போட்டியில் பங்கேற்கலாம். சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்டவர்ளுக்கான போட்டிகள் அன்றையதினம் காலை சித்தன்கேணி சந்தியில் இருந்து ஆரம்பமாகும். இதேவேளை சகல இடங்களிலும் போட்டிகள் காலை 7 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இ. பரமேஸ்வரன்
வைத்திய அதிகாரி
நீரிழிவு சிகிச்சை நிலையம்
போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்.

## பொறுப்பேற்றார் பிரதீபன்

கோப்பாய், நவ.9

கோப்பாய் பிரதேச செயலராக ம.பிரதீபன் நேற்றுத் திங்கட் கிழமை முதல் பணிகளைப் பொறுப் பேற்றுள்ளார்.

இதேவேளை, இவர் யாழ். மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளராகவும் பணிபுரிவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்த சி.ஏ.மோகன்றாஸ் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக- அரச அதிபராக பணி மாற்றலாகி - சென்றதையடுத்தே அந்த வெற்றிடத்துக்கு ம.பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார். (த-72)

## புத்தகக் கண்காட்சி

'மறுபாதி' கவிதைக்கான காலாண்டிதழும், புத்தகக் கூடமும் இணைந்து நடத்தும் நூல்கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் புத்தகங் களைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

## போதை ஒழிப்பு......



சிறை எதிர்ப்பு: போதைப் பொருளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்னால் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது போதைப் பொருளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்தும் வகையில் கோஷங்கள் எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொத்மலை நீர்ச்சுரங்கத்தைப் பார்வையிடுவதற்கு காலநீடிப்பு

மலையகம், நவ. 9

மேல் கொத்மலையின் நீர் மின்சாரத் திட்டத்தின் பிரதான நீர்ச் சுரங்கத்தைப் பார்வையிட வழங்கப் பட்ட கால அவகாசம் கடந்த சனிக்கிழமை முடி வடைந்துள்ள போதிலும், பொதுமக்க ளின் கோரிக்கையை அடுத்து எதிர்வரும் 17முதல் 21ஆம் திகதி வரை சுரங்கத்தைப் பார்வையிட அனுமதியளிக் கப்பட்டுள்ளதென இத்திட்டத்தின் பணிப்பாளர் ஷவி பெர்னாண்டோ தெரிவித் துள்ளார். (எ)

**யாழ்ப்பாணம் மாநகரசபை**
**வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2010**
**காலநீடிப்பு**

யாழ். மாநகர சபையால் 27.10.2010 ஆம் திகதிய கேள்வி அறிவித்தலின் பந்தி 01 இல் கேள்விப்பத்திரங்கள் வழங்கும் கடைசித் திகதி 04.11.2010 ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை என அறிவிக்கப்பட்டிருந்தது. அத்திகதியை மேலும் 12.11.2010 ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.**

**வாடகைக்கு விடப்படும்**

அலுமினிய Body இல் மூன்று பக்க கதவுடைய கன்ரர் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் சதாசிவம் (சத்தியவான்)

**(முன்னைநாள் இயந்திரப் பொறியியலாளர், சீநோர், மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க உறுப்பினர்)**



சண்டிலிப்பாய், சீரணியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சதாசிவம் (சத்தியவான்) கடந்த (06.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - தவமணி தம்பதியரின் அன்பு மருகமனும் வாலமனோன்மணியின் அன்புக் கணவரும், சதானந்தி (தாதிய போதனாசிரியர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), சதானந்தன் (ஆசிரியர், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), சதாரூபி (பிரான்ஸ்), சதாரூபன் (தாதிய மாணவன், 3ஆம் வருடம் - 2007) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைத்திய கலாநிதி நந்தகுமார் (வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), சிவசுகந்தினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், வேலணை), கிருபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், ஜோதிலட்சுமி மற்றும் வீரலட்சுமி (இந்தியா), ஞானம்மா, பங்கையர்க்கரசி (கனடா), ஞானலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குகானந்தன் (லண்டன்), அருணகிரிநாதன் (சுவிஸ்), லோகாம்பிகை சிவானந்தன் (அவுஸ்திரேலியா), ஸ்ரீதேவி (ஜேர்மனி), ஜோன்ராஜன் (சுவிஸ்), உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் கனகராஜா புஸ்பராணி, திருமதி ஜீவரட்ணம் இராஜேஸ்வரி, சுப்பிரமணியம் கமலாதேவி (கனடா) ஆகியோரின் சம்பந்தியும் தரண்யா, கிசோபனா, சிவசுதன் (பிரான்ஸ்), கீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த(07.11.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி தெற்கு, கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'றங்கூன் இல்லம்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

(ரி-572747)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மலையகத் தமிழருக்கு இந்தியாவின் உதவி

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழ்ச் சமூகத்தின் நலனில் இந்தியா கரிசனையோடு செயற்பட்டு வருகிறது.பெருந்தோட்ட மக்களிடத்தில் இந்திய அரசு கூடுதல் கவனம் செலுத்துகிறது.இம் மக்களின் வீடமைப்பு, சுகாதாரம், கல்வி தொடர்பில் பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.அவர்களின் நலன் கருதி மேலும் சமூக நலத்திட்டங்களை வகுத்துச் செயற்பட உள்ளோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் அசோக் கே காந்த், தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி, பஸ் ஒன்றை அன்பளிப்புச் செய்த வைபவத்தில் உரை நிகழ்த்திய போதே இந்தியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அரசு மலையகத் தமிழ் மக்களுக்குச் செய்து வரும், இனிமேல் செய்யவுள்ள நலத் திட்டங்கள் குறித்தும் தூதுவர் காந்த் அந்த வைபவத்தில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மலையகத் தமிழ் மக்கள் மீது மேலும் அக்கறை காட்ட உள்ளதாக இந்தியத் தூதுவர் தொரிவித்திருப்பது ஒரு புதிய திருப்பம் எனக் கருதப்படக் கூடியது.

உண்மையாகச் சொல்லப்போனால் ,மலையக மக்கள் மிக நீண்ட காலமாக இரண்டாந்தரப் பிரசைக ளாக மட்டுமன்றி, வேண்டப்படாதவர்களாகவும் இலங்கை அரசுகளால் கணிக்கப்பட்டவர்கள்.அதன் விளைவே 1964ஆம் ஆண்டின் சிறீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம்.

அதற்கு முந்திய காலப்பகுதியில், மலையகத் தமிழர்களின் குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவு இடதுசாரிகளுக்கே என்று ஐக்கிய தேசியக் கட்சி அச்சமுற்றது.

அதனால் அந்தக் கட்சியின் ஆட்சிக் காலங்களின் போது, மலையகத் தமிழ் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஐ. தே. க. அரசாங்கங்கள் பெரிதாக, குறிப்பிடக்கூடியதாகச் சேவை செய்யவில்லை.

மலைகத் தமிழ் மக்களில் 6 லட்சத்து 25 ஆயிரம் பேர்களை இந்தியாவுக்கு அனுப்ப வகை செய்த சிறிமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னரும், எஞ்சிய 3 லட்சத்து 75 ஆயிரம் பேர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்ட போதிலும், அவர்களின் கல்வி, வாழ்வாதார, சமூக நலன்களில் மிகப் பிந்தியே இலங்கை அரசுகள் அக்கறை காட்டத் தொடங்கின.

மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளைச் சுருட்டும் நோக்கத்துடனேயே இலங்கைத் தேசிய அரசியல் கட்சிகளின் மலையகத் தமிழ் மக்களுக்குரிய நலத் திட்டங்கள்; அவை கருதிய செயற்பாடுகள் - சேவைகள் - அமைந்திருந்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்து தேர்தல்களில் போட்டியிட்டு ஆசனங்களைப் பெற்றுத் தனித்து நின்று செயற்படுமளவுக்கு மலையத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இப்போது ஓரளவுக்குப் பலம் அடைந்துள்ளது.

எனினும் -

அவையும் அவ்வப்போது பதவியிலுள்ள அரசுகளோடு சேர்ந்து இயங்கினால் மட்டுமே, மலையகத் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடிகிறது. அவர்களின் மேம்பாட்டுக்கு ஓரளவுக்கேனும் உதவ முடிகிறது.

மொத்தத்தில், மலையகத் தமிழ் அரசியல் தலைவர்களாலும் அப்பகுதி வாழ்மக்களுக்கு பெரிதாக உதவ முடியாத நிலையே இப்போதும் காணப்படுகிறது. மலையகத் தமிழர் பகுதிகளின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் பெரிதாகத் திருப்திப்படும் அளவுக்கு நிலைமை மாறவில்லை என்பதே இன்றைய யதார்த்தம்.

மலையகத் தமிழ்மக்களில் பெரும்பாலானோர் இன்னமும், 'லைன்' அறைகளையே (காம்பராக்களையே) தமது வீடுகளாகக் கொண்டிருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையானோர் தோட்டத் தொழிலாளர்களாகவே மாடாக உழைக்கிறார்கள். பெண்களில் பெரும்பான்மையினர் கொழுந்து எடுப்பவர்களாகவும் தேயிலை, றப்பர் தொழிற்சாலை வேலையாள்களாகவும் தொழில் செய்யும் நிலைமையே தொடர்கிறது.

இனக்கலவரங்களின் போது மிக மோசமாகப் பாதிக்கப்படும் மலையத் தமிழர்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக காடுகளிலும் பற்றைகளிலும் தங்கியிருக்க நேர்ந்தது, நேர்கிறது. வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் போன்று சொந்தப் பகுதிகள் - காணிகள் - அவர்களுக்கு இல்லை.

இந்திய அரசு மலையகத் தமிழர்கள் வாழ்வில், முன்னேற்றத்தில் இப்போதுள்ளதை விட அதிக அக்கறை எடுத்துப் பணியாற்ற வேண்டும். அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்கு பெரிய திட்டங்களை உருவாக்கி உதவவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தெற்கின் பிரதான அரசியல் கட்சிகளும் அவர்களுக்கு உதவப் போட்டிபோடும் நிலைமை உருவாகலாம்.

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் மாநாடு

## விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் மாவட்ட மாநாடும் நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவுக்குமான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக உலமா சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான தீர்மானம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கடந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இம்மாநாட்டுக்கான காலம், நேரம், இடம் என்பன விரைவில் அறியத்தரப்படும். இதற்கிடையில் இதுவரையில் ஜம்இய்யதுல் உலமா சபையின் அங்கத்துவத்தை பெற்றிராத யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உலமாக்கள் இருப்பின் அவர்கள்எவ்வித தாமதமுமின்றி அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 30.11.2010 ஆகும். அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கும் படிவங்களைப் புத்தளத்தில் யாழ்., கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் செயாளர், அஷ்ஷெய்க் ஏ.ரபிய்யுத் தீனிடமும் (கபூரி) யாழ்ப்பாணத்தில் உபதலைவர் அஷ்ஷெய்க் எம்.ஏ. பைசரிடமும் (மதனி)பெற்றுக் கொள்ள முடியும்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மாவட்டக் கிளைகளைத் தவிர வேறு எந்த ஒரு அமைப்புகளும் மாவட்டத்தில் "உலமா" என்ற சொற்பிரயோகத்தை பாவிப்பதனால் அவர்கள் ஜம்இய்யதுல் உலமாவினால் அங்கீகரிக்கப்பட்டவர்களாக கருதப்படமாட்டார்கள் என்றும், இவ்வாறானவர்களினால் வெளியிடப்படும் அறிக்கைகள், கோரிக்கைகள் பத்வாக்கள் போன்றவற்றிற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் யாழ்., கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா கிளை பொறுப்புக் கூறமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-16)

# 'சோ ஆ' வாழ்வாதார உதவி

கொழும்புத்துறை,நவ.9

கொழும்புத்துறை மணியந் தோட்டத்தில் குடியமர்ந்த மக்களுக்கு 'சோ ஆ' நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக 29 அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கையளிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இந்த வாழ்வாதார தொழில்முயற்சிக்கான உதவிகள் வழங்கப்பட்டதாக 'சோஆ' நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார். மீனவர்களுக்கான மீன்பிடி வலைகள், பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், தும்புக் கைத்தொழில் இயந்திரங்கள் மற்றும் வியாபாரத்திற்கான உதவிகள் என்பன வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த கட்டமாக மேலும் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு இவ்வாறான உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

(த-135)

# அரச ஊழியர் விவரம் திரட்டல்

குருநகர்,நவ.9

தற்போது சேவையில் உள்ள மத்திய,மாகாண அரச ஊழியர்களின் விவரங்கள் கிராம சேவையாளர் பிரிவுகள் ரீதியாக அரசினால் திரட்டப்படுகின்றன.

அரச ஊழியர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராம சேவையாளர்கள் குறிப்பிட்ட அரச ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்று சேகரிக்கிறார்கள். இந்த விவரங்களில் அரச ஊழியர்களின் பெயர், மத்திய, மாகாண அரச ஊழியர் என்ற விவரம், பதவி, வருடாந்த சம்பளம் மற்றும் அவர் பெறும் படிகள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

(த-51-68)

# திருமறைத் தேர்வில் 14,257 மாணவர்கள்

குருநகர்,நவ.9

யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தால் கத்தோலிக்க மாணவர்களிடையே நடத்தப்பட்ட கத்தோலிக்க திருமறைத் தேர்வில் சுமார் 14 ஆயிரத்து 257 மாண வர்கள் தோற்றியுள்ளார்கள் என யாழ்.மறைக்கல்வி நடுநிலையம் தெரிவித்தது.

இப்பரீட்சை கடந்த ஒக்ரோபர் 2ஆம் திகதி யாழ்., இளவாலை, பருத்தித்துறை, கிளி - முல்லை மறைக்கோட்டங்களில் உள்ள அரச பாடசாலைகளில் நடத்தப்பட்டன. இம்மறைக் கல்வித் தேர்வுகள் தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் கத்தோலிக்க மாணவர்களுக்காக நடத்தப்பட்டது எனவும் விடைத்தாள்களைத் திருத்தும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் யாழ். மறைக் கல்வி நடுநிலையம் மேலும் தெரிவித்தது.

(த-51)

# வடமாகாண சுகாதார அலுவலகங்களில் தேசிய மரநடுகைத் தினம் 15ஆம் திகதி

யாழ்ப்பாணம்,நவ.9

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள்,சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ,சிகிச்சை நிலையங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட் கிழமை தேசிய மர நடுகை தினமாக நடைமுறைப் படுத்துமாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செய லாளர் எஸ்.இரவீந்திரன் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.17 மணிக்கு இம் மரநடுகைத் தினத்தை தவறாது ஒழுங்குபடுத்த வேண்டும்.

இந்த மர நடுகைத் திட்டத்தில் குறைந்தது ஐம்பது பயன் தரும் மரங்களையாவது கட்டாயம் நடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்,கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சுகாதார அலுவலகங்கள், வைத்திய சாலைகள், வைத்திய அதிகாரி பணிமனைகள் மற்றும் கிராமிய சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-301)

# கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணத்தில் மீண்டும் தொலைக்கல்வி நிலையங்கள்

அச்சுவேலி,நவ.9

ஆசிரியர் உதவியாளர்களுக்கான தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி மீண்டும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கண்டி,கொழும்பு, யாழ்ப்பாணம் மூன்று இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் செயற்பாடுகள் மீண்டும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆசிரிய உதவியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு இந்த வருட ஆரம்பம் முதல் பயிற்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்டமாகக் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட மூன்று நிலையங்களின் செயற்பாடுகளே இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த மூன்று நிலையங்களின் செயற்பாட்டிற்கு பொருத்தமான அளவு நிதி. ஒதுக்கீடு இல்லாத நிலையில் இடைநிறுத்தப்பட்டதாகவும் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் பயிற்சி நெறிக்கான நிதி ஒடுக்கீடு செய்யப்பட விருப்பதால் பயிற்சிநெறி மீண்டும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப்பிரிவு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-11)

## நாளை

ஐப்பசி 24 10.11.2010
புதன்கிழமை
திதி: : மூலம்
பி.ப.12.09 வரை
நட்சத்திரம் : சதுர்த்தி
[illegible] 08.25 வரை
சுபநேரம் : 04.35-06.05 வரை
ராகுகாலம் : 12.05-01.35 வரை

## சஷ்டியின் கருவே கந்தா!

பக்தருளம் குடிகொண்டவனே நீ வாவா முருகா
பாங்காய் வள்ளி தேவயானியுடனே நீ வாவா முருகா
மாவை மண்ணில் கோயில் கொண்டாய் நீ வாவா முருகா
இணுவையிலே இன்புற்றவனே நீ வாவா முருகா
நல்லூரின் நாயகனே நீ வாவா முருகா
நீர்வையிலே நீக்கமுற நின்றவனே நீ வாவா முருகா

ஆற்றங்கரையானாய் சந்நிதியில் நீ வாவா முருகா
உகந்தையிலே ஊன்றினாய் வேலை நீ வாவா முருகா
அகந்தை அடக்கிடவே அப்பா நீ வாவா முருகா

குன்றுதோறும் குடிகொண்டவனே நீ வாவா முருகா
கதிர்காம குன்றிலேறியவனே நீ வாவா முருகா
கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவனே நீ வாவா முருகா



தெல்லியூர்த் தேவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## 2011 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2011.01.01 தொடக்கம் 2011.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ இல. | சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 25000.00 | 8695500.00 | - |
| 2. | உடுவில் கீரிச்சந்தை | 1000.00 | 10000.00 | 118000.00 | - |
| 3. | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10000.00 | 440000.00 | 250.00 |
| 4. | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10000.00 | 94000.00 | 250.00 |
| 5. | கருவாட்டுக்கடை இல. 3 | 750.00 | 7500.00 | 39000.00 | 250.00 |
| 6. | கருவாட்டுக்கடை இல. 4 | 750.00 | 7500.00 | 39000.00 | 250.00 |
| 7. | கருவாட்டுக்கடை இல. 5 | 750.00 | 7500.00 | 39000.00 | 250.00 |
| 8. | கோழிக்கடை இல. 6 | 750.00 | 7500.00 | 60500.00 | 250.00 |
| 9. | கோழிக்கடை இல. 7 | 750.00 | 7500.00 | 50000.00 | 250.00 |
| 10. | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 48000.00 | 250.00 |
| 11. | பொது மலசலகூடம் (சுன்னாகம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமை) | 750.00 | 7500.00 | 25000.00 | - |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. | மருதனார் மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 25000.00 | 9999000.00 | - |
| 2. | இணுவில் பொதுச் சந்தை | 500.00 | 5000.00 | 28750.00 | - |
| 3. | மல்லம் மாட்டிறைச்சிக் கடை (கோத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 75000.00 | - |
| 4. | இணுவில் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கோத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 55000.00 | 250.00 |
| 5. | மல்வம் சந்தை | 500.00 | 5000.00 | 53500.00 | - |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 50000.00 | - |

01) கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 18.11.2010 பி.ப. 2.00 மணிவரை

02) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 19.11.2010 நண்பகல் 12.00 மணிவரை

03) கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் : 19.11.2010 பி.ப. 2.00 மணிக்கு

04) கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படவேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் எனமுகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

05) கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் முக்கியமாகத் தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

06) உள்ளூராட்சி மன்றங்களினால் ''தவறுனராக'' கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

07) கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு 12 வீத பெறுமதி சேர் வரியும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்.

08) தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக்கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2010.11.26ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களை சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக்கடைக்களுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத்தொகையை 2010.11.26ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும்.

09) சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள், உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருள்களின் விற்பனை விலையில் 4 வீதத்துக்கு மேல் வரி அறவிடக்கூடாது.

10) இறைச்சிக்காக கன்று ஈனக்கூடிய பசுக்களையோ மறி ஆடுகளையோ அறுப்பது தடை செய்யப்படும். எனினும்கன்று ஈன முடியாத பிரயோசனமற்றதென மிருக வைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு, ஆடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.

11) பொது மலசலகூடம் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக்கூடாது.

12) கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

13) ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர்களின் சம்மதக்கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.

14) ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

15) கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

16) கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி. சு. முருகநேசன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி/572742)


ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 175 | சீட்டிழுப்புத் திகதி 07.11.2010

வெற்றி இலக்கங்கள்: 02 05 12 28 | சுப்பர் இலக்கம்: 12

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. Rs. 7,977,320/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 1 இலக்கத்துக்கும் | 85859 | ரூ. 20/= | ரூ. 17,17,180/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 1 இலக்கத்துக்கும் | 7783 | ரூ. 40/= | ரூ. 3,11,320/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 6604 | ரூ. 100/= | ரூ. 6,60,400/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 624 | ரூ. 200/= | ரூ. 1,24,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 150 | ரூ. 1,500/= | ரூ. 2,25,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 12 | ரூ. 3,000/= | ரூ. 36,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 10,00,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 7,977,320/= | |
| மொத்த எண்ணிக்கை | 101033 | | ரூ. 4,074,700/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 8,237,960/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


# யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் -2011

மேற்படி விடயம் தொடர்பாக 2010.10.29 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் ஏற்பட்டிருந்த த்வறுகளின் திருத்தம் வருமாறு:

எமது சபையினால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக்கடைகளில் குருநகர் மாட்டிறச்சிக் கடைகளுக்கு பிணைப்பணமாக ரூபா 7,000 மும், ஏனைய இறைச்சிக் கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கு பிணைப்பணமாக ரூபா 5,000மும் அறவிடப்படும் என்பதனையும் பண்ணை 07 ஆம் இலக்க கடையை கோழிக்கடையாகவும் திருத்தி வாசிக்கவும்.

சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகரசபைக்கு உரியது.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
யாழ்.மாநகரசபை முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

03.11.2010

(சி-572743)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## சோமசுந்தரம் சின்னப்பிள்ளை



பிறப்பு: 1944.02.15
இறப்பு: 2010.10.10

கடந்த 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(105725)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னராசா தவமணிதேவி



மாதகல், விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா தவமணிதேவி நேற்று (08.11.2010) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சின்னராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை- பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், நடராசா, கமலாதேவி, துரைராசசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாக்கியலட்சுமி, தவராசா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ரசி, கலா, பிரியா, குமரன், விஷ்ணவன், விஷ்ணவி ஆகியோரின் அத்தையும் காலஞ்சென்ற சந் தோஷ் மற்றும் வினோத், ரோகினி, விஷ்ணு, யுவராஜ் ஆகி யோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை ந.பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மாயனத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொட்டிலடி, சங்கானை.
T.P: 0212250027

(105727)

தகவல்:
வை.நடராசா (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளை எப்படிக் கையாள்வது? சமூகத்துக்கு விளக்கமளிக்கிறது இராணுவம்

## யாழ். செயலகத்தில் நாளை செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.9

அரசிடம் சரண் அடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களில் விடுதலையாவோர் சமூகத்தில் உள்வாங்கப்படு வதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக சிவில் சமூகத்தின ருக்கு விளக்கும் செயலமர்வை படைத்தரப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதலாவது செயலமர்வு கடந்த மாதம் 21 ஆம் திகதி வவுனியாவில் நடத்தப்பட்டது.

இரண்டாவது செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த கப்டன் கே.யூ.பி.த. சில்வா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனிதநேய நடவடிக்கையின் போது அரசிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட 11,696 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது. இவ்வாறு புனர்வாழ்வு பெற்ற 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சமூகத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இவர்கள் சமூகத்துக்குள் உள்வாங்கப்படும் போது, சிவில் சமூகம் கொண்டுள்ள கண்ணோட்டமும் எண்ணங்களும் அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு நேரடிப்பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இது குறித்து சிவில் சமூகத்தை அறிவுறுத்தி விடுதலையாவோர் பற்றி சிவில் சமூகத்துக்குள் நேர் எண்ணங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பாகப் பிக்குமார், ஏனைய மதகுருமார்கள், சமூகத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் உட்பட சமூகப் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் ஆகியோருக்கு பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகளை புனர்வாழ்வு ஆணையாளர் தலைமைச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதல்கட்ட செயலமர்வு சிவில் சமூகத்தின் முக்கியஸ்தர்களின் பங்குபற்றுதலுடன் வவுனியாவில் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது.

இரண்டாம் கட்ட அமர்வு நாளை புதன்கிழமை யாழ்.செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றுள்ளது (ஐ)

## வியாபார நிலையங்களை அமைப்பவர் கவனத்துக்கு

குருநகர், நவ.9

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக வியாபார நிலையங்களை அமைக்கவுள்ளவர்கள் அதற்கான முன் அனுமதியை பிரதேச சபையிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், அனுமதியின்றிப் புதிதாகத் தொடங்கப்படும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளில் சபை ஈடுபட்டுள்ளதாகவும் செயலாளர் கே.சாந்தசீலன் தெரிவித்தார். (த-7)




## படகு உரிமையாளர் விளக்கம்

நெடுந்தீவுக்கான பயணிகள் படகு சேவை குறிகட்டுவானில் இருந்து உரிய நேரத்தில் புறப்படவில்லை என்று கடந்த 20.10.2010 'உதயன்' பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது. கடற்படைச் சிப்பாய் ஒருவர் வர வேண்டி இருந்ததனால் படகு 45 நிமிடங்கள் காத்திருந்த பின்னர் அவர் வராமலேயே புறப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

இது தொடர்பில் படகின் உரிமையாளர் விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அன்றைய தினம் நெடுந்தீவில் நடைபெற்ற மரணச்சடங்கில் கலந்துகொள்ள மரண மானவரின் முக்கியமான உறவினர் ஒருவர் வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டதனால் அவரை ஏற்றிச் செல்வதற்காகவே படகுப் பய ணம் தாமதிக்கப்பட்டது என்று அந்த விளக் கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடற்படைச் சிப்பாய் எவருக்காகவும் படகு காத்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## சேவை தொடரட்டும்...




சமூகப்பணி: யாழ்.போதனா வைத்தியசாலையின் 9 ஆம் இலக்க விடுதி கொமர் ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தினூடாகப் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்த விடுதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ரவி டயஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சிறீபத்மநாதன் ரஜீவன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் பிரதம விருந்தினர் மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர்.

## தாக்கப்பட்ட நிலையில் மாணவன் போதனா வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், நவ.9

மாணவரொருவர் பாடசாலை வளாகத்திற்குள் வைத்துத் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் தரம் 4 இல் கல்விபயிலும் இரத்தினராசா வினுஜன் (வயது-9) என்ற மாணவனே இவ்வாறு தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

அராலி வள்ளயம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை மைதானத்தில் இரு மாணவர்கள் கடந்த புதன்கிழமை விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது குறித்த மாணவனின் கால் தவறுதலாக இன்னொரு மாணவரின் மீது பட்டுவிட்டது. இதனை அடுத்து வியாழக்கிழமை மற்றைய மாணவனின் தாயார் பாடசாலைக்குள் வைத்து குறித்த மாணவனைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாகப் பாடசாலை அதிபரின் கருத்துக் களைப் பெற உதயன் பல்வேறு தடவைகள் பலவழிகளில் முயன்ற போதும் நேற்று மதியம் வரை அதணைப்பெறமுடிய வில்லை. (எ-319)

## மழையினால் சிரமப்படும் வசந்தபுரம் பகுதி மக்கள்

கொழும்புத்துறை,நவ .9

கொழும்புத்துறை, வசந்தபுரம் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் தற்போது பெய்து வரும் மழையை அடுத்து அடிப்படை வசதிகளின்றி பெரிதும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தறப்பாள் மற்றும் ஓலைக்கொட்டிகள் அமைத்து தரைக்குசீமெந்து, திண்ணைகள் அற்று வசித்து வரும் குடும்பங்களின் வீடுகளுக்கு மழை நீர் புகுந்து உணவு சமைப்பதற்கு மிகவும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் குடியமர்ந்துள்ளதை அதிகாரிகள் வந்து பார்த்துச் செல்கிறார்களே தவிர எந்த உதவிகளும் இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. தற்காலிக மலசலகூட வசதிகள் தண்ணீர் வசதிகளை யாழ். மாநகர சபை வழங்கிவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மாநகர சபை பஸ்சேவையை ஞாயிறுகளிலும் நடத்துக

### வசந்தபுரம் மக்கள் கோரிக்கை

கொழும்புத்துறை, நவ.9

யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போக்குவரத்துச் சேவையை ஞாயிறு தினங்களிலும் ஈடுபடுத்துமாறு மணியந்தோட்டம் மற்றும் வசந்தபுரம் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதால் நகரப் பகுதி மற்றும் தேவைகளுக்கு வெளியிடங்களுக்குச் செல்வதற்கு ஞாயிறு தினங்களில் மிகவும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் வாய்ப்பின்றி இழப்புகளைச் சந்தித்து வறுமை நிலையில் வாழும் மக்கள் அவசர தேவைகளுக்கு வாடகை வாகனங்களுக்கு அதிக பணம் கொடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுவதால் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.மாநகர சபை போக்குவரத்துச்சேவையை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது மேற்கொள்ள வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

கிழமை நாள்களில் இச்சேவைகள் மணியந்தோட்டம் 8 ஆம் குறுக்குவரை நடைபெறு வது குறிப்பிடத்தக்கது. இச் சேவையால் தாம் பெரிதும் பயன டைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மணியந்தோட்டம் -பூநகரி படகுச் சேவை நேரங்களில் சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளைத் தவிர தனியார் சேவைகள் இப்பகுதிகளுக்கு நடைபெறுவதில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-135)

## யாழ். பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் மிக மோசமான நிலையில்

### கோட்டக் கல்விப் பணிப்பாளர் கவலை

குருநகர், நவ.9

யாழ். பாடசாலை மாணவர்களது ஒழுக்கம் மிக மோசமான நிலையில் உள்ளது என யாழ். சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையின் பரிசுத் தினத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் தெரிவித்தார்.

யாழ்.சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் 2008,2009 ஆம் ஆண்டுகளுக்களுக்கான வருடாந்த பரிசுத் தினம் அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். கல்விக் கோட்டப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மக்களின் இரண்டு கண்களாக கல்வியும் ஒழுக்கமும் உள்ளன. ஒழுக்கத்துடன் இணைந்த கல்விதான் எம்மைச் சிறந்த பிரஜைகளாக உருவாக்கும். நவீன தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் எமது மாணவர்கள் பல நுட்பங்களைப் பெற்றாலும் எமது மாணவர்களது ஒழுக்கம் சீர்குலைந்து செல்வதைப் பெற்றோர்கள் அறிய வேண்டும். மாணவர்கள் தமது ஒழுக்கத்தில் கவனமாக இருக்க வேண்டும். தமது மாணவச்செல்வங்களை ஒழுக்கநெறியில் தவறாமல் இருப்பதனைக் கண்காணிக்க வேண்டியது பெற்றோர்களது கடமையாகும்- என்றார். (த-51)

## திருநெல்வேலிச் சந்தைச் சூழலில் நடைபாதை வியாபாரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், நவ.9

திருநெல்வேலிச் சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் நடைபாதை வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதியோரத்தில் நடைபாதைக் கடைகளை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

பொதுச் சந்தைக்கு வரும் அனைத்து மக்களும் தமது வாகனங்களை வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதியோரங்களில் தமது வாகனங்களை நிறுத்தி வைப்பதால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாகவும், அதனால் வீதி விபத்துகளும் ஏற்படும் என்பதால் மக்களின் நலனைக்கருத்தில்கொண்டு வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்த்து அதற்கான தரிப்பிடங்களில் நிறுத்துமாறும் நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் மே.சாந்தசீலன் பொது மக்களைக் கேட்டுள்ளார். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொலிவூட் நடிகைகளை கவரும் கைப்பைகள்

இந்தியாவில் தயாரிக்கப்படும் அதிக விலையுள்ள தோல் கைப்பைகளை ஹொலிவூட் நட்சத்திரங்கள் விரும்பி வாங்கிப் பயன்படுத்துகிறார்கள்.

நவநாகரிக பெண்களும், ஹாலிவூட் நட்சத்திரங்களும் பயன்படுத்தும் கைப் பைகள் மிகக் கவர்ச்சிகரமானவை. அவை மிக விலையுயர்ந்தவையும் கூட.

இப்படிப்பட்ட விலையுயர்ந்த கைப் பைகளை விற்கும் மிகப் பெரிய நிறுவ னங்களான ஹெர்ம்ஸ், சானல் ஆகியன இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தோல் கைப் பைகளை வாங்கித் தங்களுடைய பெருமைக்குரிய விற்பனைக் காட்சி அரங்குகளில் வைக்கத் தொடங்கியுள் ளன.

'மேட் இன் இந்தியா' என்பது இன்று மிகவும் மதிப்பு வாய்ந்த தயாரிப்பாகி யுள்ளது என்று பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெறும் வெண்டாம் லக் சூரி கண்காட்சியில் பங்கேற்றுள்ள நாக ரிக அணிகலன்களுக்கான உபரிகளை வடிவமைத்துத் தரும் மீரா மஹாதேவி கூறியுள்ளார்.

ஹொலிவூட் நட்சத்திரங்களான ஜூலியா ராபர்ட்ஸ், சியன்னா மில்லர் ஆகியோர் இந்திய தயாரிப்பு கைப் பைகளையே வாங்கிப் பயன்படுத்துவதோடு அவற் றைத் தாங்கள் பங்கேற்கும் பொது நிகழ்ச் சிகளிலும் பெருமையுடன் கொண்டு வருகின்றனர் என்ற பிடிஐ செய்தியாளர் கிருபா கிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை நாடெங்கும் கொண்டு செல்கிறது PC ஹவுஸ்

PC ஹவுஸ் நாடெங்கிலும் தனது கிளை வலையமைப்புக்களை விஸ்தரித் துள்ளது. ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி, நெல்லியடி மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலே நான்கு புதிய கிளைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. ஹம் பாந்தோட்டை கிளையினை திறந்து வைக்கும் நிகழ்விலே பிரதம விருந்தி னராக நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ உரையாற்றுகையில், ''பல அரசாங்க அமைப்புக்கள் மற்றும் அவ்வாறே உள் ளூர் மற்றும் வெளிநாட்டு தனியார்துறை யினர் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே முதலீடுகளை மேற்கொண்டு வருகின் றனர். ஹம்பாந்தோட்டையிலுள்ள எமது சகோதர, சகோதரிகளுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைக் கிடைக்கச் செய்வதற்காக எம்முடன் கைகோத்துள்ளதையிட்டு நாம் PC ஹவுஸ் இற்கு நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

இந்த முயற்சி அவர்களது தொழில் வாழ்விற்கு உதவுவதுடன், எமது தேசத் தின் எதிர்காலத் தலைவர்களை உரு வாக்கவும் வழிகோலியுள்ளது. எதிர் காலத்திலே இன்னும் அதிகமான இளை ஞர், யுவதிகளுக்கு அறிவூட்டுவதற்காக கிராமங்கள்தோறும், நகரங்கள்தோறும் உங்களுடன் இணைந்து பயணிப்பதற்கு ஆவலுடன் உள்ளோம்.

அத்துடன், இந்த மாவட் டத்திலுள்ள பாடசாலை களிலே கணினி தொழில் நுட்பம் மற்றும் இன்ரநெட் ஏற்பாட்டு வசதிகளை அறி முகப்படுத்துவதற்கான பணிகளையும் முன்னெ டுத்து வருகின்றோம்.'' என் றார்.

நிகழ்விலே குழுமியி ருந்த பிரமுகர்கள் மத்தியிலே உரையாற்றிய PC ஹவுஸ் இன் தலைவர் நிஷான் ''நாட் டின் அனைத்துப் பகுதிக ளுக்கும் தகவல் தொழில் நுட்பத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற மஹிந்த சிந்தனையின் உறுதிமொ ழிக்கும் இணங்க தேசத்தி லுள்ள மக்கள் மத்தியிலே தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தைக் கொண்டு செல்லவேண் டும் என்ற எமது உறுதிமொழியை நாம் பேணி வருகின்றோம். எமது ஆரம்ப பொது வழங்கல் நடவடிக்கைக்கு முன் னர் நாம் வழங்கியிருந்த உறுதிமொழி யாக இது அமைந்துள்ளதுடன், அத னையே தற்போது நாம் பூர்த்திசெய்து வருகின்றோம்'' என்று குறிப்பிட்டார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட் பத்தின் உபயோகம் தொடர்பாக ஆசி ரியர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் ஹம்பாந்தோட் டையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தனது வியாபார நடவடிக்கைகளை 1997 இலே ஆரம்பித்ததன் பின்னர் 2000 இலே ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக PC House உள்ளிணைக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக் கது.



நிகழ்ச்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உரையாற்றுகின்றார். PCH இன் தலைவர் நிஷான் (இடது) அருகில் காணப்படுகிறார்.


'நாட்டிற்காக அதிகம் சேமிப்போம்' என்ற தொனிப் பொருளில் தேசிய சேமிப்பு வங்கியினால் நடமாடும் உண்டியல் சேவை நிகழ்வு சங்கானை தேசிய சேமிப்பு வங்கியில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வங்கியின் வடக்கு கிழக்கு வலய முகாமையாளர் நு.எல்.ரபீக், மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: மு.சந்திரகுமார்)

# மன்னார், மித்தெனிய பகுதிகளில் செலிங்கோ லைஃப் கிளைகள்

இலங்கையின் வடமேற்கு நகரமான மன்னாரிலும், தென்பகுதி கிராமமான மித்தெ னியவிலும் நாட்டின் ஆயுள் காப்புறுதித் துறைத் தலைமை நிறுவனமான செலிங்கோ லைஃப் நிறுவனம் இரண்டு புதிய கிளைகளைத் திறந்துள்ளது. இதன் மூலம் நாட்டில் உள்ள இந்த நிறுவனத்தின் மொத்தக்




கிளைகளின் எண்ணிக்கை 184 ஆகி யுள்ளது.

மன்னார் கிளை 2,500 சதுர அடிகளையும், மித்தெனிய கிளை 2,200 சதுர அடிகளையும் கொண்டதாகும். இவ்விரண்டு கிளைகளிலும் நவீன தொழில்நுட்ப வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளதோடு இரு கிளைகளும் அந்தந்த நகரங்களின் மத்திய பகுதியில் அமைந்துள் ளன.

மன்னார் கிளை பனங்கட்டி கொட்டு கிழக்கு, ஸ்டேசன் வீதி மன்னார் என்ற முகவரியிலும், மித்தெனிய கிளை நெல்சா பில்டிங் வலஸ்முல்ல வீதி, மித்தெனிய என்ற முகவரியிலும் அமைந்துள்ளன.

''ஆயுள் காப்புறுதியில் பிர வேசிக்காத கிராமப்புறங்களிலும் எமது கிளைகளை விஸ்தரிப்பதன் மூலம் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும் பத்தையும் ஆயுள் காப்புறுதி மூலம் காப்பாற்ற வேண்டும் என்ற எமது இலக்கை அடைய முடிகின்றது'' என்று கூறினார் செலிங்கோ லைஃப்பின் பணிப்பாளரும், பிரதிப் பிரதம நிறை வேற்று அதிகாரியுமான தி.ரணசிங்க. ''இந்தப் பிரதேச மக்கள் வேலைவாய்ப்பு அதிகரிப்பு மூலமும் நன்மையடைய வுள்ளனர்'' என்றும் அவர் மேலும் கூறினார்.

செலிங்கோ லைஃப் அண்மையில் சூரியவெவ கிராமத்திலும் ஒரு கிளையைத் திறந்திருந்தது.

# தகவல் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புதிய கிளை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பு

இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கற்கைகளை வழங்குவதில் முன்னணி யில் திகழும் இலங்கை தகவல் தொழில் நுட்ப கல்வியகம், தனது புதிய கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளது. யாழ். பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர் களுக்கு அதிசிறந்த தகவல் தொழில் நுட்ப கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலேயே இந்த விஸ் தரிப்பு இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டு வரும் மஹிந்த சிந்தனை அபி விருத்தித் திட்டத்தின் அடிப்படையில் தகவல் தொழில்நுட்பத் துறையும் அபி விருத்தி கண்டு வருகிறது. இதன் ஒரு அங்கமாக உலகளாவிய ரீதியில் இலங் கையின் கல்வித் தரத்தை மேம்படுத்தக் கூடிய அங்கமாக உலகளாவிய ரீதியில் இலங்கையின் கல்வித் தரத்தை மேம் படுத்தக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. இதுபோன்ற விஸ் தரிப்புத் திட்டங்களுக்கு அடித்தளமிட்ட தன் மூலம் தகவல் தொழில்நுட்பத் துறை யில் கடந்த சில ஆண்டுகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தகவல் தொழில்நுட்பக் கல்வியகத்தின் தலைவர் பேராசிரியர் கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில், எமது கல்வியகத்தில் பட்டக் கற்கை களைத் தொடரும் மாணவர்கள், தமது முதல் வருட நிறைவின் பின்னர் அல்லது இரண்டாம் வருடத்தை பூர்த்தி செய்த பின்னர் வெளிநாடுகளிலுள்ள எமது உறுப்பு பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அங்கு தமது உயர் கல்வியை பூர்த்தி செய்த பின்னர் வேலை அனுமதிக்கான 2 வருட விசாவுக்கான தகுதியை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள கிளை நகரின் மத்தியில் கேந்திர நிலை யத்தில் அமைந்துள்ளது. இங்கு கற்கை களை முன்னெடுப்பதற்காக யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த பேராசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர். அத்துடன் மாணவர்களுக்குத் தமது உயர்கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வி யகத்தின் வெளிநாட்டுக் கிளை அல்லது ஏனைய முன்னணி பல்கலைக்கழகங் களை தெரிவுசெய்வதற்கான சந்தர்ப் பமும் வழங்கப்படுகின்றது. யாழ்ப்பா ணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபி விருத்தி நடவடிக்கைகளுக்கு மத்தியில் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப் பது மிகவும் முக்கியமானது, எமது கல்வி யகத்தினால் முன்னெடுக்கப்படும் கற்கை நெறிகள் சர்வதேச தரங்களுக்கு அமை வானவை என்று பேராசிரியர் லலித் கமகே தெரிவித்தார்.

(சி)

அவிவா என்.டி.பி. காப்புறுதி நிறுவனத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பிராந்திய முகாமையாளர் க.செல்வராஜன் அவிவா பணிப்பாளர் உப்புல் விஜயசிங்க ஆகியோர் கேக் வெட்டுவதைப் படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குடா வீடமைப்புத் திட்டத்தில் பாகுபாடுகள்; நியாயம் கேட்கின்றனர் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள்

பூநகரி,நவ.9

பூநகரி பள்ளிக்குடாவில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரான வீடமைப்புத் திட்டத்தில் பாகுபாடுகள் காணப்படுவதாக இப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பள்ளிக்குடாவில் மக்கள் மீள்குடியேறிய நிலையில் அவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படவிருக்கின்றன. இதற்காக வீடமைப்புத்திட்டத்தில் இணைக்கப்பட வேண்டியவர்களின் பெயர்ப்பட்டியல்கள் கிராம அலுவலரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்த வீடமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்தி வரும் நிறுவனம் இந்தப் பட்டியலுக்கு மாறாக வேறொரு பட்டியலைக் காண்பித்து அதன் பிரகாரம் செயற்பட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனைப் பற்றிப் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்களிடம் வினவியபோது அவர்கள் பொருத்தமற்ற பதில்களைத் தெரிவித்து வருவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

உண்மையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த வீட்டுத்திட்டத்தில் பாதிக்கப்படும் நிலை உருவாகியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஆகவே, இப்பிரதேசத்திலுள்ள உயரதிகாரிகள் இவ்விடயத்தில் தமது கவனத்தைச் செலுத்திக் கிராம அலுவலரினால் தயாரிக்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலின் பிரகாரம் வீட்டுத்திட்டத்தை அமுல் படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக இக்கிராமத் தலைவர் குறிப்பிடுகையில்- தானும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீள்குடியேறிய மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்பதே தமது வேண்டுகோள் என்றும் தெரிவித்தார்.

(க-301)

## அலங்காரப் பெருவிழா

பூநகரி,நவ.9

பூநகரி ஜெயபுரம் முருகன் ஆலயத்தில் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் அலங்காரப் பெருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஸ்கந்தசஷ்டி விரதகாலத்து விசேட உற்சவம் ஆரம்பித்துள்ளது. சிறப்புற நடைபெறும் இந்த விசேட உற்சவத்தில் 11 ஆம் திகதி வியாழக்கிழமை சூரசங்காரமும், அடுத்தநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

தொடர்ந்து ஆலயத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் சமயச் சொற்பொழிவுகள் சிறப்பு வாய்ந்தவை. சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் 'கந்தன் கருணையும் சைவ வாழ்வும்' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(க-496)

## ஓவியக்கண்காட்சி

கிளிநொச்சி,நவ.9

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் க.பொ.த.உயர்தர கலைத்துறையின் சித்திரப் பிரிவு மாணவர்களின் ஓவியக் கண்காட்சி இன்று நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகவிருக்கும் இந்த ஓவியக் கண்காட்சிக்கு 'மலரும் மொட்டுக்கள்' என்ற தலைப்பு இடப்பட்டுள்ளது.

ஆர்வலர்களை இந்தக் கண்காட்சியில் பங்குபற்றுமாறு கல்லூரி நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கிறார்கள். (க-405)

## அறிவுத் தேடல்....



மொய்க்கும் கண்கள்: முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயம், குமிழமுனை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடமாடும் நூலக சேவைகள் இடம்பெற்றன.

## வீதியின் புனரமைப்பு

கிளிநொச்சி,நவ.9

கிளிநொச்சியில் கரைச்சிப் பிரதேச சபைக்கு முன்பாகச் செல்லும் திருநகர், ஜெயந்தி நகர் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான வீதியின் ஒருபகுதி புனரமைக்கப்படவுள்ளது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக கற்கள் இந்த வீதியின் அருகில் பறிக்கப்பட்டுள்ளன. (க-405)

## இராணுவத் தளமாக இயங்கும் பாடசாலை: அலைந்து திரியும் அப்பிரதேச மாணவர்கள்

பூநகரி,நவ.9

பூநகரி 4 ஆம் கட்டையிலுள்ள விக்னேஸ்வரா வித்தியாலயம் தொடர்ந்தும் இராணுவத் தளமாக இயங்கி வருவதால் இப்பிரதேச மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அரசபுரம், செம்மன்குன்று, 4 ஆம் கட்டை, தில்லையடி, பள்ளிக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களே பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் தமக்கு அருகிலுள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர முடியாது சுமார் 10 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பூநகரி மகாவித்தியாலயத்திற்குச் செல்ல வேண்டிய பரிதாபகரமான நிலையில் உள்ளனர்.

பல மாணவர்கள் இந்தப் 10 கிலோ மீற்றர் தூரத்தையும் நடந்தே செல்லவேண்டிய நிலையில் உள்ளனர். அத்துடன் பேருந்து சேவை சீரில்லாததால் இந்த மாணவர்கள் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். மேலும் காட்டு வீதி, வயல் பாதைகளுக்கூடாக இந்த மாணவர்கள் பயத்துடன் பயணிக்கின்றனர்.

அத்துடன் இந்தப் பகுதியில் நல்ல தண்ணீர் உள்ள கிணறு இந்த விக்னேஸ்வரா வித்தியாலயத்திலேயே அமைந்துள்ளது. 10 கிலோ மீற்றர் கடந்து பூநகரி மகாவித்தியாலத்திற்குச் செல்லும் இந்த மாணவர்கள் அங்கே பல இடையூறுகளைச் சந்திக்கின்றனர். ஆளணி வளம், பௌதீக வளம் என்பன பற்றாக்குறையாக இருப்பதனால் இவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுகின்றது. பருவமழை ஆரம்பித்துள்ளதால் கூரைகளற்ற கட்டடங்களில் இவர்களால் இருக்க முடியவில்லை.

எனவே, விக்னேஸ்வரா வித்தியாலயத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட இவர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள். (க-301)

## வவுனியாவில் மலேரியா

வவுனியா,நவ.9

வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட மலேரியாத் தடை இயக்க வைத்திய அதிகாரி; கடந்த மாதத்தில் மட்டும் மூன்று மலேரியாவால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவித்தார். இதனால் மலேரியாத் தடுப்புப் பகுதினர் முழுவீச்சில் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார். (க-501)

## கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு கல்வி உபகரணங்கள் கையளிப்பு

கிளிநொச்சி,நவ.9

சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை பாடசாலைகளுக்கும் பொது அமைப்புக்களுக்கும் சிறிதரன் எம்.பி.வழங்கினார்.

புலம் பெயர் தேச உறவுகளின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட இவற்றைக் கல்விச் சமூகத்தினரும், பொது அமைப்புக்களின் தலைவர்களும் பெற்றுக் கொண்டனர்.

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு மின்பிறப்பாக்கியும், நிழற்படப் பிரதி இயந்திரமும் வழங்கப்பட்டன. அத்துடன் இந்தக் கல்லூரியின் கணனிப் பிரிவும் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருவையாறு மகா வித்தியாலயத்திற்கு நிழற்படப்பிரதி இயந்திரமும் சோரன்பற்றுக் கிராமச் சங்கத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரமும், மருதநகர் கிழக்கு கிராமச் சங்கத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரமும், தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் காந்திபுரம் கிராமத்தில் பெற்றோரை இழந்த ஆறு பள்ளிப் பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வழங்கினார். (க-301)

## கொத்துரொட்டியில் கரப்பான்; உணவகத்தின் மீது முறைப்பாடு

வவுனியா,நவ.9

வவுனியா நகரப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் இரவுச் சாப்பாட்டுக்காக வாங்கிய கொத்துரொட்டியில் கரப்பான் பூச்சி காணப்பட்டதாகப் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவுணவுக்காக வாங்கிய கொத்துரொட்டிப் பார்சலைப் பிரித்தபோது கரப்பான் பூச்சி தான் முதலில் கண்ணில் பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்தவர்கள் இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதாரப்பரிசோதகருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உரிய விசாரணைகள் மற்றும் பரிசோதனை களை மேற்கொண்டனர். ஏற்கனவே அந்த உணவகத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டதாகவும் அவை உரிய முறையில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த வாரமும் வவுனியா நகரப் பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகங்கள் மீது பல திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் உரிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மீது உணவுச் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எந்த வகையான உணவுப் பொருள்களையும் தயாரித்து விற்பனை செய்வோர்கள் நகர சபையில் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதத்தில் அனுமதி பெறாது சனக்கூட்டம் அதிகமாகவுள்ள பஸ் நிலையம், சந்தைப்பகுதி போன்ற இடங்களில் உணவு தயாரித்து விற்பனை செய்தவர்கள் திடீர்ப் பரிசோதணையில் சிக்கிக் கொண்டனர்.

(க-501)




## வவுனியாவில் 64 ஆயிரத்து 700 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை

### மாவட்ட அரச அதிபர் தகவல்

வவுனியா,நவ.9

வவுனியா மாவட்டத்தில் இம்முறை 64 ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்[illegible] வலயம் விடுவிக்கப்பட்[illegible] மேலும் 14 ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு விதைநெல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன் மானிய அடிப்படையில் உரம் வழங்கப்பட்டுள்ளது.

பயிர்ச்செய்கைக்கேற்ற வகையில் 100 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு பயிர்ச்செய்கைக்காக நிலங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த விவசாயிகளுக்கு இலகு கடன்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை - வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவிலும் நெல் அரிசி ஆலைகளை அடுத்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வளங்களற்ற நிலையிலும் சிறப்பாக இயங்கிவரும் துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்



தொகுப்பு - ஹரிஸ்

"இன்றைய சிறார்களே நாளைய எதிர்கால நாட்டின் சிற்பிகள்" என்பது ஆன்றோர் வாக்கு. வடமராட்சியின் மத்தியில் இருந்து சின்னஞ்சிறு சிறார்களை எமது நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாக மாற்றும் பாடசாலைகளில் துன்னாலை காசிநாதர் வித்தியாலயமும் ஒன்றாகும். இப்பாடசாலை 1917ஆம் ஆண்டு மயில்வாகனம் காசிநாதர் என்பவரால் துன்னாலை வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயருடன் ஸ்தாபிக்கப்பட்டது.

மயில்வாகனம் காசிநாதர் இறந்த பின்னர் அவரது பெயர் இப்பாடசாலைக்குச் சூட்டப்பட்டு துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் என வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பாடசாலை மூன்று பரப்பு 16 குழியையுடைய சிறிய காணியில் இயங்கி வருகின்றது.பாடசாலைக்கான கட்டடம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் (யு. என். ஏச். சி.ஆர்.) அமைப்பினரால் நிறுவப்பட்டு 19.03.1999 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையில் 135 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். 5ஆசிரியர்கள் தமது கல்விப் போதனையைத் தொடர்ந்து வருகின்றனர்.

இப்பாடசாலையின் அதிபர்களாக நற்குணலிங்கம், பரமானந்தம், நாகலிங்கம், நல்லதம்பி போன்றோர் கடமையாற்றியுள்ளனர்.

பாடவிதான அடைவுகளில் இப்பாடசாலை மாணவர்கள் சிறப்பான நிலைகளைப் பெற்று வருகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இவ்வருடம் 30 மாணவர்கள் தோற்றி 12 மாணவர்கள் சித்தியடைந்திருப்பது இப்பாடசாலையின் கல்வி புகட்டலுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக ஏ.ரட்ணராஜா கடமையாற்றி வருகின்றார்.

இப்பாடசாலையின் பௌதிக வளங்கள் என்று வகுப்பறைக் கட்டடங்கள் சிலவற்றையே குறிப்பிடலாம். வேறு எந்த அடிப்படை வளங்களும் அற்ற நிலையிலேயே இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றது. குறிப்பாக மைதான வசதி இல்லை. அத்துடன் வகுப்பறை பற்றாக்குறை இப்பாடசாலையில் தொடர்ந்தும் தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது.

இப்பாடசாலைக்கு மேற்படி உதவிகளை வழங்க உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும். என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

# வெற்றிச் சாதனைப் பயணத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தற்போது தரம் 01-13 வரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. 1,200 மாணவிகளுக்கு கல்விச் செல்வத்தை இக்கல்லூரி ஊட்டி வருகின்றது.

இப்பாடசாலையின் அதிபர்களாக திருமதி எம். பொன்னுத்துரை, செல்வி பசுபதி ஐயர், செல்வி யோ.கனகசபை, திருமதி கா. கணேசன், திருமதி பு.. கனகசுந்தரம், திருமதி சி.சுப்பிரமணியம், திருமதி எல். குமாரசுவாமி, செல்வி எ.கனகரட்ணம், திருமதி சி. சண்முகதாஸ் ஆகியோர் கடமையாற்றி இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வலுச்சேர்த்துள்ளனர்.

தற்போது அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள போதும் இப்பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி எஸ். பாலேந்திரன் திறமையாக இப்பாடசாலையை நிர்வகித்து வருகின்றார்.

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் இவ்வருடம் இப்பாடசாலையைச் சேர்ந்த 16 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையிலும் இப்பாடசாலை மாணவிகள் பாராட்டக்கூடிய அடைவுகளைப் பெற்று வருகின்றனர்.

ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கடந்தவாரம் 18 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் இலக்கணப் போட்டியில் இப்பாடசாலையின் மாணவியான எஸ். தர்சிகா தேசிய ரீதியில் இவ்வருடம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். சாரணியர் அணி உட்பட சமூகத் தொண்டு அமைப்புக்கள் இப்பாடசாலையில் சிறப்பாக இயங்கி வருகின்றன. தமிழ்த் தினப்போட்டிகளில் கவிதை, கட்டுரை, சிறுகதை போட்டிகளில் இப்பாடசாலை மாணவிகள் சிறப்பான இடங்களையும் பெற்று வருகின்றனர்.

ஆய்வுகூடங்கள், நூல் நிலையம் எனப் பல்வேறு கட்டுமானங்களை உள்ளடக்கியதாக இப்பாடசாலை சிறந்து மிளிர்ந்து நிற்கிறது.

விளையாட்டுப் போட்டிகளை பொறுத்தவரையில் 1971ஆம் ஆண்டு இப்பாடசாலையின் வலைபந்தாட்ட அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றது. தொடர்ந்து நான்கு வருடங்கள் இச்சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடத்தப்பட்ட வலைபந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவு மாணவிகள் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

17 வயதுப் பிரிவு மாணவிகளும் இந்த வருடம் வலைபந்தாட்டத்தில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

1979ஆம் ஆண்டு இப்பாடசாலை மாணவிகளின் 'எல்லைக்கல்' நாடகம் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றது. 1982ஆம் ஆண்டு தமிழ்த்தினப்போட்டியில் 'கண்ணன் அறமுரைத்த கீதாபகரணம்' என்னும் நாட்டிய நாடகம் முதலாம் இடத்தைப்பெற்றது.

பல்வேறு வகைகளிலும் இக்கல்லூரி உயர்வடைந்துள்ள போதிலும் பௌதிக வளப்பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருகின்றது. வகுப்பறைக் கட்டடப்பற்றாக்குறை நிலவுவதோடு , சீரான மலசலகூடங்களும் போதியளவில் இல்லையென்று இக் கல்லூரியின் பிரதி அதிபர் எம்மிடம் தெரிவித்தார்.

இதேவேளை, பிரார்த்தனை மண்டபமும் இங்கு கற்கின்ற 1200 மாணவர்களையும் ஒரே நேரத்தில் உள்ளடக்கக்கூடியதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் இப்பாடசாலைக்கு உதவும் கரங்கள் தொடர்ந்தும் தேவைப்படுகின்றன. இந்த உதவிகள் கிடைக்கப்பெறுமிடத்து பாடசாலை பல்வேறு கட்டுமானங்களையும் உடைய பிரமாண்டமான பாடசாலையாக மாற்றமடையும். *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் 2வது பதவியேற்புவேளை எதிரணிகள் ஆர்ப்பாட்டங்களுக்கு முஸ்தீபு

## கொழும்பில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, நவ.9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாமென்று பாதுகாப்பு அதிகாரிகள் அச்சமடைந்துள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி தமது இரண்டாவது பதவிக்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்வுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் ஒன்று கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, இதற்கு முதல் நாளான 18ஆம் திகதி கொழும்பில் பெரிய எதிர்ப்பு போராட்டங்கள் நடத்த எதிர்க்கட்சிகள் திட்டமிடலாமென பாதுகாப்பு அதிகாரிகள் கவலையடைந்துள்ளதாகவும், அவ்வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்காரணமாக ஏற்படும் குழப்பங்களைக் கட்டுப்படுத்தவென பெரும் எண்ணிக்கையான படையினரும், காவல்துறையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதேவேளை போராட்டங்களை நடத்த முனைவோருக்கு எதிராக குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பல்கலைக்கழக மாணவர்கள் மூலம் இன்னொரு கிளர்ச்சியைத் தூண்டுவதற்கு முயற்சிகள் நடப்பதாகக் கூறியிருந்தார்.

எனவே, இம்மாதம் ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வு, வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை, பாகிஸ்தான் அதிபரின் வருகை, இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகை என்று முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதால் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது. (ஒ - 16)

# சங்க கிளைகளில் அரிசி விலை உயர்வு

குருநகர், நவ. 9

அரசாங்கம் அரிசியின் விலையைத் தளர்த்தியதன் பின்னர் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விற்பனை செய்யப்படும் நாட்டரிசியின் விலை தற்போது உயர்வடைந்துள்ளதாக வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.

இக்கிளைகளில் இதுவரை காலமும் ஒரு கிலோ 55 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த நாட்டரிசி விலையைத் தளர்த்தியதன் பின்னர், 5 ரூபா உயர்த்தப்பட்டு தற்போது 60 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர். (த- 57)

# பாடசாலை வன்முறைகளுக்கு போதைப் பொருளும் காரணம்

கொழும்பு, நவ. 9

பாடசாலை மாணவர்களிடையே பிரச்சினைகள் ஏற்படுவதற்குசில மாணவர்கள்போதைப் பொருளுக்கு அடிமையாவதும் ஒரு கார்ணம் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலைச் சூழலில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து பாடசாலை அதிபர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி கல்வி அமைச்சினால் போதைப் பொருள் தடுப்பு பிரிவொன்றும் அமைக்கப்படவுள்ளது. கல்வி அமைச்சினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் 21 சதவீத மாணவர்கள் மந்தபோசனத்துடனும், 10 சதவீதமானோர் உடல் பருமன் கூடியும், 15 சதவீதமானோர் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் நிறை குறைவான மாணவர்கள் 29 சதவீதம் காணப்படுகின்றனர் - இவ்வாறு அமைச்சர் பந்துல தெரிவித்தார். (சி)

## வெளியீடு



அவலம்: நிந்தவூர் ஜிப்லியின் "தற்கொலை குறிப்பு" கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். இந்நூலை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் விசாகரூபன் வெளியிட்டு வைக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் பெற்றுக் கொள்வதையும் மத்தியில் நூலாசிரியர் ஜிப்லி நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மழையில் நனையும் நெடுந்தீவுப் பயணிகள்

நெடுந்தீவு, நவ. 9

தற்போது பெய்துவரும் மழை காரணமாக நெடுந்தீவு படகுச் சேவையில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திறந்த படகுகளில் பயணிக்கும் மக்கள் கடும் காற்று, கடல் கொந்தளிப்பு ஆகியவற்றால் நனைந்து தோய்ந்தபடியே தமது இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பெரும் எண்ணிக்கையான பயணிகளுடன் குறிகாட்டுவான் சென்று கொண்டிருந்த சமுத்திரா தேவி படகில் பயணித்த மக்கள் மழையில் நனைந்து பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும், படகில் சென்ற பயணி ஒருவரின் கைப்பை தவறிக் கடலில் விழுந்ததில் அவரது அடையாள அட்டை, ஒரு தொகைப் பணம் உட்பட வேறும் சில பொருள்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

இனி மழைகாலம் என்பதால் நெடுந்தீவு மக்கள் மழையில் நனைந்தபடியே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியதாகவும், ஒரு நாள் சேவை செய்த 'அதிஷ்டலட்சுமி' அதன் பின்னர் சேவையில் ஈடுபடவில்லை எனவும் கூறப்படுகின்றது. (த - 111)

# யாழ். கோட்டத்தில் 186 மாணவர்கள் சித்தி

குருநகர், நவ. 9

யாழ்.கோட்டக்கல்விப் பாடசாலையில் இருந்து 2010 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 984 மாணவர்களில் 186 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள் என யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ. சிவ பாலன் தெரிவித்தார்.

இப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி புனிதஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தில் 109 பேரும், யாழ். மத்திய கல்லூரி யில் 23 பேரும், சென் ஜோன்ஸ் கல்லூரியில் 18 பேரும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இருந்து தலா 13 பேரும், திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் இருந்து நால்வரும், சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் இருந்து இருவரும், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம், பாஷையூர் சென். அன்ரனிஸ் பெண்கள் பாடசாலை, சென். றோக்ஸ் றோ.க. பாடசாலை ஆகியவற்றில் இருந்து தலா ஒருவரும் சித்தியடைந்துள்ளார்கள்.

இதேநேரத்தில் யாழ். புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 188 பேரில் 109 பேர் சித்தியடைந்துள்ளார்கள் எனவும் யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ. சிவபாலன் மேலும் தெரிவித்தார்.(த - 51)

# பால் கொள்வனவு நிலையம் நவாலியில் திறந்து வைப்பு

நவாலி, நவ. 9

நவாலியில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் கொள்வனவு, விற்பனை நிலையத்தில் பால் வாங்குவதற்கு அதிகாலையிலிருந்தே மக்கள் காத்திருக்கின்றனர்.

இங்கு பால் வழங்குவோர் தொகை மிகக் குறைவாகவுள்ளதால் இவ்வாறு முண்டியடித்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.

இப்பகுதியில் மாடு வளர்ப்போர், பண்ணை வைத்திருப்போர் அவற்றிலிருந்து பெறப்படும் பாலை தூர இடங்களுக்கு எடுத்துச் செல்லாமல் இந்த நிலையத்தில் வழங்கினால் அவர்களுக்கும் வசதியாக இருக்கும், மக்களுக்கும் வசதியாக இருக்கும் என்று பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். ( த - 100)

# சனசமூக நிலையத்தை இயங்க வைக்குமாறு கோரிக்கை

நவாலி, நவ. 9

நவாலி தெற்கில் சொந்தக் காணியில் இயங்கிவந்த வளர்மதி சனசமூக நிலையத்தை இயங்கவிடாது மூடி அடைக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து அப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.(த-100)

## கௌரவிப்பு




ஊக்குவிப்பு: சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி வேசிங்ரன் திசேரா மாணவனுக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கதிர்வேலு)

# தொண்டர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, நவ. 9

சாவகச்சேரி, உப்புக்கேணி வீதி, நாவலடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் ஆலயத் தொண்டுகளை மேற்கொண்டு வரும் இருவரை கௌரவிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக உதவிப் பதிவாளர் யோ. ஜெயக்குமார் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெறும் இந்த நிகழ்வில் சமயத் தொண்டர் வே. கெ.தனபாலன், ஓதுவார் திருமதி கு. கமலாதேவி ஆகியோர் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் கலந்து கொள்வார்.

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 13 மாணவர்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகமும், கற்றல் உபகரணங் களும் இந்த நிகழ்வில் வழங்கப்படுமென விழா அமைப்பாளர் எஸ். தர்மலிங்கம் தெரிவித்தார். (த - 207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்குஎப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
தேக ஆரோக்கியக் குறைவுகளைச் சந்திக்கலாம். எப்படியும் வந்து விடும் என நினைத்த பண வரவு ஒன்று வராமல் போகலாம். சிக்கலான வேலை ஒன்றைச் சிலர் உங்களின் தலையில் சுமத்தி விடலாம். மதிப்பு, கௌரவம் பாதிக்கப்படும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தண்டச் செலவு நேரும்.



**இடபம்:**
மற்றவர்கள் செய்யத் தயங்கிய காரியம் ஒன்றை நீங்கள் தைரியமாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். அயலார் கேட்ட உதவிகளை உள்ளன்போடு செய்வீர்கள். கடிதங்கள் மூலம், நல்ல தகவல்கள் வந்து சேரலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். பரபரப்பாகச் செயற்படும் நாள்.



**மிதுனம்:**
வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் சிலர் உங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவரை, பாதையில் சந்திக்கலாம். உடன் பணிபுரியும் சிலர் மீது கோபம், எரிச்சல் வந்தாலும், அதை வெளிக்காட்டாமல் நடந்து கொள்வீர்கள். சுபச் செய்திகள் தேடி வரும் நாள்.



**கடகம்:**
எதிர்பாராத சம்பவங்கள் நடக்கலாம். பிள்ளைகளுக்காகச் சில செலவுகளைச் செய்வீர்கள். மற்றவர்களுக்காகச் சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். தேக ஆரோக்கிய குறைவுகளால் உற்சாகம் குறையலாம். உடலை வருத்தி சில காரியங்களைச் செய்வீர்கள்.



**சிங்கம்:**
எதிர்பாராத பொருள் வரவுகளைப் பெறலாம். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிட்டும். தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம், உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். தாய் வழி உறவினர்களின் சந்திப்பு நிகழும். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.



**கன்னி:**
உறவினர்களின் ஆதரவு கிடைக்கும் நாள். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்தவர்களைச் சந்திப்பீர்கள். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைக்கத் திட்டம் போடுவீர்கள். எதிர்பாராத திடீர் சந்திப்புகள் நிகழும். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று கைக்குக் கிடைக்கலாம். கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள்.



**துலாம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக வெளியூர் பயணம் செல்லலாம். திட்டமிட்டபடி சில வேலைகள் நடக்காமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கடந்த கால விடயங்களை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். கனவுத் தொல்லையுண்டு.



**விருச்சிகம்:**
பெரிய மனிதர் ஒருவரின் சந்திப்பு நிகழும். பழகிய சிலரின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். சக ஊழியர்கள், நண்பர்களுடன் பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். அரசியல்வாதிகள் கடும் பேச்சுக்களைத் தவிர்க்கவும். சவாலாக நினைத்துச் சில காரியங்களைச் செய்வீர்கள். சிலருக்குப் பண உதவி செய்வீர்கள்.



**தனுசு:**
காலை நேரத்தில் மனதிற்கு இனிய அல்லது சங்கடம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். பிரச்சினையாக இருந்த சிலரே உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். தந்தை வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு தீரும். எளிதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று, பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். சிலருடன் வாக்கு வாதங்களில் ஈடுபடலாம்.



**மகரம்:**
புதிய பொருள்கள் வாங்கலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும் நாள். உறவினர்கள் விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மூத்த சகோதரர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் குறைகளைச் சுட்டிக் காட்டலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.



**கும்பம்:**
இரண்டு நாள்களாகத் தடைபட்ட காரியங்கள் இன்று வெற்றிகரமாக முடியும். பிள்ளைகளுக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். அனுபவம் இல்லாத சில விடயங்களில் ஈடுபட்டு அவதிகளுக்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் சிலரிடம் உதவி கேட்கலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் கூடும். உத்வேகம் பெறும் நாள்.



**மீனம்:** இறைவழிபாட்டின் மூலம் இன்பம் அடையும் நாள். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். வாழ்க்கைத் துணையுடன் வாக்கு வாதங் களில் ஈடுபடலாம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உங்களை உதாசீனம் செய்யலாம். நண்பர்களின் குறை ஒன்றை சுட்டிக் காட்டுவீர்கள். கடன் மிகுதிகளை திருப்பக் கொடுப்பீர்கள். சோர்வு, சோம்பல் கூடும்.

## கல்விச் சுற்றுலா...




பார்வையிடல்- குடாநாட்டில் கைதடி மேற்கு பைந்தமிழ் சிறுவர் கழகம் கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டபோது 'உதயன்' நிறுவனத்தை பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## வெதுப்பக உரிமையாளருக்கு நீதிமன்றம் அபராதம்

குருநகர், நவ.9

நெடுந்தீவில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றில் மண்ணெண்ணையில் நனைந்த மா மூலம் பாண் மற்றும் பணிஸ் வகைகளைத் தயாரித்துப் பொதுமக்களுக்கு விற்ற வெதுப்பக உரிமையாளர் ஒருவர் தன்னால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு அவருக்கு ரூபா 5 ஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்டதாக நெடுந்தீவுப் பொதுச்சுகாதார பரிசோதகர் ம.இராஜமேனகன் தெரிவித்தார். (த-51)

## மூன்று வாரகால ஊடகப் பயிற்சி கடந்த சனிக்கிழமை ஆரம்பம்

வலி.வடக்கு, நவ.9

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊடகவளப் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் லண்டனில் இருந்து வருகை தந்துள்ள ஊடகவியலாளரும் பயிற்றுவிப்பாளருமானதிருமதி பியானோ பார்ட்டனினால் நடத்தப்படும் பத்திரிகையியலுக்கான அடிப்படை பயிற்சி நெறி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசல் வீதியில் அமைந்துள்ள ஊடக வள பயிற்சி நிலைய மண்டபத்தில் ஆரம்பமாகியது. பயிற்சி இணைப்பாளரும் பயிற்றுவிப் பாளருமான மே.தேவானந் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில்யாழ்ப்பாணம்பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன், ஊடகவள பயிற்சி நிலைய இயக்குநர் விமல் சுவாமி னான் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இப்பயிற்சி வகுப்பில் 68 பேர் கலந்து கொண்டுள்ளார்கள். இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து மூன்று வார காலத்திற்கு மாலை 4 மணிமுதல் 6 மணிவரை நடைபெறவுள்ளன. (எ-86)

## யார் பெரியவர்?



ஒரு சமயம் ஐந்து விரல்களுக்கும் இடையில் யார் பெரியவர் என்று சண்டை வந்தது.

கட்டை விரல் '' நான் குட்டையாக இருக்கிறேன். அகத்தியர் கூட என்னைப் போல் குட்டைதான். ஆனால், பரமசிவன் பார்வதி திருமணம் நடந்த சமயம் பூமி சரியும்போது ஒரு பகுதிக்கு பரமசிவன் அகத்தியரை அனுப்பி வைத்தார். பூமி சமனாகிவிட்டது. அதுபோலத்தான் நானும். எந்தப் பொருள் தூக்க வேண்டும் என்றாலும் நான்தான் பலமாக இருக்கிறேன். அதனால் நான்தான் பெரியவர்'' என்றது.

''யாரைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்றாலும் நான் தேவைப்படுகிறேன். அதனால் நான்தான் பெரியவன்'' என்றது ஆள்காட்டி விரல்.

''அனைவரிலும் பார்க்க நான்தான் உயரமானவன். அதனால் நான்தான் பெரிய வன்'' என்றது நடுவிரல்.

''ஒரு மனிதன் தன்னை வசதியானவன் என்பதைக் காட்டுவதற்கு எனக்குத்தான் மோதிரம் போடுகிறான். இப்படி விலைமதிப்பில்லாத பொருள்களைச் சுமப்பதால் நான்தான் பெரியவன்'' என்றது மோதிர விரல்.

சுண்டுவிரல் மட்டும் அமைதியாக இருந்தது. அதற்கு எதுவும் சொல்லக் கிடைக்கவில்லை.

கடவுளிடம் போய் தனது நிலைமையைக் கூறியது. கடவுள் ஏதோ காதோடு காதாகக் கூறினார்.

சந்தோசமாகத் திரும்பி வந்து ''கோயிலுக்குப் போனால் கடவுளை வணங்கும் போது நான்தான் முன்னுக்கு நிற்கிறேன். அதனால் நான் பெரியவன்'' என்றது சுண்டுவிரல்.

இதை மற்ற விரல்கள் எல்லாம் சேர்ந்து இறைவன் பக்கம் இருப்பதால் அதுதான் பெரியவன் என்று ஒப்புக் கொண்டன.

இதில் முக்கியம் என்னவென்றால் 'தான்பெரிய வன்' என்ற எண்ணத்தை சுட்டுவிரல் நினைக்க வில்லை.

**கோ.சுவாமிநாதன்.**

## பிரார்த்தனை என்றால்?



அழகான கிளி வளர்க்க விரும்பிய பெண் ஒருத்தி ஆசையாகத் தேடி, பேசும் கிளி ஒன்றை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

கிளி எப்படிப் பேசுகிறது என்று அறிய அதனுடன் பேச்சுக் கொடுத்தாள். ஆனால் அவளுக்கு அவமானமாகப் போய்விட்டது. அதற்குக் காரணம் அப்படி அநாகரியமாகப் பேசியது கிளி.

இந்தக் கிளியை எப்படித் திருத்துவது என்று அவளுக்குப் புரியவில்லை.

கோயில் பூசாரி ஒருவர் இரண்டு ஆண் கிளிகளை ஒழுங்காக வளர்த்துக் கொண்டிருந்தார். அவரிடம் சென்று ஆலோசனை கேட்டாள்.

அவள் கோயிலுக்குப் போனபோது ஒரு கிளி மணி அடித்தது. மற்றைய கிளி கற்பூரத்தட்டை வாயால் கௌவிக் கற்பூரம் காட்டியது.

அவள் தனது பிரச்சினையை பூசகரிடம் சொன்னாள்.

''உன் கிளியைக் கொண்டு வந்து இங்கு விடு. இந்தக் கிளிகள் மாதிரி அதுவும் செய்யப் பழகிக் கொள்ளும்'' என்றார் பூசகர்.

ஆனால் அவள் பெண்கிளியைக் கொண்டு வரும் போதே 'நான் ரொம்பக் கெட்ட பெண்' என்று கத்தியது.

உடனே மணி அடித்த கிளி, மணி அடிப்பதை நிறுத்தியது. கற்பூரம் காட்டிய கிளியைப் பார்த்து ''மூடமே இன்னும் ஏன் பிரார்த்தனை செய்கிறாய்? நாம் எதிர்பார்த்த பிரார்த்தனைதான் முடிந்து விட்டதே'' என்று பெண் கிளியைப் பார்த்துக் கண் சிமிட்டியது.

பிரார்த்தனையில் இதுதான் இப்போது நடக்கிறது. எதிர்பார்ப்பு இல்லாமல் பிரார்த்தனை செய்வோர் யாரும் இல்லை.

கடவுள் நம் எதிரில் தோன்றி '' என்ன வேண்டும்'' என்று கேட்டால் '' நீதான் வேண்டும்! உன்னைவிட சிறந்தது எதுவும் இல்லை'' என்று சொல்வதுதான் சரியான பிரார்த்தனை.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்தொடரும் துயரின் குரல்

இலங்கையிலுள்ள தடுப்பு முகாம்களிலுள்ளவர்களைப் பற்றி எவரும் கவலைகொள்வதாகத் தெரியவில்லை.

இவர்களது அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு இலங்கையிலுள்ள எந்தவொரு மனித உரிமை அமைப்போ அன்றி சட்டவாளர்களோ இன்னமும் துணியவில்லை. இவை குறித்து Green Left Weekly என்னும் இணையத்தளத்தில் Lee Yu Kyung என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கத்தின் இரண்டாவது பகுதி இது.

இலங்கையில் போர் நிகழ்ந்தபோது மட்டுமல்லாது அதன் பின்னரும் தமிழ் மக்கள் மீதான துயரங்கள் பின் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. முன்னாள் போராளிகள் தடுப்பில் கடும் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இது தவிர போரின் இறுதிக் கட்டத்தில் வர்ணிக்க முடியாத மனித அவலங்கள், மனித உரிமை மீறல்கள் வன்னியில் அரங்கேறி இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

தமிழ் இளைஞர்கள் பலர் அரச படையினரால் குறுகிய தூரத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட மற்றும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டதைக் காட்டும் ஒளிப்படங்களை மனித உரிமை அமைப்புக்கள் வெளியிட்டிருக்கின்றன.

''ஒரு நாள் இரவு தடுப்பில் இருந்த மூன்று போராளிகள் ஓடிவிட்டதாக மறுநாள் காலையில் இராணுவத்தினர் கூறினார்கள். இராணுவத்தினர் கூறியதை நம்பவேண்டிய நிலையில் நாம் இருந்தோம்.

, ஆனால், நாங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாமைச் சுற்றி இரட்டை வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆயுதம் தாங்கிய படையினர் எந்த நேரமும் கண்ணுக்குள் எண்ணெயினை விட்டவாறு காவல் கடமையில் இருந்தார்கள்.

நாங்கள் யாரும் தப்பியோட முற்பட்டால் படையினர் எங்களைச் சுட்டுக் கொலைசெய்து விடுவார்கள் என நாம் எச்சரிக்கப்பட்டிருந்தோம்'' என ஜெயா எங்களிடம் கூறினார்.

தான் ஒருபோதும் விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டதில்லை என ஜெயா கூறுகிறார்.

தனது குடும்பத்துடன் இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்ததாகவும் கடந்த ஓகஸ்டில் தனது குடும்பத்தினர் முகாமை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டபோது தன்னை சந்தேகத்தின் பேரில் படையினர் கைது செய்ததாகக் கூறுகிறார் இவர்.

கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் 15 தடவைகளுக்கு மேல் தான் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் ஜெயா தெரிவித்தார்.

''இந்த விசாரணைகளின் போது படையினர் என்னை அடித்துத் துன்புறுத்தினர். நான் புலிகளின் உறுப்பினர் என யாரோ தங்களிடம் கூறியதாக படைப் புலனாய்வாளர்கள் என்னிடம் கூறினர்.

நான் ஒரு புலி என்பதை ஏற்க மறுத்தால் தொடர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவேன் என அவர்கள் என்னை எச்சரித்ததோடு கிரிக்கெட் மட்டையால் என்னை அடித்துத் துன்புறுத்தினார்கள்.

''இதன் காரணமாக இன்றும் நான் மூச்சு விடுவதற்குச் சிரமப்படுகிறேன். என்னைப் போன்ற பலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்'' என ஜெயா தொடர்ந்தார்.

விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் இதுபோன்ற தகவல்கள் அரசாங்கத்தின் கருத்துக்களுடன் முற்றிலும் முரண்படுகின்றன.

''தாங்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களே என்பதை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரம்தான் கைதுசெய்யப்பட்டனர்'' என அப்போது மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதின் கூறியதாக 15 ஜுன் 2009 அன்று பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசிய செய்தி வெளியிட்டிருந்தது.

''இவ்வாறு கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் உறவினர்களுக்கு இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன'' என அவர் தொடர்ந்தார்.

எவ்வாறிருப்பினும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த 'வலயம்-4' முகாமில் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் அடிக்கடி சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்றதாகவும் 17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் சந்தேகத்தின் பெயரில் அழைத்துச்செல்லப்பட்டதாகவும் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் இன்னொருவர் தகவல் தருகிறார்.

''முதலில் ஆண்களை மாத்திரம்தான் அழைத்துச் சென்ற படையினர் பின்னர் சந்தேகத்திற்குரிய முன்னாள் பெண் போராளிகளையும் கூட்டிச்சென்றனர்'' என 21 வயதுடைய ராணி கூறுகிறார்.

''குறித்த சில குடும்பங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளையும் படையினர் கைதுசெய்தபோது பெற்றோர் கதறி அழுதார்கள்'' என அவர் தொடர்ந்தார்.

''கடந்த ஏப்ரலில் நான் விடுவிக்கப்படும் வரைக்கும் அவர்கள் என்னை விசாரித்துக்கொண்டே இருந்தார்கள். 11 மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த விசாரணைகளின் போது வேறுபட்ட விசாரணையாளர்கள் என்னிடம் ஒரே கேள்வியைக் கேட்டுத் துன்புறுத்தினார்கள். நான் கூறிய பதிலை அவர்கள் நம்பவில்லை'' என புலிகள் அமைப்பின் முன்னாள் களமுனைப் போராளியான 36 வயதுடைய சுகந்தி தன்கதையினைக் கூறுகிறார்.

ஆனால் தடுப்பிலிருந்து வெளியே வந்திருக்கும் ஜெயா கூறும் சம்பவங்களை விட சுகந்தியினது அனுபவங்கள் வித்தியாசமானதாகவே உள்ளன. தனக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு விசாரணையே இடம்பெற்றதாகக் கூறிய ஜெயாதான் அதிக வேலை வாங்கப்பட்டதாகக் கூறியிருந்தார்.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதலொன்றில் தனது காலொன்றை இழந்த சுகந்தி புலிகளமைப்பின் பொதுமக்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பில் பணியாற்றியிருக்கிறார்.

ஆனால் கிளிநொச்சி அரச படைகளிடம் விழுந்திருந்த நிலையில் போரின் இறுதி நாள்களில் தங்களது உறுப்புகளை இழந்து நின்ற உறுப்பினர்களும் களமுனைக்குச் செல்லவேண்டும் எனப் பணிக்கப்பட்டதாக அவர் எங்களிடம் தெரிவித்தார்.


''கிளிநொச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் உடல் உறுப்பிழந்த போராளிகளுக்கான கூட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த புலிகளின் குரல் நிறுவனத்தின் பொறுப்பாளர், அங்கங்களை இழந்த போராளிகளான நாங்களும் களமுனைக்குச் செல்லவேண்டும் எனப் பணிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்'' என்றாள் சுகந்தி.

இரண்டாவது முன்னணிக் காப்பரண் ஒன்றில் ஏனைய உடல் உறுப்பிழந்த போராளிகளுடன் சுகந்தியும் நிலைப்படுத்தப்பட்டிருக்கிறாள். மே 13ஆம் நாளன்று மோதல்கள் உக்கிரமடைய படையினர் முன்னணிக் காப்பரணை உடைத்து உள்நுழைய சுகந்தி காயமடைந்த தனது சகாவுடன் பின்வாங்கியிருக்கிறாள்.

''உயிரற்ற உடல்களும் காயமடைந்தவர்களுமே எங்கும் நிறைந்திருந்தனர். போராளிகள், பொதுமக்கள் என எந்த வேறுபாட்டையும் அங்கு காண முடியவில்லை.

நாம் என்ன செய்யவேண்டும் எனக் கட்டளையிடுவதற்குத் தளபதிகள் கூட அங்கில்லை. இந்த நிலையில் நாங்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதுதான் பொருத்தமானது என எனக்குப் பொறுப்பாக இருந்த போராளி கூறினார்'' எனச் சுகந்தி தன்கதையினை எங்களிடம் விவரித்தாள்.



> "முதலில் ஆண்களை மாத்திரம்தான் அழைத்துச் சென்ற படையினர் பின்னர் சந்தேகத்திற்குரிய முன்னாள் பெண் போராளிகளையும் கூட்டிச் சென்றனர்."

மே 19ஆம் நாளன்று ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டு அரசாங்கத்தினால் நிர்வாகிக்கப்படும் 'புனர்வாழ்வு' முகாமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

சுகந்தி விடுவிக்கப்பட்டபோதும் அவள் அரசாங்கத்தினது புலனாய்வாளர்களால் அடிக்கடி அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்.

இவரது வீட்டுக்கு அடிக்கடி செல்லும் புலனாய்வாளர்கள் இவர் வீட்டில் இல்லாதிருந்தால் 'எங்கே?' எனக் கேட்டு துருவித் துருவி விசாரிக்கிறார்களாம்.

''நிர்வாக வேலைகளில் எனக்கிருந்த அனுபவம் மற்றும் கணினி அறிவு ஆகியவற்றினால் எனக்கொரு வேலை கிடைத்திருக்கிறது. நான் உண்மையில் வேலை செய்கிறேனா என நான் உறுதிப்படுத்த வேண்டும் என புலனாய்வாளர்கள் கூறுகிறார்கள். உண்மையைக் கூறப்போனால் நான் விடுவிக்கப்பட்டதாகவே உணரவில்லை'' என்கிறார் சுகந்தி.

''இலங்கையிலுள்ள தடுப்புமுகாம்களே அளவில் பெரியன'' என யூரிகளின் அனைத்துலகக் குழு என்ற அமைப்பு கடந்த செப்ரெம்பரில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

''விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்ட 565 சிறார்களுக்கான தனியான புனர்வாழ்வு முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இங்கு யுனிசெப் நிறுவனத்தினர் தங்கு தடையின்றிச் சென்றுவரக்கூடியதாக இருந்தது. இங்கு புனர்வாழ்வு பெற்றவர்கள் அனைவருமே தற்போது விடுவிக்கப்பட்டுவிட்டனர். இது ஆக்கபூர்வமானதொரு அம்சம்'' என அந்தக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

எது எவ்வாறிருப்பினும், தடுப்பிலுள்ளவர்கள் தொடர்பில் முறையான நீதி விசாரணையினை மேற்கொள்ளாதிருக்கும் அரசாங்கமானது இது தொடர்பான அனைத்துலகச் சட்ட விதிகளை மீறுதாகவும் தடுப்பிலுள்ளவர்களின் அடிப்படை உரிமைகளை மதித்துச் செயற்படத் தவறிவிட்டதாகவும் யூரிகளின் அனைத்துலகக் குழு என்ற இந்த அமைப்பு குற்றம் சுமத்துகிறது.

ஆனால் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுக்கிறார்.

''காத்திரமான ஆதாரங்கள் எதுவுமின்றி அனைத்துலக ஊடகங்களும் அனைத்துலக சமூகமும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. ஆனால் உண்மை இங்கு வேறுவிதமாக உள்ளது'' என்கிறார் அவர்.

''அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தடுப்பு முகாம்களுக்கு அனைத்துலக செஞ்சிலுவைக்குழு சென்று பார்வையிடுவதற்கு அனுமதிக்கலாமே எனக் கோரியபோது,'' ''நான் அடிமட்டத்தில் வேலை செய்பவன். நீங்கள் இந்தக் கேள்வியினை உயர் பதவிகளில் இருக்கும் தொடர்புடைய அதிகாரிகளிடம்தான் கேட்கவேண்டும்'' என்கிறார் புனர்வாழ்வு ஆணையாளரான பிரிகேடியர் ரணசிங்க.

முன்னாள் போராளிகள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் முகாம்கள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களுக்குச் சென்றுவருவதற்கான அனுமதி கடந்த ஜுலை 2009 முதல் அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினருக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

''பூசா தடுப்பு முகாம் உள்ளிட்ட குறித்த சில தடுப்பு மையங்களுக்குச் சென்று வருவதற்கான அனுமதி எங்களுக்கு கிடைக்கவில்லை. நீண்டகாலமாகவே இருக்கும் அதேநேரம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தடுப்பு முகாம்களுக்கு நாங்கள் அனுமதிக்கப்படுவதில்லை'' என அனைத்துலக செஞ்சிலுவைக்குழுவின் கொழும்பு பணியகப் பேச்சாளர் சரசி விஜயரத்தின கூறுகிறார்.

இவர்களுக்கான அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதைக் கண்காணிப்பது முடியாத காரியமே.

அரச படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட விடயத்தினைப் போலவே முன்னாள் போராளிகளின் தடுப்பு விடயமும் கேட்கப்படமுடியாத விடயமாகச் இலங்கையில் மாறிவிட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை திரேசம்மா (லீலா)



இல.8, அடம்பன் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.225, பாங்சால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை திரேசம்மா (லீலா) சனிக்கிழமை (06.11.2010) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அவுறான் தம்பு- தம்பு குமாரத்தி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற சவிரி இராயப்பு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராயப்பு அந்தோனிப்பிள்ளையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் Dr.எட்மன் ஞானஜோதி (பணிப்பாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு), எடின் ஜெகஜோதி (ஆசிரியர்), அன்ரன் அருள்ஜோதி (நோர்வே), எட்வின் அமலஜோதி, பெனடிக் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயும் சாந்தினி, மரிய திரேசா, மொறின், லலி, காலஞ் சென்ற கிஞ்சிலி வில்பிறட் ஆகியோரின் மாமியும் சோபனா, Dr.றொசாணா (USA), தர்சிகா, ஜோதிகா, தர்மினி, அலன், ஜெசிக்கா (Norway), மேரி லக்சி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற மிக்கேல் அந்தோனிப்பிள்ளையின் சகோதரியும் சரசுமணி, அழகுமணி, மனோன்மணி ஆகியோரின் சிறியதாயும் ஜீவா, ஜெயராஜ், தவம், தர்மா, ஜெயசுதா காலஞ்சென்ற யோகேந்திரா மற்றும் யோதினி, விஜிதா, மதி, மாலா, கலா, சிறி, ஜொய்சி, மனோகரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (13.11.2010) பிற்பகல் 4 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் திருப்பலியுடன் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, அடம்பன் வீதி,
மூன்றாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (105713)

தகவல்:
எடின் ஜெகஜோதி.

## அருளாநந்தம் ஜெபநேசன்

(முன்னாள் முகாமையாளர் H.N.B. வவுனியா)



புனித தோமையார் ஒழுங்கை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அருளாநந்தம் ஜெபநேசன்(06.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அருளாநந்தம்- அக்னசம்மா தம்பதியரின் அன்பு மகனும் திரு.திருமதி இராயப்பு- ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் றதியின் அன்புக் கணவரும் ஜீன், லக்ஷி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

தகவல்:
அருளாநந்தம் அருள்நேசன்
(சகோதரர்).

'மேரி வாசா',
மாசீசன்கூடல்,
இளவாலை.
தொ.பே.: 0217210166. (105715)

# பின்தொடரும்......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி) எவ்வாறிருப்பினும் போருக்குப் பின்னான இந்தச் சூழமைவில், இனநல்லிணக்கம் பற்றியே அனைவரும் பேசிவரும் நிலையில் வெளித்தொடர்புகள் எதுவும் அற்ற நிலையில் புலிச் சந்தேக நபர்கள் பெருமளவில் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் விடயம் முதன்மையான அம்சமாக மாறிவிட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்படுவதற்கு முன்னர் அது நாட்டினது தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் காத்திரமான செல்வாக்கினைக் கொண்டிருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தடுப்பில் வைக்கப்பட்டிருப்பதை தமிழ்ச் சமூகத்தினர் தொடர்ந்தும் சகித்துக்கொள்ளமாட்டார்கள். தங்களின் அன்புக்குரியவர்கள் இராணுவத்தின் தடுப்பில் இருப்பதாக நம்பும் ஆயிரக்கணக்கானவர்கள் அரசாங்கம் அமைத்திருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் இனநல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் தோன்றிச் சாட்சியமளித்திருக்கிறார்கள்.

கணவன் தடுப்பில் இருக்கும் பாத்திமாவிடம் "போருக்குப் பின்னான நிலைமையில் முதன்மையான விடயமாக நீங்கள் கோருவது எது" எனக் கேட்டேன். "எனது கணவர் வீடு திரும்பவேண்டும்" என்றார் அவர்.

அனைத்துலக செஞ்சிலுவைக்குழுவின் பேச்சாளர் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளரான பிரிகேடியர் ஆகியவர்களைத் தவிர இந்தப் பத்திக்குக் கருத்துத் தெரிவித்த ஏனையவர்களது பெயர்கள் பாதுகாப்புக் கருதி மாற்றப்பட்டிருக்கிறது. நன்றி: புதினப்பலகை

## தேங்காய் விலை உயர்வு

யாழ்ப்பாணத்தில் தேங்காயின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து செல்வதாக பொது மக்கள் தெரிவித்தனர். தேங்காய் ஒன்றின் ஆகக்குறைந்த விலை 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது.

தேங்காய் ஒன்று 30 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. (த-51)

## தவறிவிட்டது

முதலாம் வட்டாரம், அனலைதீவு என்னும் முகவரியுடைய மருதையினார் புவிதரன் என்பவரின் தேசிய அ.அ.(853153281V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 492, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சைக்கிள் திருத்தும் கடை) என்னும் முகவரிக்கோ அல்லது 077959 6356, 077 817 7162 என்ற தொ.பே. இலக்கங்களுடனோ தொடர்புகொள்ளவும்.

## TVகள் மலிவு விற்பனை

50இற்கும் மேற்பட்ட Sony wega Flat 14''-9000/=, 21''-14,000, 25''-20,000/=, 29''-25,000/= பொக்ஸ் வகைகள் (JBL), அம்பிளிவயர்கள் DTS, குளிர்சாதனப் பெட்டிகள், Cassete, Deck, Radioகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. VCR, DVD என்பனவும்.
தொடர்பு: 0771393670, 0214920853.
இ.மகேஸ்வரன் (அப்பாக் கொம்பனி),
சீவிப்புலியடி (ஆரம்பபாடசாலை அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியை
செல்வி கார்த்திகா நரசிங்கவேல் அவர்களது தாயார்
**நரசிங்கவேல் அம்பாலிகை**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, உடுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை)
அவர்கள் 06.11.2010 (சனிக்கிழமை) காலமானார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய நண்பர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# விழி நீர் சொரியும் ஓராண்டில்...



மண்ணில்:
13.01.1950

விண்ணில்:
21.10.2009

அமரர் செல்லமுத்தர்
**திருலோகச்சந்திரன்**
(மணி)
(உரிமையாளர், விமலா ஸ்ரூடியோ)
திதி: சதுர்த்தி (09.11.2010)

அன்புடன் எமை வளர்த்தீர்கள் அப்பா
ஆசையுடன் அரவணைத்தீர்கள் அப்பா
உயர்வு பெற்று நாம் வாழ
அயராது உழைத்தீர்கள் அப்பா
நாம் வாழும் நேரத்தில் சோர்வுற்று -நாம்
தவிக்க எம்மை விட்டுப் பிரிந்ததும் - ஏன்
அப்பா! ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறுமோ எம் துயரம்

என்றென்றும் உங்கள்
நினைவுடன்:
மனைவி:தி.விமலாதேவி
பிள்ளைகள்:
தி.மதனரூபன், தி.அபிராமி.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**சுப்பிரமணியம் பத்மசுதன்**
(ரமணன்)



அன்னையின் மடியில்
28.08.1976
ஆண்டவன் அடியில்
08.10.2010

அன்பே ஆருயிரே
எமது அருமைக் குலவிளக்கே
எமை எல்லாம் பரிதவிக்க விட்டு
எங்கையையா நீ சென்று விட்டாய்
தேடியலைகிறோம் உம் உருவை நாடி
நீ எம் முன்னே வரமாட்டாயா?
உம் நினைவால் குடும்பத்தினர் எல்லோரும்
சிலையாகி விட்டோமே
மீண்டும் ஒருமுறை எங்கள் குலவிளக்காய்
வரமாட்டீரா அன்பு ரமணா...

அமரத்துவம் அடைந்த எமது பத்மதீபம் (ரமணன்) அவர்களின் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம். அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும் மற்றும் பலவகையிலும் உதவிபுரிந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிலும் பெரிது"
(திருக்குறள்)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் தவராசா குகேஷன்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 21.11.1989 | 01.11.2008 |

திதி: ஐப்பசி பூர்வபக்க சதுர்த்தி

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள்சுமந்து
இந்நிலத்தில் வந்துதித்த வான்மதியே குகேஷன்!
குடும்பக் கதிரவனின் குமரனாம் குகேஷனை
இடும்பைகொள் காலனவன் ஏற்றதும் ஏனோ?
ஈராண்டு இறப்பிலும் இப்பிறப்பு இறப்பிலும்
ஓராட்டி நாம்வளர்த்த உத்தமனே! எம்மிதயம்
ஆறாத் துயரில் தான் ஆழ்ந்துளவே! குகேஷனே நீ
நீராழ் உலகில் நிலையான நித்திகொள்க!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

நி.மு:
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

த.மு:
புற்றளை,
புலோலி தெற்கு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால் நோயாளர் அவதி

மட்டக்களப்பு,நவ.9

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அங்கு சிகிச்சைக்காக செல்வோர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை புதிய கட்டடத்தில் செயற்பட ஆரம்பித்து ஒரு மாதம் கூட கடக்காத நிலையில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளொன்றுக்கு 200இற்கும் 300இற்குமிடையிலான நோயாளிகள் இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்நிலையில் இவ்வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகளை வைத்தியர்கள் பரிசோதித்து விட்டு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வெளியில் மருந்தைப் பெறுமாறு சிட்டை எழுதிக் கொடுத்தனுப்புகின்றனர்.

இது தொடர்பாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் யு.எல்.நஸ்ருதீன் குறிப்பிடுகையில், வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு என்பது உண்மைதான். எனினும் இத்தட்டுப்பாடு அண்மையில் ஏற்பட்ட ஒன்றல்ல எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கும் மாகாண சுகாதார அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் டாக்டர் நஸ்ருதீன் தெரிவித்துள்ளார்.

# மருதமுனையில் போதைப்பொருள் தொழிற்சாலை திடீர் முற்றுகை

கல்முனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனைப் பிரதேசத்தில் சட்ட விரோத மாக இயங்கி வந்த போதைப்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையொன்றைக் கல்முனைப் பொலிஸார் சனிக்கிழமை முற்றுகையிட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் உற்பத்தித் தொழிற்சாலை கடந்த 9 வருடங்களாக மருதமுனையில் இயங்கி வந்துள்ளது என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரான் பெரேராவின் பணிப்பின் பேரில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஜே. ஜீவரத்ன தலைமையிலான 12 பேர் கொண்ட பொலிஸ் குழுவினரே போதைப்பொருள் தொழிற்சாலையை முற்றுகையிட்டுள்ளனர்.

இம்முற்றுகையின்போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் 14 கிலோ கிராம் கஞ்சாத் தூள், 1,500 கிராம் லேகியம், போதைப் பொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## மாணவி சுபதாவுக்கு தங்கப் பதக்கம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற திருக்கோவில் கலைமகள் வித்தியாலய மாணவி சுபதா மாதவன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சித்தியடைந்து சாதனை படைத்த மாணவிக்கு தங்கப் பதக்கத்தை அணிவித்தார்.

திருக்கோவில் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எம். புள்ளைநாயகம், மாணவியையும் கற்பித்த ஆசிரியர்களையும் பொன்னாடை போத்துக் கௌரவித்தார்.

# நாவிதன்வெளிப் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்து சகலரும் உழைக்கவேண்டும்

## கௌரவிப்பு விழாவில் வேண்டுகோள்

மட்டக்களப்பு,நவ.9

கடந்தகால யுத்த சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நாவிதன்வெளிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்கள், புத்திஜீவிகள், சமூக முன்னோடிகள், நலன் விரும்பிகள் ஆகிய அனைவரும் ஒருங் கிணைந்து உழைக்க வேண்டும் என நாவிதன்வெளிப் பிரதேசசபைத் தவிசாளர் ரி. கலையரசன் தெரிவித்தார்.

நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 15ஆம் கிராம உதயதீபம் சமூக மேம்பாட்டு அமைப்பின் ஆதரவில் நடைபெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு விழாவில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைவர் எஸ்.தயாநிதி இதற்குத் தலைமை வகித்தார். பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதேச சபைத் தவிசாளர் ரீ.கலையரசன் இதில்




தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த அமைப்பு எமது பிரதேச கல்வி அபிவிருத்திக்கு அளப்பரும் சேவையாற்றி வருகிறது. கல்விக்காக உழைத்தவர்கள் என்றென்றும் மரணிப்பதில்லை. அவர்களின் நாமம் என்றென்றும் மக்களால் பேசப்படும். கல்விச் செல்வத்தை சமூகத்திற்கு அளிக்கும் ஆசான்களையும் எமது பிரதேச மக்கள் மறக்கமாட்டார்கள் - என்றார்.

இந்த அமைப்பு பின்தங்கிய மாணவர் களின் நலன் கருதி விசேட வகுப்புகளை நடத்தி வருகிறது. கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் இன்று நாவிதன்வெளிப் பிரதேசம் கல்வியில் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டு வருகிறது. இது எமது பிரதேச மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த தரம் - 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எஸ்.கனோஜா, எல்.வினுஜா, கற்பித்த ஆசிரியர் ஏ.சர்வேஸ்வரன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நாவிதன்வெளிப் பிரதேசத்தில் சேவை யாற்றிவரும் பிரதேசசபைத் தவிசாளர் ரி.கலையரசனும் பொதுமக்களால் பெரிதும் கௌரவிக்கப்பட்டார்.

(ளி)

# சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலம் டிசெம்பரில் ஆரம்பம்

## விசேட வேலைகள் துரித கதியில்

நுவரெலியா,நவ.9

எதிர்வரும் டிசெம்பர் 20 ஆம் திகதி பௌர்ணமி தினத்தோடு ஆரம்பமாகும் சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலத்தையொட்டி பல்வேறு வேலைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதானமாக படிகள் அமைத்தல், மின் கம்பங்கள் நட்டு




மின்கம்பிகளை மலை உச்சி வரை கொண்டு செல்லல், சுகாதார சேவை ஏற்பாடுகள், பொலித்தீன் பாவனையைத் தடைசெய்தல், கழிவறைகளை அமைத்தல் போன்ற பல வேலைகளை மேற்கொள்வதற்கு நுவரெலியா மாவட்ட இளைஞர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வேலைகள் மாவட்ட உதவி அரச அதிபர் கே.என். சுனந்த பியசிறி அம்பகமுவ பிரதேசசபை முதல்வர் க.நகுலேஸ்வரன், உதவி முதல்வர் உதித்த ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளன.

இது சம்பந்தமாக கடந்த 4 ஆம் திகதி நுவரெலியா மாவட்டச் செயலாளர் காரியாலய கேட்போர் கூடத்தில் விசேட கூட்டமும் நடைபெற்றது.

சிவனொளிபாதமலை புண்ணிய பூமியை சுகாதாரமாக வைத்து கொள்ளவும், அன்றாடம் அங்கு சேரும் குப்பைகளை அகற்றவும், குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கவும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணம் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு என மாகாண சுற்றுச்சூழல் பாதுகாப்பு சபை துணியினால் தைக்கப்பட்ட 5லட்சம் உறைகளை வழங்கவுள்ளது.

அதேவேளை, போதைப் பொருள் பாவனை, காடுகளை அழித்தல் பக்தர்களுக்கு இடையூறு செய்தல், சுகாதார சீர்கேடான உணவுப்பொருள்கள் விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கென நல்ல தண்ணீர் பொலிஸாரால் விசேட பிரிவுகள் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், பாடசாலை சிறுவர்கள் மத்தியில் சுற்றுச் சூழல் சம்பந்தமான விவரணச் சித்திரப் ("போஸ்டர்") போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுசூழல் பற்றிய போஸ்டர் வரைபட போட்டியில் ஹட்டன் வலய பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு ஹட்டன் வலயப் பணிப்பாளருக்கு வரை படங்களை அனுப்பலாம்.

இம்முறை சிவனொளிபாதமலை நடுப்பகுதியில் வைத்திய முகாம் ஒன்றை 24 மணி நேரமும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புனித பூமியாகக் கருதப்படும் சிவனொளி பாதமலைப் பகுதியில் குறிப்பாக உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகள், ஹோட்டல்களில் மதுபானம், போதைபொருள் விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(ளி)

## மத்திய மாகாணத்தில் பெரிய வெங்காய உற்பத்தி அமோகம்

கண்டி,நவ.9

முழு நாட்டுக்கும் தேவையான பெரிய வெங்காயத்தை மத்திய மாகாணத்திலேயே முழுமையாக உற்பத்தி செய்ய முடியும் என மாகாண விவசாய அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

மாத்தளை, கல்வெல, தம்புள்ளை போன்ற பகுதிகளில் போதியளவு பெரிய வெங்காயத்தை உற்பத்தி செய்ய முடியும்.

எமது நாட்டிற்கு 20,000 கிலோ கிராம் பெரிய வெங்காய விதை கள் தேவைப்படுகின்றன. இதில் 7,500 கிலோகிராம் தம்புள்ளையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நாட்டுக்குத் தேவையான பெரிய வெங்காய விதையை அடுத்த வருடம் மாத்தளை மாவட்டத்தில் முழுமையாக உற்பத்தி செய்யலாம் - என அவர் மேலும் தெரிவித்தார்.(ளி)

# மத்திய மாகாண சாஹித்திய விழா

கண்டி,நவ.9

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா எதிர்வரும் 13ஆம் திகதி மு.ப 10 மணிக்கு ஹட்டன் டி.கே.டபிள்யூ. மண்டபத்தில், மாகாண தமிழ்க்கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா தலைமையில் ஆரம்பமாகவுள்ளது

முதல்நாள் நிகழ்வாக காலை 10.30 மணிக்கு "கோ.நடேசய்யர் அரங்கம்" நடைபெறும். பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்துகொள்வர்.

இரண்டாவது அமர்வாக "இரா.சிவலிங்கம் அரங்கம்" அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். பிரதம அதிதியாக ஊவா மாகாணசபை அமைச்சர் செந்தில் தொண்டமான், சிறப்பு அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராஜதுரை மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்துகொள்வர்.

இரண்டாம் நாள் அமர்வு "சி.வி.வேலுப்பிள்ளை அரங்கம்" 14 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு இடம்பெறும். பிரதம அதிதியாக மத்திய மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க, கௌரவ அதிதிகளாக மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சர் ஓ.நிமல் பியதிஸ்ஸ, ஹட்டன் நகர சபைத் தலைவர் ஏ.நந்தகுமார் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்துகொள்வர். (ளி)

# கண்டி தனியார் பஸ் சேவைகள் சீரில்லாததால் பொதுமக்கள் அவதி

கண்டி,நவ.9

கண்டி மாவட்டத்தில் சேவையிலீடுபடும் தனியார் பஸ்கள் கால அட்டவணைக்கேற்ப சேவையில் ஈடுபடாததால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்கள் சரியான நேரத்திற்கு வராததால் பயணிகள் பஸ் நிலையங்களில் பல மணிநேரம் காத்து நிற்கவேண்டியுள்ளது.

இதனால் குறித்த நேரத்திற்கு வேலைகளைச் செய்ய முடிவதில்லை. குறிப்பாக வைத்தியசாலைகளில் உள்ள நோயாளர்களைப் பார்க்கச் செல்வோர் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்கள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

ஆசிரியர்
A.M. சந்திரசேகர்
கொழும்பு.

G.C.E.(O/L)
விசேடவலம்-5
வெளியீடு-2
கொழும்பு


## கணிதம் - I பகுதி - A நேரம்: 2 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. மோட்டார் கார் ஒன்று ஒரு லீற்றர் பெற்றோலில் சராசரியாக 9km தூரம் செல்லத் தக்கது. இதற்கேற்ப 12 லீற்றர் பெற்றோலில் அவ்வாகனம் செல்லக்கூடிய தூரத்தைக் காண்க.

02. சுருக்குக. $0.1 + 0.1 \times 0.2$

03. இங்கு காட்டப்பட்டுள்ள முக்கோணி ABCஇல் AB = AC ஆகும். பக்கம் BC ஆனது D வரைக்கும் நீட்டப்பட்டுள்ளது. $A\hat{C}D = 112^0$ எனின், $A\hat{B}C$ பெறுமானத்தைக் காண்க.





04. சுருக்குக. $x/2 - x/4$

05. ஒரு நாற்பக்கலில் மூலைவிட்டங்கள் பக்கங்களுடன் அமைக்கும் கோணம் $45^0$ எனின், இந்நாற்பக்கலின் சிறப்புப் பெயர் யாது?

06. சுருக்குக. $\sqrt{12} \times \sqrt{6}$

07. தரப்பட்டுள்ள வென் உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தொடைக்குறியீட்டில் காட்டுக.





08. $(x^2 - 5x - 24)$இன் ஒரு காரணி $(x + 3)$ ஆகும். அதன் மற்றைய காரணியைக் காண்க.

09. 1 தொடக்கம் 6 வரையுள்ள எண்களை முகங்களில் குறிக்கப்பட்ட சீரான தாயக் கட்டை ஒன்று இரு முறைகள் எறியப்பட்டது. இரு எறிதல்களிலும் பேறுகளின் கூட்டுத்தொகையாக நான்கு பெறக்கூடிய நிகழ்தகவைக் காணக.

10. 0.02 என்பதை சதவீதமாகக் காட்டுக.

11. ABC எனும் நேர்கோட்டில் $A\hat{B}O = x$, $C\hat{B}O = y$ ஆகவும், $x - y = 30^0$ ஆகவும் இருப்பின் x, y இன் பெறுமதி யாது?





12. சுருக்குக. $2x / 2(x - 1) - 1/x - 1$

13. ஒரு கடையில் விற்பனையின் பின் எஞ்சியிருந்த ஆறு அரிசிப் பொதிகளின் நிறைகள் 12kg, 15kg, 12kg, 18kg, 10kg, 11kg ஆகும். இவற்றின் இடைநிறையிலும் குறைந்த நிறையை உடைய பொதிகளின் எண்ணிக்கை யாது?

14. 0.3 ஹெக்டெயர் பரப்பளவுள்ள காணி ஒன்றின் விலை ரூபா 12,000 எனின், $500m^2$ பரப்பளவு காணியின் விலையைக் காண்க.


15. தரப்பட்டுள்ள வரிப்படத்தில் மையம் O ஆகும். கொடுக்கப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி aஇன் பெறுமானத்தைக் காண்க.




16. $S = ut + 1/2\, at^2$ என்ற சமன்பாட்டில் aஐ எழுவாயாக மாற்றுக.



17. தரப்பட்டுள்ள முக்கோணி ABCஇல் BC//XY ஆகவும், AX = 2cm, AB = 3cm, AY = 4cm ஆயின்,
    1) AX/ABஇற்குச் சமனான ஒரு விகிதத்தைக் காண்க.
    2) CYஇன் பருமன் யாது?




18. $x - 9y = -13$, $7x + y = 37$ என்னும் ஒருங்கமை சமன்பாடுகளை தீர்க்காமல் $(x - y)$இன் பெறுமானத்தைக் காண்க.


19. சில்லு ஒன்று 0.88km தூரம் சென்றபோது 1000 தடவைகள் சுழன்றது. சில்லின் ஆரையை சென்ரிமீற்றரில் கணிக்குக.

20. ஒருவர் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 200இற்கு மாதாந்தம் ரூபா 3.00 வட்டியாக செலுத்துகிறார் எனின், ஆண்டு வட்டி வீதத்தைக் காண்க.


21. $(a - b)^2 = 0.36$ எனின், $(a - b)$ இன் பெறுமானத்தைக் கூறுக.

22. ஒரு மதிலை கட்டி முடிப்பதற்கு 4 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவைப்பட்டது.
    1) இவ்வேலையைச் செய்துமுடிக்க எடுக்கும் மனித நாட்கள் எவ்வளவு?
    2) 3 மனிதர்கள் மதிலை கட்டி முடிக்க எடுக்கும் காலத்தைக் காண்க.

23. தரப்பட்டுள்ள உருவில் AB = 5cm, CM = 6cm BN= 3cmஎனின்,
    1) முக்கோணி ABCஇன் பரப்பளவு,
    2) AC இன் நீளம் என்பவற்றைக் காண்க.




24. உருவில் O வை மையமாகக்கொண்ட வட்டத்தில் ABCD என்பன பரிதியில் உள்ள புள்ளிகளும், $C\hat{A}B = 40^0$, $B\hat{T}C = 70^0$ யும் ஆயின்,
    1) x 2) y ஆகியவற்றைக் காண்க.





25. ஒருவர் கையடக்கத் தொலைபேசி ஒன்றை 12% வற் (VAT) வரியுடன் ரூபா 8960இற்கு வாங்கினார் எனின், வற்வரி இன்றி அப்பொருளின் விலையைக் காணுங்கள்.


26. $lg\,15 = 1.1761$ ஆகவும், $lg3 = 0.4771$ ஆகவும் இருப்பின் $lg\,25$ ஐக் காண்க.

27. சுருக்குக. $(1/3 + 1/2) \times 2/5$

28. வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு P எனும் தென்னை மரமானது Q எனும் தென்னை மரத்துக்கு வடக்கே அமைந்துள்ளது. மரம் P இன் உச்சியில் ஏறி இருக்கும், ஒருவர் R எனும் இன்னொரு மரத்தினை $225^0$ திசைகோளில் நோக்கு கிறார்.
    1) தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய NPSஇன் பெறுமதியைக் காண்க.
    2) Q விலிருந்து பார்க்கும்போது Rஇன் திசைகோள் யாது?




29. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு AC ஆனது ஒரு வட்டத்தின் விட்டமாகும். BC =5cm ஆயின், சைன் $30^0 = 1/2$ எனக்கொண்டு ACஇன் நீளத்தைக் காண்க.




30. தரப்பட்டுள்ள நாற்பக்கல் ABCDஇல் AB, BC, CD, DA ஆகியவற்றின் நடுப்புள்ளிகள் முறையே L, M, N, O ஆகும். இதில் LO = MN எனக்காட்டுங்கள்.






## கணிதம் - I பகுதி - B நேரம்: 2 மணித்தியாலங்கள்

01. ராகுலன் பிரதீசன், சரத் ஆகியோர் சேர்ந்து முதலீடு செய்த தொகையும், அவர்களது முதலீடு வியாபாரத்தில் இருந்த காலமும் கீழே உள்ள அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. இவர்கள் ஆண்டுதோறும் இலாபத்தை பகிர்ந்துகொள்வதாக ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

| பெயர் | முதலீட்டு காலம் | தொகை |
|---|---|---|
| ராகுலன் | 2008 - 04 - 01 | 120,000 |
| பிரதீசன் | 2008 - 05 - 31 | 80,000 |
| சரத் | 2008 - 08 - 01 | 90,000 |


1) அவர்கள் ஒவ்வொருவரும் முதலீடு செய்த தொகைக்கும் அத்தொகை வியாபாரத்தில் இருந்த காலத்திற்கும் ஏற்ப இலாபம் பகிரப்படுமாயின் இலாப விகிதத்தைக் காண்க.
2) இவ்வியாபாரம் ஆரம்பித்து ஓர் ஆண்டின் இறுதியில் ரூபா 74,000 இலாபமாகப் பெறப்பட்டது எனின், அவர்கள் ஒவ்வொருவரும் பெறும் இலாபத்தை தனித்தனியே காண்க.
3) குறித்த ஓர் ஆண்டில் சரத்திற்கு ரூபா 15,000 இலாபமாக கிடைத்தது எனின், அதே ஆண்டில் ராகுலனிற்கும் பிரதீசனுக்கும் கிடைக்கப்பெற்ற இலாபத்தைத் தனித்தனியே காணக.

02. ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் ஒரு பகுதி கீழே காணப் படுகிறது.


> காணியைக் கொள்வனவு செய்ய கடனைப் பெறுவதற்கு ஆண்டு எளிய வட்டி 15% ஆகும்.

மேற்குறித்த தகவல்களுக்கேற்ப
1) எக்கடன் தொகைக்கு ஓர் ஆண்டுக்கு ரூபா 2,400 வட்டி அறவிடப்படும்?
2) ரூபா 400,000 ஐ கடனாகப் பெற்ற ஒருவர் மூன்று ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதற்கு கொடுக்கவேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.
3) மேலே கூறப்பட்ட வட்டி வீதமானது 10% மாகக் குறைக்கப்பட்டு கூட்டு வட்டியாக அறவிடப்படுமெனின், ரூபா 400,000இற்கு இரண்டு ஆண்டுகளுக்குச் செலுத்தப்படும் வட்டி எவ்வளவு?
4) ரூபா P தொகையை எளிய வட்டிக்கு கடனாகப் பெற்ற ஒருவர் t ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதற்கு கொடுக்கவேண்டிய மொத்தப் பணம் ரூபா A எனின், $A = P(1 + 3t/20)$ எனக்காட்டுக.

03. குறித்த நிறுவனம் ஒன்றில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிறைகளைக் கிட்டிய கிலோகிராமிற்கு பெறப்பட்டு வரையப்பட்ட வலையுரு வரையம் இங்கு காட்டப்பட்டுள்ளது.
1) இந் நிறுவனத்தில் தொழில்புரிவோரின் மொத்த எண்ணிக்கை யாது?
2) 80kg தொடக்கம் 100kg வரை உள்ளவர்களின் எண்ணிக்கை யாது?
3) இதன் ஆகார வகுப்பாயிடை யாது?
4) இவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணியை வரைக.





04. அகதிகளாக இருக்கும் ஒரு குழுவினருக்கு உதவும் பொருட்டு குறித்த ஒரு பாடசாலையிலுள்ள தரம் -11 கல்விகற்கும் 110 மாணவர்கள் கொண்டுவந்த உணவுப் பொருட்களையும் மாணவர்களின் எண்ணிக்கையையும் காட்டும் பூரணமற்ற வென்வரிப்படம் இங்கு காட்டப்பட்டுள்ளது. இவ் வென் வரிப்படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்க.
1) சீனியை கொண்டுவந்தவர்களின் எண்ணிக்கை 40 எனின், அரிசியையும், சீனியையும் மாத்திரம் கொண்டுவந்தவர்களின் எண்ணிக்கை யாது?




2) பால்மா வகையைக் கொண்டுவந்தவர்களின் எண்ணிக்கை 62 எனின், X இன் பெறுமானத்தைக் காண்க.
3) அரிசியைக்கொண்டுவந்தவர்களின் எண்ணிக்கை 50 எனின், பால் மாவை மாத்திரம் கொண்டுவந்தவர்களின் எண்ணிக்கை யாது?
4) அரிசியையும் பால்மாவையும் மாத்திரம் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கையை இந்த வென்வரிப்படத்தில் நிழற்றிக்காட்டுக.
5) இதில் குறைந்தது இரு உணவையேனும் கொண்டுவந்தவர்களின் எண்ணிக்கையைக் காணக.

05. உருவில் 1 மீற்றர் உயரமும் 0.5 மீற்றர் அகலமும் கொண்ட மரப்பலகை ஒன்றில் அரைவட்ட வடிவத்தையும் செவ்வக வடிவத்தையும் கொண்ட தளவாடி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. தளவாடியின் செவ்வகப் பகுதியின் உயரம் 60cm உம், அகலம் 42cmஉம் ஆகும்.
1) இத்தளவாடியின் மொத்தச் சுற்றளவைக் காண்க.
2) இம் மரப்பலகையின் மொத்தப் பரப்பளவைக் காண்க.
3) அரைவட்டப்பகுதியின் பரப்பளவைக் காண்க.
4) தளவாடியின் மொத்தப் பரப்பளவைக் காண்க.
5) தளவாடி பொருத்தப்பட்ட பகுதி தவிர்ந்த எஞ்சிய பகுதியின் பரப்பளவைக் காண்க.
6) தளவாடிகள் பொருத்தப்பட்ட பகுதி தவிர்ந்த எஞ்சிய பகுதியின் காண்க.




## கணிதம் - II பகுதி - A நேரம்: 2 மணித்தியாலங்கள்

01. ரூபா 60,000 பெறுமதியுள்ள ஒரு மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்யும் போது அதன் பெறுமதியில் 1/5 பங்கை தொடக்கத்தில் செலுத்தி மீதிப் பணத்தை ரூபா 4960, ரூபா 4880, ரூபா 4800, ரூபா 4720........ ரூபா 4080 என்றவாறு 12 மாதத் தவணைத் தொகையில் செலுத்தவேண்டும்.
1) எஞ்சிய 5ஆம் மாதம் தொடக்கம் 11ஆம் வரையுள்ள தவணைத் தொகைகளைக் காண்க.
2) ஆரம்பத்தில் பணத்தைக்கொடுத்த பின்னர் மேலும் கொடுப்பதற்கு எஞ்சி உள்ள பணம் யாது?
3) மேலதிகமாகக் கொடுக்கவேண்டிய பணம் எவ்வளவு?
4) குறையும் மீதிக்கேற்ப வட்டி அறவிடப்படுமெனின், ஆண்டு வட்டி வீதத்தைக் காண்க.
5) வட்டி வீதத்தை மாற்றாமல் சமமாதத் தவணைத் தொகைகளாகக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனின், ஒரு தவணைத்தொகையின் பெறுமானத்தைக் காண்க.

02. சார்பு $y = (x - 1)(-x - 3)$ இல் x இன் சில பெறுமானத்திற்கு ஒத்த yஇன் பெறுமானங்கள் இடம்பெறும் அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
| y | | -5 | | 3 | | | | | -12 |

(17ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a) $x = -5, x = -3, x = -1, x = 0, x = 2$ ஆக இருக்கும்போது yஇன் பெறுமானங் களைக் காண்க.

b) வரைபுத்தாளில் x அச்சு வழியே பத்துச்சிறிய சதுரங்களை ஓர் அலகாகவும், y அச்சு வழியே பத்துச்சிறிய சதுரங்களை இரு அலகாகவும் வகைக்குறிக்கு மாறு உள்ள அளவிடையை எடுத்து மேற்குறித்த பெறுமானங்களைப் பயன்படுத்திச் சார்பின் வரைபை வரைக.
உமது வரைபைப் பயன்படுத்தி,
1) திரும்பற் புள்ளியின் ஆள்கூற்றை எழுதுக.
2) xஇன் பெறுமானம் - 3 வரை அதிகரிக்கும்போது y இன் பெறுமானம் மாறும் விதத்தை உமது வரைபைக்கொண்டு எழுதுக.
3) சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
4) சார்பு நேராக உள்ளபோது xஇன் பெறுமான வீச்சைக் காண்க.
5) சமன்பாடு $x^2 + 4x - 2 = 0$இன் மூலகங்களைக் காண்க.

03. a) தீர்க்குக. $2/x - 5 - 3/2x - 10 = 1/4$

b) உருவில் ABC எனும் செங்கோண முக்கோணியில், செம்பக்கத்தின் நீளம் $(x + 2)$cm உம், ஏனைய இரு பக்கங்கள் முறையே $x$cm உம் $(x + 1)$cm ஆகும்.





1. தரப்பட்டுள்ள தரவுகளைக்கொண்டு x இல் ஓர் இருபடிச் சமன்பாட்டை உருவாக்குக.
2. வர்க்க நிறைவர்க்கங்களின் மூலம் அல்லது வேறு முறையில்அச் சமன் பாட்டை தீர்த்து முக்கோணியின் பக்கங்களின் நீளங்களை சென்றிமீற் றரில் தருக.

04. a) முதல் உறுப்பு a ஆகவும், பொது விகிதம் r ஆகவும் உள்ள பெருக்கல் விருத்தி ஒன்றின்,
1. nஆம் உறுப்பின் பெறுமதியைக் காண்பதற்கான சூத்திரத்தையும் முதல் n உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்பதற்கான சூத்திரத்தை யும் எழுதுக.
2. இச் சூத்திரத்தைப் பயன்படுத்தி -8, -4, -2....... என்ற தொடரின் முதல் ஐந்து உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

b) நீண்ட கம்பிச்சுருள் ஒன்றின் 20cm, 25cm, 30cm, 35,...... என்றவாறு வெட்டப்படுகிறது. இறுதியில் வெட்டப்பட்ட துண்டின் நீளம் 115cm ஐக் கொண்டதாகும்.
1. இவ்வாறு வெட்டப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கையைக் காண்க.
2. இக் கம்பிச்சுருளின் மொத்த நீளம் எவ்வளவு?

05. தரப்பட்டுள்ள முக்கோணி ABC இல் செங்குத்து உயரம் AX = 6.2cm, AB = 9.5cm, CX = 4.0cm ஆகும்.




1) கோணம் ABC இன் பெறுமானம் காண்க.
2) BX இன் நீளத்தைக் காண்க.
3) பக்கம் BX இன் நீளத்தை முழு எண்ணிற்கு மட்டந்தட்டி முக்கோணம் ABC இன் பரப்பளவைக் காண்க.

06. குறித்த ஒரு கடையில் நாள்தோறும் விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு பற்றிய விவரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| அரிசியின் நிறை kg | 01-05 | 06-10 | 11-15 | 16-20 | 21-25 | 26-30 | 31-35 | 36-40 | 41-45 | 46-50 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 2 | 3 | 4 | 6 | 10 | 5 | 4 | 3 | 2 | 1 |

1) எத்தனை நாட்களுக்கான தரவுகள் இங்கு காட்டப்பட்டுள்ளன?
2) அதிக எண்ணிக்கையான நாட்களில் விற்பனை செய்யப்பட்ட ஆயிடை எது?
3) அதிக எண்ணிக்கையான நாட்களில் விற்பனை செய்யப்பட்ட ஆயிடையின் நடுப் பெறுமானத்தை உத்தேச இடையாகக்கொண்டு நாளொன்று விற்பனை செய்யப் பட்ட அரிசியின் இடை நிறையைக் காண்க.
4) இக் காலப்பகுதியில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூபா 70 எனக்கொண்டு எதிர்வரும் மாதத்தில் 30 நாட்களின் அக்கடையில் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு?
5) 20kgஇற்கும் கூடுதலாக விற்பனை செய்த நாட்களின் சதவீதம் யாது?

04

## கணிதம் - II பகுதி - B நேரம்: 2 மணித்தியாலங்கள்

07. a) தீர்க்குக. $3x - 2y = 2,\ 2x + 5y = 33$

b) $A = \begin{pmatrix} 4 & 5 & 2 \\ 1 & 3 & 1 \end{pmatrix},\ B = \begin{pmatrix} -2 & 3 & 1 \\ 7 & -1 & 3 \end{pmatrix}$

1. தாயம் A இன் வரிசையை எழுதுக.
2. 2A + 2B இலிருந்து கிடைக்கும் தாயத்தை எழுதுக.

08. நேர்விளிம்பு, கவராயம் cm/mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக்கோடுகளைத் தெளிவாகக்காட்டி,
1) AB = 6.5cm, BC = 5cm, ABC = $135^0$ ஆகவுள்ள முக்கோணி ABC யை அமைக்குக.
2) பக்கம் AB ஐ நீட்டி C யிலிருந்து செங்குத்து ஒன்றை அமைக்குக. அது நீட்டப் பட்ட AB யை சந்திக்கும் புள்ளியை D எனப் பெயரிடுக.
3) கோணம் BDC இன் இரு கூறாக்கியை வரைக.
4) முக்கோணி ABC இல் பக்கம் B ஐத் தொட்டுக்கொண்டு C இனூடாக செல்லும் வட்டத்தை வரைக.
5) இவ்வட்டத்திற்கு இருக்கத்தக்க சமனான இரு தொடலிகளை குறிப்பிடுக.
6) $\sin 45^0 = 0.7071$ எனக்கொண்டு பக்கம் CDஇன் நீளத்தை முதல் தசமதானத்திற்கு காண்க.

09. ஒரு பக்க நீளம் 8.75cm ஆகவுள்ள சதுரக்குறுக்கு வெட்டைக் கொண்ட கனவுருவடி வான உலோகத்துண்டு ஒன்றின் தடிப்பு 0.74cm ஆகும். இவ் உலோகத்தை உருக்கி உலோகம் வீணாகாதவாறு xcm ஆரையும், ஆரையின் இரு மடங்கு உயரமுள்ள திண் மக்கூம்பு ஒன்று செய்யப்படுகிறது.
1) ஒரு கூம்பின் ஆரை x எனின், $x3 = 3x8.75^2 \times 0.74/2\pi$ எனக்காட்டுக.
2) $2\pi = 6.28$ எனக்கொண்டு மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி $x^3$இன் பெறு மானத்தைக் காண்க.
3) $x^3$இன் பெறுமானத்தைக் கிட்டிய முழு வெண்ணிற்கு மட்டந்தட்டி, இதிலிருந்து கூம்பின் ஆரையைக் காண்க.

10. கஜனி பாடசாலை செல்வதற்காக பஸ் வண்டியில் ஏறுகின்றார். அவரிடம் அளவிலும், வடிவிலும் சமனான ஐந்து ரூபா நாணயக்குற்றிகள் மூன்றும், இரண்டு ரூபா நாணயக் குற்றிகள் நான்கும் பையினுள் காணப்பட்டன. பாடசாலை செல்வதற்கான பஸ் கட்டணம் ரூபா 12 ஆகும். பஸ் நடத்துநர் பஸ் கட்டணத்தைக் கேட்டபோது அவர் எழுமாறாக மூன்று நாணயத்தை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துபஸ் நடத்துநர்க்கு அதனை ஒன்றின் பின் ஒன்றாக செலுத்துகிறார்.
1) அவர் செலுத்திய நாணயங்கள் மூன்றையும் காட்டும் மரவரிப்படம் ஒன்று வரைக.
2) அவர் செலுத்திய பஸ் கட்டணத்திற்கு சரியான தொகையாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
3) செலுத்திய மூன்று நாணயங்களும் பஸ் கட்டணத்திற்கு போதாமையாக இருப்ப தற்கான நிகழதகவு யாது?
4) அவர் செலுத்திய தொகையானது பஸ் கட்டணத்திற்கு கூடியதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

11. a) ஒரே அடியிலும் ஒரே இரு சமாந்தரக் கோடுகளுக்கிடையிலும் அமைந்துள்ள இணைகரங்கள் பரப்பளவில் சமனாகும் தேற்றத்தை நிறுவுக.

b) உருவில் ABCD, BPQR என்பன இரு சதுரங்களாகும். இதில் RQ இன் நடுப்புள்ளி C ஆகும்.
1. கோணம் ABR = கோணம் CBPஎன நிறுவுக.
2. $\Delta ARB \equiv BCP$ என நிறுவுக. 3. $BC^2 = 5/4BP^2$ என நிறுவுக.

12. a) ஒரு வட்டத்தின் வில்லானது மையத்தில் எதிரமைக்கும் கோணம் அவ்வில் வட்டத்தின் எஞ்சிய வில்லின் எதிரமைக்கும் கோணத்தின் இரு மடங்காகும் என்னும்தேற்றத்தை நிறுவுக.

b) உருவில் சம ஆரை கொண்ட இரு வட்டங்கள் ஒன்றையொன்று A இலும் C இலும் இடைவெட்டு கின்றன. AB, AD என்பன வட்டத்தின் விட்டங்கள்.
1. BCD ஒரு நேர்கோடு என நிறுவுக.
2. BC = CD என நிறுவுக.




05

# கல்விச்சாலைக் காட்சிகள்



நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் ஆசிரியர் தின விழா நடை பெற்ற போது எடுக்கபட்ட படம். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்து 'பாண்ட்' வாத்தியக் குழுவினரால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (204)



நவாலி இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியின் சிறுவர் தின விழா அண்மை யில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் மாணவர்கள் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (204)



தாவடி விநாயகர் முன்பள்ளியின் கலைவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.



[illegible] ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆசிரிய தின [illegible] எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் அமர்ந்திருப் பதைப் படத்தில் காணலாம். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 கியூப் கோரல் கற்களை (முருகைக்கல்) பெறுவதற்கான விலை கோரல் விண்ணப்பம்

யாழ்ப்பாணம் பிராந்திய தொல்லியற் திணைக்கள விலை கோரல் சபையின் தலைவர், அனுமதி பெற்றவர்களிடம் இருந்து யாழ்ப்பாணத்தில் அழிவடைந்த கட்டடங்களில் இருந்து 100 கியூப்கோரல் கற்களை (முருகைக்கல்) வழங்கவுள்ளவர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைகோரல் விண்ணப்பத்தை 10.11.2010 வரை ஏற்கவுள்ளார். மேலதிக விவரங்களை இல.160, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தில் வேலை நாள்களில் காலை 9மணி முதல் பிற்பகல்4 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். 25.11.2010 அன்று பி.ப. 2 மணிக்கு பிராந்திய அலுவலகத்தில் விலைகோரல் விண்ணப் பங்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும். அதில் விண்ணப்பித்தோர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் நேரில் சமுகமளிக்க அனுமதிக்கப்ப டுவர்.

தலைவர்,
விலைகோரல் விண்ணப்ப சபை,
தொல்லியல் திணைக்களம்.

160, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/572740)

## மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.9

வலிகாமம் கல்வி வலயத்தின் விசேட கல்வி அலகினால் நடத்தப்படும் மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டிகள் நாளை புதன்கிழமையும் நாளை மறு தினம் வியாழக்கிழமையும் நடத்தப்பட வுள் ளன.

தனிநடனம், குழு நடனம், நாடகப் போட்டி என்பன புதன்கிழமை இராம நாதன் கல்லூரியிலும் பேச்சு, கட்டுரை, வில்லுப் பாட்டுப் போட்டிகள் வியாழக் கிழமை இணுவில் மத்திய கல்லூரியி லும் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

கோட்டமட்டப் போட் டிகளில் முதல் இரு இடங்களை யும் பெற்ற போட்டி யாளர்கள் வலய மட்டப் போட்டி களில் பங்குபற்ற லாம் என அறிவிக் கப்பட்டுள்ளது.

(204-55)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய உப அதிபர் திருமதி ஜெயபாரதி விமலன் அவர்களின் மைத்துனி

**திருமதி வாசுகி ஜெயபிரகாசன்**

அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நல்லூர் செங்கொடிக்கற் றோ.க.த.க வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(105721)

## மரண அறிவித்தல்



### காராளசிங்கம் வரதன்

(உரிமையாளர், மாயா பதிப்பகம்)

நீர்வேலி, மாசிவனைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் வரதன் 06.11.2010 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காராளசிங்கம்- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சுஜிதாவின் அன்புக் கணவரும் ராதிகா, கௌரீசன் (வர்த் தகப் பிரிவு, இறுதி வருட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), பிரகாஸ் (2ஆம் வருடம், முகிழ்நிலை ஆசிரியர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோத ரனும் கிருபை நாதனின் (கட்டார்) மைத்துனரும் R.S.சிவராசா (முன் னாள் சுகா தார ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை) - ரதிதேவி (பரி சாரகர், ஆதார வைத்தியசாலை, மந்திகை) தம்பதியரின் அன்பு மரு மகனும் சுஜாதா (ஹொலண்ட்), சுபாஜினி, காலஞ்சென்ற சியாமளா மற்றும் சுஜீவன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ் வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

(105722)

தகவல்:
குடும்பத்தினர்.

## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. **2315**
திகதி **07.11.2010**

வெற்றி எழுத்து: **P** வெற்றி எண்கள்: **8 9 2 3 3 4**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 8 | 9 | 2 | 3 | 3 | 4 | ரூபா. 15,936,482/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 8 | 9 | 2 | 3 | 3 | 4 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 9 | 2 | 3 | 3 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 06 |
| 3ம் பரிசுகள் | | | | 2 | 3 | 3 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 71 |
| 4ம் பரிசுகள் | | | | | 3 | 3 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 684 |
| 5ம் பரிசுகள் | | | | | | 3 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் | 6783 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் | 67272 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 8 | 9 | 2 | 3 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 05 |
| 8ம் பரிசுகள் | | 8 | 9 | 2 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 75 |
| 9ம் பரிசுகள் | | 8 | 9 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 654 |
| 10ம் பரிசுகள் | | 8 | 9 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 6718 |
| 11ம் பரிசுகள் | P | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 26816 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. **16,095,900.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **7,080,360.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
இணைந்த கணிதம்
★காலைகள் Tue, Thur 6a.m
★மீதித்தேற்றம் Sat, Sun 6p.m
G.கண்ணன் B.Sc.
A/L ENGLISH
G.RANGIT
★O/L PAPER CLASS
★I.C.T., சிங்களம்
★ENG.MED 6 TO 11
★புலமைப்பரிசில் (5)

## தவறிவிட்டது

புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த வி.தயாபரன் என்பவருடையதாகக் கைத் தொலைபேசி (Nokia) புற்றளைக்கும் மந்திகை வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். தொ.பே.:0212263706

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில. by. ந.விக்னேஸ்வரன்
ஆச்சாரி 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை. Tel-0776751649

## காணி, கட்டடம் விற்பனைக்கு

கொழும்புத்துறை மேற்கு ஐயா கடைச்சந்தியில் (இந்து மகா வித்தியாலயம் முன்பாக) 6 பரப்புக் காணியும் கடைக்கட்டடமும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773904011

நேரம் காலை6.00- முற்பகல் 10.00 மணி வரை
மாலை 6.00- இரவு 9.00 மணி வரை.

(சி/572739)




## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தேவராசா (கட்டுவன் மேற்கு)



வறுத்தலைவிளான், கட்டுவன் வடக்கு, தெல்லிப்பழையைப் பிறப் பிடமாகவும் நாச்சிமார் கோயிலடி, கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி தேவராசா நேற்று (08.11.2010) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சிவபாக்கியம் தம்பதி யரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான விஸ்வலிங்கம்- தங்கரத் தினம் தம்பதியரின் மருமகனும் மல் லிகாதேவியின் ஆருயிர்க் கணவரும் தேவரஞ்சினி (ஜேர்மனி), தேவவினோ தன் (சாரதி- றூபா பன்முக வர்த்த கம், யாழ்ப்பாணம்), தேவகி, தேவஜான் சினி (பிரான்ஸ்), தேவகவிதா (பின் லாந்து), தேவமயூரன் (மயூரன்- பிரான்ஸ்), தேவசுதாகர் (சூட்டி- ஜேர் மனி) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் சண்முகரட்ணம் (ஜேர்மனி), நித்தியரூபி (ஆசிரியை, யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை), சத்தியேந்திரா (பிரான்ஸ்), சிவசுதன் (பிரான்ஸ்), தவராஜ் (பின்லாந்து), றொஷாந்தினி (ஜேர் மனி) ஆகியோரின் அன்பு மாமனும் தர்மினி, தர்ணிகா, சஸ்மிகன், சஜீவனா, மகீஷனன், நர்த்தனன், மதுஷன், நிதுஷன், ஜஸ்மிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான துரைராசா, சற்குணநாதன், குணரத்தினம், தியாகராசா மற்றும் சிவனேசமணி (கனடா), செகராசா, சிவஞானமணி (கனடா), செல்வராணி (கனடா), செல்வராசா (லண்டன்), சிவராசா (லண் டன்), ரஜனி (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), அமுதினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா, புஸ்பராணி, மகேந்திரராசா, சந்திரகுலராசா (ஜேர்மனி), மதிவதனராசா ஆகியோரின் அன்பு மைத்துநரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

(105723)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யாவில் மதுபான சாலைகளுக்குள் புகுந்து 10 பேரைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் அதிகாரி!

## போதையில் வெறியாட்டம்

நைரோபி,நவ.9

கென்யாவிலுள்ள சியாகாகோ நகரைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது நண்பர்களுடன் அங்குள்ள மதுபானசாலையில் மதுபானம் குடித்துக் கொண்டிருந்தார்.

அளவுக்கு மீறிக் குடித்த அவருக்கு போதை தலைக்கேறியது. அப்போது திடீரென தான் வைத்திருந்த துப்பாக்கியால் அங்கு சரமாரியாகச் சுட்டார்.

இதனால் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. இதை அவருடன் மது குடித்து கொண்டிருந்த மற்ற பொலிஸ் அதிகாரிகள் தடுத்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த அவர் அவர்களை நோக்கிச் சுட்டார். இதில் 2 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். பின்னர் வெறியுடன் வெளியேறிய அவர் மற்ற 2 மதுபான சாலைகளில் நுழைந்தும் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார்.

இதில் பொதுமக்கள் 8 பேர் இறந்தனர். இச்சம்பவத்தில் 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 10 பேர் பலியாகினர். இதைத் தொடர்ந்து அவர் தன்னை தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றார். ஆனால் துப்பாக்கியில் குண்டுகள் இல்லை.

எனவே அவரது தற்கொலை முயற்சி வீணானது. அதற்குள் அங்கு வந்த பொலிஸார் அவரை கைது செய்து விசாரணை நடத்தினர். விசாரணையிலிருந்து பின்வரும் தகவல்கள் வெளியாகின:-

அவரை ஒரு பெண் காதலித்தார். ஆனால், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவள் அதை அவரிடம் மறைத்து விட்டாள். மேலும் அவருடன் அவள் உல்லாசம் அனுபவித்தார். இதனால் அவருக்கும் எய்ட்ஸ் நோய் பாதித்தது.

இந்த ஆத்திரத்தில் இருந்த அவர் மதுபானசாலையில் ஒரு பெண்ணை பார்த்தார். அவள் அவரது காதலி போன்று தெரியவே துப்பாக்கியால் சுட்டு ரகளையில் ஈடுபட்டிருக்கிறார்.

இந்தத் தகவலை மாவட்ட பொலிஸ் ஆணையாளர் ஜோன் செலிமோ, மாகாண பொலிஸ் தலைமை அதிகாரி மார்கஸ் ஓச்கோலா ஆகியோர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சியாகாகோ பொலிஸ் நிலையம் முன்பு பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். பொலிஸ் அதிகாரியே பொது மக்களை சுட்டு குவித்துள்ளார். இதன் மூலம் மக்களுக்கு நாட்டில் பாதுகாப்பில்லை என்று கூறி பொலிஸுக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

# ஜப்பானில் பூகம்பம்

டோக்கியோ,நவ.9

பசிபிக் கடல் பிராந்தியத் திலுள்ள ஜப்பான் பூகம்பம் ஏற்படும் அபாயகரமான பகுதியிலுள்ளது. உலகில் ஏற்படும் சக்திவாய்ந்த பூகம்பத்தில் 20 சதவீதம் இங்குதான் ஏற்படுகிறது.

இந்த நிலையில் ஜப்பானின் தென்கிழக்கு பகுதியிலுள்ள ஜவோஜிமா தீவுகளில் நேற்று திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி அதிகாலை 5.26 மணிக்குப் பூகம்பம் ஏற்பட்டது.

இதனால் இங்கு கட்டடங்கள் குலுங்கின. வீடுகளிலிருந்த பாத்திரங்கள் உருண்டன. தூக்க கலக்கத்தில் இருந்த மக்கள் பீதியுடன் வீட்டை விட்டு வெளியேறினர்.

இதனால் இங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன. சிறிதுநேரம் கழித்து மக்கள் வீடு திரும்பினர். இந்தப் பூகம்பம் காரணமாக ஏற்பட்ட சேத விவரம், உயிரிழப்பு, காயமடைந்தவர்களின் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையே, இங்கு 5.7 ரிச்டர் அளவில் பூகம்பம் பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜவோஜிமா தீவின் 80 கிலோ மீற்றருக்கு தென்கிழக்கே பூமிக்கு அடியில் 138 கி.மீற்றர் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஆழிப் பேரலை எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஜவோஜிமா தீவை எரிமலைகள் தீவு என்று அழைப்பர். 2ஆவது உலகப் போரின் போது இது விமானப்படைத் தளமாக மாற்றப்பட்டது.

# கிறிஸ்மஸ் பொம்மைகளில் குண்டு அல்-குவைதா தீவிரவாதிகள் சதி

லண்டன், நவ. 09

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் மீண்டும் வெடிகுண்டு தாக்குதல்களைப் பெரிய அளவில் நடத்த அல்-குவைதா தீவிரவாதிகள் முயன்று வருகிறார்கள்.

பத்து நாள்களுக்கு முன்னர் அல்-குவைதா தீவிரவாதிகள் ஏமனிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பிய வெடிகுண்டுப் பொதிகளைப் பொலிஸார் கண்டுபிடித்து கைப்பற்றினார்கள்.

இந்த நிலையில் கிறிஸ்மஸ் தினத்தன்று பிரிட்டனில் நூதன முறையில் தாக்குதல்கள் நடத்த அல்-குவைதா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கிறிஸ்மஸ் பொம்மைகளின் உள்பகுதியில் அதிநவீன வெடிபொருள் கலவையை வைத்து குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கச் செய்யத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

குறிப்பாக பிரிட்டனுக்குள் இந்த கிறிஸ்மஸ் பரிசுப் பொம்மைகளை ஏராளமாக அனுப்ப தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். பிரிட்டனிலுள்ள கடைகளில் பரிசுப் பொம்மைகள் அடுக்கி வைக்கப்பட்ட பின்னர் எந்த நேரத்திலும் அவை வெடித்து சிதறும் வகையில் தீவிரவாதிகள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அல்-குவைதா தீவிரவாதிகளுக்காக உலகம் முழுவதும் 23 கப்பல்கள் இயங்குகின்றன என உளவுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கப்பல்கள் மூலம் கிறிஸ்மஸ் பரிசுப் பொருள்கள் எளிதில் பிரிட்டனுக்குள் சென்றுவிடும் என்று கூறப்படுகிறது.

வருக.. வருக...



பெருகும் ஆன்மீகம்: ஸ்பெயின், பார்சிலோனாவிலுள்ள சாக்ரடா பமிலியா தேவாலயத்தில் ஆராதனை செய்ய வந்த பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பரை அரசர் ஜூவ் கார்லோஸ் வரவேற்கிறார்.

உலக அரங்கில்

# கார்ப்பந்தயத்தில் பங்கேற்றார் ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின்

## 240 கி.மீ. வேகத்தில் ஓட்டினார்

மொஸ்கோ,நவ9

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் (வயது - 54)பல்வேறு வீர தீரச் செயல்களில் ஈடுபடுவதிலும், விளையாட்டிலும் ஆர்வம் மிக்கவர்.

இவர் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ் பார்க் மைதானத்தில் நடந்த பார்முலா - 1 கார் பந்தயத்தில் கலந்து கொண்டார்.



அதற்கான மஞ்சள் நிற பாதுகாப்பு உடை அணிந்திருந்தார். தலைக்கவசமும் அணிந்திருந்தார்.

மணிக்கு சுமார் 240 கி.மீற்றர் வேகத்தில் கார் ஓட்டி சாதனை படைத்தார். இவரது இந்த வீரதீரச் செயலை அனைவரும் பாராட்டினர். இந்தத் தகவல் ரஷ்ய அரசின் இணையதளத்தில் படத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் 2014ஆம் ஆண்டு சோசி நகரில் பார்முலா - 1 கார் பந்தயப் போட்டி நடைபெறவுள்ளது. அதையொட்டி நடந்த பயிற்சிப் பந்தயத்தில் புடின் கலந்து கொண்டு கார் ஓட்டியுள்ளார்.

இது தனது முதல் அனுபவம் என்றும், இருந்தும் தான் நல்ல முறையில் கார் ஓட்டினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2012ஆம் ஆண்டு ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில், புடின் மீண்டும் போட்டியிடவுள்ளார். அதிவேக பார்முலா - 1 கார் பந்தயத்தில் பங்கேற்றதன் மூலம் ... பலமான இடத்தை அவர் பிடித்துவிட்டார் என்று கருதப்படுகிறது.

# ஹெட்லி குறித்து மனைவியர் தகவல் அமெ.புலனாய்வுத்துறை அசிரத்தை

''தீவிரவாதி டேவிட் ஹெட்லி, பாகிஸ்தானில் பயிற்சி பெறுவது பற்றியும், இந்தியாவுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்போவது குறித்தும், அமெரிக்க புலனாய்வுத் துறையினருக்கு ஐந்து தடவைகள் ஹெட்லியின் மனைவியர் தகவல் தெரிவித்தும் அவர்கள் செயல்படத் தவறி விட்டனர்'' எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்காவைச் சேர்ந்த தேசிய புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் ஜேம்ஸ் கிளாப்பர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''தீவிரவாதி டேவிட் ஹெட்லி பற்றி, 2001ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐந்து தடவைகள் அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஹெட்லியின் இரு மனைவியர் மூலமும், மற்ற சில வழிகளிலும் இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளன. இருந்தாலும், இவற்றை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் முக்கியத்துவம் வாய்ந்தவையாக எடுத்துக் கொள்ளவில்லை.

அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பையில் 2008ஆம் ஆண்டு தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலைத் தடுத்திருக்கலாம்.

அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் தெரிவித்தவர்கள், பாகிஸ்தானில் ஹெட்லி பயிற்சி பெறுவது பற்றியும், இந்தியாவில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தப் போவது பற்றியும் கூறியுள்ளனர்.

ஹெட்லியின் சட்டவிரோதச் செயல்கள் பற்றிய விவரங்கள் கிடைத்தும், அதன்மீது நடவடிக்கை எடுக்க அமெரிக்கப் புலனாய்வுத்துறையினர் தவறிவிட்டனர். ஹெட்லியிடம் விசாரணை நடத்தப்படவும் இல்லை. அவரின் பெயரை கண்காணிப்புப் பட்டியலில் வைக்கவும் இல்லை.

மும்பை தாக்குதல் நடைபெறுவதற்கு ஏழு மாதங்களுக்கு முன்னர் ஹெட்லியின் மனைவிகளில் ஒருவர், அமெரிக்க அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

அப்போது, 2007ஆம் ஆண்டில் நிகழ்ந்த சம்ஜுதா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டுவெடிப்பில், ஹெட்லிக்குத் தொடர்புள்ளது என்றும், அடுத்து இந்தியாவுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதல் நடக்கவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இப்படி ஜேம்ஸ் கிளாப்பர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஐக்கியம் வெற்றி

வலி.வடக்கு, நவ.9

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் பிரிவுகளின் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2:1 சுற்றுக்கள் என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

முதலாம், மூன்றாம் சுற்றுக்களை தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:17, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெல்ல, இரண்டாம் சுற்றை அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 32:30 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது. (த-86)

## தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை 8ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ.9

மெய்வன்மைத்தொழில்நுட்ப அலுவலர் தரம்-4 பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி டிசெம்பர் மாதம் 8ஆம் திகதியாகும்.

மேற்படி பரீட்சையில் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை மெய்வன்மைச் சங்கச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். (த-26)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் பாடசாலைகளின் 13, 15, 17 வயதுப் பிரிவுகளுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள விளையாட்டுப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)




## சாதனையாளர்...



சளைத்தவரல்லர்: இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் நாவாந்துறைப் பகுதியிலிருந்து பங்குபற்றி வெற்றியீட்டிய வீரர்களைப் படத்தில் காணலாம். (படம்: நந்தன்)

## அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டமொன்றில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

நேற்று மதியம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். சென். ஜேம்ஸ், ஆண்கள் பாடசாலை அணியைஎதிர்த்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணி களமிறங்கியது.

இதில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி தன்னை எதிர்த்து விளையாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி வாகை சூடியது. இதன் மூலம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் இரண்டாம் சுற்றில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளது. (த-23)

## வட்டு.இந்து மூன்றாமிடம்

வலி.வடக்கு, நவ.9

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைஅணிகளுக்குஇடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான மூன்றாம் இடத்திற்கான போட்டியில்வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் கடுமையாக மோதிக் கொண்டார்கள்.

முதல்பாதி ஆட்டத்தில் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி கோல் பெற்ற சில நிமிடத்தில் விக்ரோறியாக்கல்லூரியும் கோலை பெற்று சம நிலையில் காணப்பட்ட வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்த நிலையில் இரு அணிகளும் களமிறங்கி மோதிக் கொண்டன.

இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புக்களை தவற விட்டாலும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஒரு கோலை பெற்றுக்கொண்டது.

அடுத்து விக்ரோறியாக் கல்லூரி கோல்பெற எடுத்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி 02:01 என்ற கோல் கணக்கில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (த-86)

## பொலிஸ் அணிகள் போட்டி

வலி.வடக்கு, நவ.9

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான திறந்த கரப்பந்தாட்டப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-

தெல்லிப்பழைபொலிஸ்பிரிவு அணிக்கும்இளவாலைப் பொலிஸ் பிரிவு அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவு அணி மூன்று சுற்றுக்கள் கொண்ட போட் டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை முறையே 25:20, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. நெல்லியடி பொலிஸ் பிரிவு அணிக்கும் வல்வெட்டித்துறை பொலிஸ் அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் அணி முதல் இரண்டு நேர் சுற்றுக்களை 25:12, 25:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. (த-86)

## கரப்பந்தாட்டச் சுற்றில் வெற்றியீட்டிய அணிகள்

வலி.வடக்கு, நவ.9

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது.

ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இப்போட்டியின் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் 25:09, 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத் தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தை வெற்றிகொண்டது.

மற்றுமொரு ஆட்டத்தில் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதல் இரண்டு நேர் சுற்றுக்களை 25:19, 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் தன்வசமாக்கி அச்சுவேலி மத்திய கல்லூரியை வீழ்த்தியது.

பெண்களுக்கான ஆட்டமொன்றில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் மகாஜனக் கல்லூரி முறையே 25:20, 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தை வீழ்த்தி வெற்றியீட்டியது. (எ-86)

## வினோதனுக்குத் தங்கம்!



*இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் அண்மை யில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தடகளப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் செ.வினோதன் 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். (எ-23)*


## தடை தாண்டல் போட்டியில் யாழ்.மாவட்ட வீரனின் சாதனை

வலி.வடக்கு, நவ.9

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில்யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஐங்கரனின் பெறுபேறு வடமாகாணத்தின் புதிய சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது.

2007ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.நிரோஜன் 17.9 செக்கனிலும் 2009ஆம் ஆண்டுயாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சோபன் 17.1 செக்கனிலும் 2010ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஐங்கரன் 16.7 செக்கனிலும் ஓடிய பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2010ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட வீரன் கே.ஐங்கரனின் 16.7 செக்கன் புதிய சாதனையாக பதிவுசெய்யப்படவுள்ளது. (எ-86)



காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படங்கள் : நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்பஜன் அடித்தார் சதம் சமநிலையில் முடிந்தது

நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தோல்வியை நெருங்கிக்கொண்டிருந்த இந்திய அணியை, அசத்தலாக ஆடிய ஹர்பஜன் சிங் தடுத்து நிறுத்தி போட்டி சமனிலையில் முடிய வழிவகுத்தார்.

நியூஸிலாந்து - இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின், முதலாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 487 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் தனது இன்னிங்ஸை ஆடிய நியூஸிலாந்து அணி, 459 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 82 ஓட்டங்களையே பெற்றிருந்தது. இதன்மூலம் தோல்வி நோக்கி இந்தியா நகர்ந்துகொண்டிருந்தது.

எனினும், பின்னர் வந்த ஹர்பஜன் சிங் அசத்தலாக ஆடி சதமடித்தார். இவரின் அசத்தலான ஆட்டம் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கையை வெகுவாக உயர்த்தியது.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக இந்திய அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் 295 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆட ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, கடைசி நாளான நேற்று ஆட்ட நேரம் முடியும் போது ஒரு விக்கெட்டுகள் இழப்புக்கு 22 ஓட்டங்களைப் பெற்றது.



இதன் மூலம் ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

# செல்வாக்கு மிக்க மனிதர்கள் பட்டியலில் 'பிபா' தலைவர் பிளேட்டர் முன்னேற்றம்; அணிகளில் முதலிடத்தைத் தக்கவைத்தது மான்செஸ்டர் யுனைடெட்

'போர்ப்ஸ்' இதழின் செல்வாக்குமிக்க மனிதர்களில் 'பிபா' தலைவர் ஜோசப் பிளேட்டர் முன்னேற்றம் கண்டுள்ளார். உலகின் செல்வாக்கு மிக்க உதைபந்தாட்ட அணிகளின் வரிசையில் மான்செஸ்டர் யுனைடெட் தொடர்ந்து முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

2010ஆம் ஆண்டுக்கான உலகின் செல்வாக்குமிக்க 100 மனிதர்களின் பட்டியலை 'போர்ப்ஸ்' இதழ் வெளியிட்டுள்ளது.

இதில் சீன அதிபர் ஹீ ஜின்டாவ் முதலிடம் பிடித்துள்ளார். இந்தப் பட்டியலில் 'பிபா' தலைவர் ஜோசப் பிளேட்டருக்கு 65ஆவது இடம் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு 67ஆவது இடத்தில் இருந்த செப் பிளேட்டர் இந்த ஆண்டு 2 இடங்கள் முன்னேறி உள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரைச் சிறப்பாக நடத்தியமையால் அவர் முன்னேற்றம் கண்டுள்ளார்.

உலகின் மிகப்பெரிய அமைப்பான உலக உதைபந்தாட்ட சம்மேளனத்தை பிளேட்டர் திறம்பட வழி நடத்தி வருகிறார்.

கடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தை அமெரிக்காவில் மட்டும் 3 கோடி பேர் தொலைக்காட்சியில் கண்டுகளித்தனர்.

இதற்கு 'பிபா'வின் சிறப்பான செயற்பாடுகளே காரணம்'' என்று 'போர்ப்ஸ்' ஜோசப் பிளேட்டருக்குப் புகழாரம் சூட்டியுள்ளது.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே ஒரு சுவிஸ் நாட்டவரும் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ஒலிம்பிக் சங்கத் தலைவர் ஜாகுஸ் ராக் 67ஆவது இடத்தில் உள்ளார்.

உலகின் மதிப்புமிக்க உதைபந்தாட்ட அணிகளில், மான்செஸ்டர் யுனைடெட் தொடர்ந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ரியல்மாட்ரிட், ஆர்சனல், பார்சிலோனா, பேயர்ன் மியூனிச், ஏ.சி.மிலான், லிவர்பூல், ஜூவான்டஸ், செல்சி, இன்டர்மிலான் ஆகிய அணிகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

உதைபந்தாட்ட அணிகளை வைத்திருக்கும் தொழிலதிபர்கள் பட்டியலில் லண்டன் வாழ் இந்தியரான லட்சுமி மிட்டல் முதலிடம் பெற்றுள்ளார்.

குயின்ஸ்பார்க் ரேஞ்சர்ஸ் அணியின் குறிப்பிடத்தக்க பங்குகளை லட்சுமி மிட்டல் வாங்கியுள்ளார். இந்தப் பட்டியலில் இத்தாலிப் பிரதமரும் தொழிலதிபருமான சில்வியோ புர்லுஸ்கானியும் இடம்பெற்றுள்ளார். புகழ்பெற்ற ஏ.சி.மிலான் இவருக்குச் சொந்தமானது.



ரஷ்ய எண்ணெய் நிறுவன அதிபரும் செல்சி உரிமையாளருமான ரோமன் அப்ரோம்விச்சும் முதல் 10 இடத்திற்குள் இடம்பெற றுள்ளார்.

# துப்பாக்கிகளுடன் பட்டனை துரத்திய ஆயுதக் கும்பல்!

சாவ் பவுலோ, நவ. 9

'பார்முலா-1' சம்பியன் ஜென்சன் பட்டனை ஆயுதம் ஏந் திய கும்பல் ஒன்று தாக்க வந்த போது, சாரதியின் சாமர்த்தியத் தால் காயமின்றித் தப்பினார்.

'பார்முலா-1' கார்பந்தயத்தில் உலக சம்பியனான இங்கிலாந்து வீரர் ஜென்சன் பட்டன் (மெக் லரன்-மெர்சிடஸ் அணி), பிரேஸி லியன் கிராண்ட்பரியில் பங்கேற் பதற்காக பிரேஸில் சென்றிருந்த அவர், சாவ் பவுலோ நகர் ஓடு தளத்தில் நடந்த தகுதிச் சுற்றில் பங்கேற்றுவிட்டு இரவு காரில் திரும்பிக்கொண்டிருந்தார்.

பட்டனின் தந்தை ஜான், அவரது தொடர்பாளர் ரிச்சர்ட் காட்டர்ட், உடல்தகுதி நிபுணர் மைக் கோலியர் ஆகியோரும் உடனிருந்தனர். சிறப்புப் பயிற்சி பெற்ற பொலிஸ் வாகன ஓட்டுனர் அவரது காரை ஓட்டிவந்தார்.

காரில் சென்று கொண்டிருந்த போது திடீரென ஒரு நபர் கையில் துப்பாக்கியுடன் காரின் அருகே நின்று கொண்டிருப்பதை பட்டன் பார்த்து விட்டார். உடனடியாக அவர் தனது சாரதியை எச்சரித்தார்.

இதையடுத்து அந்த மர்ம நபரை விட்டு விலகி காரை ஓட்டினார். அப்போது இன்னும் 6 பேர் அப்பகுதியில் பெரிய துப்பாக்கிகளுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் காரை க் குறிவைத்து முன்னேறினர். ''வேகமாகப் போ... வேகமாகப் போ...'' என்று காரில் இருந்தவர்கள் கத்தினார்கள்.

அப்போது அந்தப் பகுதியில் வாகன நெரிசல் அதிகமாக




இருந்தது. இதையடுத்து சாரதி சில வாகனங்களை இடித்துத் தள்ளியபடி அங்கிருந்து காரை வேகமாக ஓட்டிச் சென்றார். சாதுர்யமாகச் செயற்பட்டு பட்டன் உள்ளிட்டோரைப் பத்திர மாகக்கொண்டு போய்ச் சேர்த்தார் சாரதி.

ஆபத்தான சூழலிலிருந்து எந்தவித காயமுமின்றி காப்பாற்றிய சாரதியை, ஜாம்பவான் என்று வர்ணித்த ஜென்சன் பட்டன், அந்த மர்ம நபர்களின் இலக்கு நான் தானா? என்பது எனக்குத் தெரியாது'' - என்றார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பட்டனுக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பிரேஸில் 'பார்முலா-1' செபாஸ்டியன் வெட்டல் முதலிடம்

2010ஆம் ஆண்டுக்கான பிரேஸில் 'பார்முலா-1' கார்ப்பந்தயம் 19 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. பக்ரைன், ஆஸ்திரேலியா, மலேஷியா, சீனா, ஸ்பெயின், மொனாக்கோ, துருக்கி, கனடா, ஐரோப்பா, இங்கிலாந்து, ஜேர்மன், ஹங்கேரி, பெல்ஜியம், இத்தாலி, சிங்கப்பூர், ஜப்பான், கொரியா ஆகிய 'கிராண்ட் பிரீ பந்தயங்கள் முடிந்துள்ளன.

18ஆவது சுற்றான பிரேஸில் 'கிராண்ட் பிரீ பார்முலா - 1' கார்ப் பந்தயம் சாபிவ்லோ நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் ஜேர்மன் வீரரான செபாஸ்டியன் வெட்டல் வெற்றி பெற்றார். அவர் பந்தயத் தூரத்தை ஒரு மணி 33 நிமிடங்கள் 11.80 வினாடிகளில் கடந்தார்.

இந்தப் பருவகாலத்தில் அவர் பெற்ற 4ஆவது வெற்றி இதுவாகும். ஏற்கனவே மலேஷியா, ஐரோப்பா, ஜப்பான் பந்தயங்களிலும் இவர் வெற்றி பெற்றிருந்தார்.

# ஆஸி. கிரிக்கெட் அணிக்குள் பிளவா? மறுக்கிறார்கள் முன்னணி வீரர்கள்!

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தற்போது மிகவும் பரிதாப நிலையில் உள்ளது. அந்த அணி சர்வதேச போட் டிகளில் தொடர்ந்து 7ஆவது தோல்வியைச் சந்தித்துள்ளது.

ஜூலை மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கடைசி யாக ஆஸ்திரேலியா வென்றது. அதன்பிறகு அந்த அணி இதுவரை தொடர் எதையும் வெற்றி பெறவில்லை. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும், ஒரு நாள் போட்டியிலும் தோற்றது. இலங்கைக்கு எதிராகத் தாய் மண்ணில் 'இருபது-20' போட்டியிலும், இரண்டு ஒரு நாள் போட்டியிலும் தோற்றது.

ஆஸ்திரேலியாவின் இத்தகைய தோல்விகளுக்கு அணியில் ஒற்றுமை யின்மையே காரணம் என்று அந்நாட்டுப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பொண்டிங் ஆடாத பட்சத்தில் கிளார்க்குக்கு ஆதரவு கொடுக்க மூத்த வீரர்கள் விரும்பவில்லை என்றும், இதனால், அணியில் பிளவு ஏற் பட்டுள்ளது எனவும் அந்தத் தகவல் கூறுகிறது.

ஆஸ்திரேலிய அணியில் பிளவுஇருப்பதாக வெளியான தகவலை அணித்தலைவர் பொண்டிங் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

பத்திரிகையில் வெளியான தகவல் கவலையளிக்கிறது. அணித்தலைவர் என்ற முறையில் அந்தத் தகவலை மறுக்கிறேன். அணியில் ஒற்றுமை இல்லை என்று



கூறப்படுவது தவறானது. ஆஸ்திரேலிய வீரர்கள் அனை வரும் போராடும் குணம் கொண்டவர்கள். - என்றார்.

இதேபோல அதிரடித் துடுப்பாட்ட வீரரான வோட்சனும் இதை மறுத்துள்ளார்.

''நாங்கள் வெற்றி பெறக் கூடாது என்று நினைக்க வில்லை. நாங்கள் அனைவ ருமே ஒற்றுமையாகத்தான் செயல்படுகிறோம்'' எனக் கூறியுள்ளார் வோட்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1928 | 2010 |
| 07 | 10 |
| 06 | 10 |

திருமதி.
### சின்னத்தம்பி செல்லம்மா

கடந்த 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை சிவபத மடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத் தியக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க் கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போச னத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அடிழைக்கின்றோம்.

அருணா பேக்கரி லேன்,
நாவற்குழி சந்தி, நாவற்குழி. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பேதுறுப்பிள்ளை மேரி றோசலின்

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறுப்பிள்ளை மேரி றோசலின் நேற்று (08.11.2010) திங்கட்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறுப்பிள்ளை - மாகிறேற்றம்மா தம்பதியின் அன்பு மகளும், கிறிஸ்தோப்பர், காலஞ்சென்ற செபமாலைமுத்து, ராசாத்தி, சந்திரா (பிரான்ஸ்), அன்ரன் ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் அமுதாஞானசேகரன், அன்ரன் அமலதாஸ் (பிரான்ஸ்), மேரிராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் சுகிதரன் (பிரான்ஸ்), ஆன்யூட்ஸ்சி, அனுசன் ஆகியோரின் பெரிய தாயும், ராசன், செல்வன், செல்வதி, ராஜன், றொபின்சன், சாம்சன், சஞ்ஜீன் - பிராங்லின் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக காக்கை தீவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. ஞானசேகரன் (மைத்துனர்).

### திருமதி வேலாயுதம் நாகேஸ்வரி



யாழ்ப்பாணம், நீர்வேலியைப் பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலா யுதம் நாகேஸ்வரி (மேலாளர் முன்னாள் கோப்பாய் ஆசிரியர், பயிற்சிக்கல்லூரி) நேற்று முன்தினம் (07.11.2010) ஞாயிற்றுக் கிழமை ஹொலண்டில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீர சிங்கம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும் லதா (வவுனியா), பாரதா (ஜேர்மனி), ஜெயவனிதா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயும் கிருஷ் ணராஜன் (வவுனியா), பரமலிங்கம் (ஜேர்மனி), மகேஸ்வரன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமியும் வீரசிங்கம், மகேஸ்வரி, பூமணி, தருமரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரசிகாமணி (யாழ்ப்பாணம்), பரமேஸ்வரி (யாழ்ப்பாணம்) காலஞ்சென்றவர் களான நரேந்திரன் (வட்டக்கச்சி) பாக்கியநாதன் (சுவிஸ்), சந்திரசேரகம் (ஜேர்மனி) மற்றும் சொர்ணலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் சிந்துஜா, கார்த்திகன், குருபரன், நிஸ் கலா, குகநேசன், குபசாந்த், வேனுஜா, மகிந்தா, மதுஷன், கிஷோ மிகா, கீதன், பிரமியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (11.11.2010) வியாழக்கிழமை ஹொலண்ட் பொதுமண்டபத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
பரமலிங்கம் பாரதா (ஜேர்மனி),
தொ.பே : 0049201640812
117653361257
மகேஸ்வரன் ஜெயவனிதா (ஹொலண்ட்)
தொ.பே : 0031263612938
லதா - கிருஷ்ணராஜன் (வவுனியா).
தொ.பே : 0774521359

தகவல் :
கிருஷ்ணராஜன் -
(வவுனியா-மருமகன்).
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(இ/572745)

### முறைசாராப் பிரிவில் கண்காட்சியும் விற்பனையும்

யாழ். கல்வி வலய முறைசாராக் கல் விப்பிரிவு நடத்தும் கண்காட்சியும், விற் பனையும் நாளை புதன்கிழமை முற் பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளன.

யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திரு மதி. அ. வேதநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடமாகாணக் கல்வித் திணைக் கள உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. கமல ராஜன் கலந்துகொள்வார். (ஓ-10)

### பரிசளிப்பு விழா

யாழ். கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் சமையலறைத் திறப்புவிழா வும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் க. தவ கீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளரு மாகிய ஈ.எஸ்.பி. நாகரட்ணம் தம்பதி யினரும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்க ராசாவும் கௌரவவிருந்தினராக சமூக சேவையாளரான திருமதி பி. ஆறுமுகம் கலந்துகொள்வர். (ஐ)

### சுகவீன போராட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு

அரசாங்கத் தாதியர் சங்கத்தினரின் சுகவீன விடுமுறைப் போராட்டம் ஏற் கனவே அறிவித்தபடி நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறும்.

இந்தப் புறக்கணிப்புப் போராட்டத் தில் சகல வைத்தியசாலைகளினதும் தாதிய உத்தியோகத்தர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். போதனா வைத்திய சாலையின் தாதிமார் சங்கத்தினர் கேட் டுள்ளனர். (ஓ-10)

### முடமாவடி பாலர் பாடசாலை கலை நிகழ்வு

யாழ்ப்பாணம்- நவ.09

ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பாலர் கல்விக் கழக நிர்வாகத் தில் உள்ள யாழ். முடமாவடி ஞானக் குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் 10வது வருடாந்த கலை நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப் பாளர் க.விமலநாதனும், சிறப்பு விருந்தின ராக நல்லூர் பிரதேச சபைச் செயலர் மே. சாந்தசீலனும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலயப் பதவி நிலை உத்தியோகத்தர் பொன். தர்மேந் திரன், பாலர் கல்விக் கழகத் தலைவர் பி. காசிநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.


## இத்தாலிக்கு...

குறைந்த செலவுடன் தொழில் விசா பெற்று செல்வதற்கு உரிய சகல ஆலோசனைகளும் வழங்கப்படும்.
முற்பணம் இல்லை.
உடன்தொடர்பு கொள்ள
T.P. 0724670551.


## தவறிவிட்டது

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த பாலேந்திரன் விதுஷன் என்பவரது தேசிய அ. அட்டை (911603268V) அச்சுவேலிக்கும் திருநெல்வேலிக்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொள் ளவும். தொடர்பு-0772840520, 0770564831.


## தேவை

விரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கும் பல்பொருள் வாணிபம் ஸ்தாபனத்துக்கு பின்வரும் தகைமை உடையோர் தேவை.

1. கணக்காளர்
2. விற்பனையாளர்கள்
3. விற்பனை உதவியாளர்கள்

தொடர்பு-
ஜமுனா எலக்ரோனிக்ஸ்,
299, யாழ். வீதி, நெல்லியடி.
தொ.பே:- 2260150.
0777422604.
(வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்)


## தவறிவிட்டது

தாவளை, இயற்றாலை, கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த தில்லையம்பலம் மனோகரன் என்பவரது தேசிய அ.அட்டை (683461016V) நேற்று (08.11.2010) திங்கட்கிழமை வரணிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P: 0776152995, 0777506535, 0213206062

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்
ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 15
யாழ்-காரைநகர் (ஐயனார் கோயில் ஒழுங்கை) வீதி.
ஆதன இல 49/47

வட்டாரம் 15 யாழ்- காரைநகர் [ஐயனார் கோயில் ஒழுங்கை] வீதி ஆதன இல. 49/47 இல் அமைந்துள்ள ஆதனமானது மாணிக்கம் ஜெயக்கொடியும் பெண் சாந்தகுமாரியும், சந்தியசீலன் கைம்பெண் செல்வராணியும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு குழந்தைவேலு சிவப்பிரகாசம் என்பவரால் 2130- 25.09.2010 திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாரவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து குழந்தைவேலு சிவப்பிரகாசம் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

திருமதி பு.சிவலிங்கம்
செயலாளர்

## மரண அறிவித்தல்கள்

### நடராசா சீனியம்மா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா சீனியம்மா நேற்று (08.11.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியாவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
மு.ஜெயமோகன்

### திருமதி தம்பையா தவமணி



வடலியடைப்பைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தவமணி நேற்று (08.11.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாக லிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பை யாவின் அன்பு மனைவியும், டிகேந்திரா தேவி (கனடா), கேதீஸ்வரபாஸ்கரன் (அமெரிக்கா), பரிமளாதேவி, நகுலேஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், நிர் மலாதேவி, காண்டீபன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயும் சண்முகராஜா, விஜயமாலா, இரவீந்திரன், ஜெயகுணேஸ் வரி, சிவவாணி (பிரதேச செயலகம், காரைநகர்), புவனேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், கஜாயினி விருபா சன், நவதீஸ், பூஜன், டினிஷா, கவிராஜ், கபின்ஷா, அபினாஷ் காலஞ்சென்ற றோஷானி மற்றும் றோஜன் ஆகியோரின் பேர்த் தியும் அன்னலட்சுமி காலஞ்சென்ற கனகாம்பிகை ஆகியோ ரின் சகோதரியும் இராமலிங்கம் அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ் வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளா வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
ஜெகதீஸ்வரன்
[ஜெகா - மகன்]

### சண்முகம் பாலசிங்கம்
(இளைப்பாறிய காணி அதிகாரி)



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 65/2, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனி யாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண் முகம் பாலசிங்கம் 07.11.2010 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண் முகம் - அன்னலட்சுமி தம்பதியரின் இளைய மகனும் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த காலஞ் சென்ற இராமநாதர் கந்தையா (ஆசிரியர்) - மற்றும் பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் சிவபாக்கியத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் துஷியந்தி (ஆசிரியை, வவுனியா, கந்தபுரம் வாணி வித்தியால யம்), தமயந்தி (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திவாக ரன், சயந்தன் ஆகியோரின் மாமனும் சுவாதி, தீப்தி, யுவன் ஆகி யோரின் அன்புப் பேரனும் S.தையல்நாயகி, காலஞ்சென்ற M.குணபூசணி மற்றும் தவராசா காலஞ்சென்றவர்களான நவரட்ண சிங்கம், குலசிங்கம் மற்றும் காராளசிங்கம் ஆகியோரின் சகோதர னும் சு.சரஸ்வதி, க.சிவ பாதம், க.சரோஜாதேவி, நா.புஸ்பராணி, நா.மணிமேகலை, த.சந்திர வதனா, க.பராசக்தி, க.வசந்தகுமார், க.தவ பாதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.11.2010) வியாழக் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

65/2, அண்ணா வீதி,
தோணிக்கல், வவுனியா. (105729)

தகவல் :
தி.துஷியந்தி (மகள்).
T.P : 02445897794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு 909 மில்லியன்

யாழ்ப்பாணம், நவ.9

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு 909 .39 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் வீதிகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், பொதுக்கட்டடங்கள் , குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், பாடசாலைக் கட்டடங்கள் திருத்துதல் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் 64 வீதிகளைப் புனரமைப்பதற்கு 379.47 மில்லியன் ரூபாவும், 11 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை திருத்துவதற்கு 26.54 மில்லியன் ரூபாவும் 12 பொதுக்கட்டடங்களைப் புனரமைப்பதற்காக 203.85 மில்லியன் ரூபாவும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களுக்காக 250 மில்லியன் ரூபாவும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 15 மில்லியன் ரூபாவும், பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைப்பதற்காக 16 பாடசாலைகளுக்கு 34.53 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மாதாந்த மீளாய்வுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

(த-15)

## மரண அறிவித்தல்

### சின்னையா கணேசலிங்கம்

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கணேசலிங்கம் நேற்று (8.11.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(9.11.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் மைத்துனரான சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் பாலாவித்தாள் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கச்சாய் வீதி, கொடிகாமம். (சி-572748) சி.தர்மலிங்கம், 0771000334

## 6ஆம் மாத நினைவஞ்சலியும் அழைப்பும்



### தியாகராசா கிருபா

தோற்றம் 19.08.1987 மறைவு 18.05.2010

கடந்த 18.05.2010 செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணம் அடைந்த தியாகராசா கிருபா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை பிரான்சில் கோண்டாடப்பட இருப்பதால் அன்றையதினம் பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோயில், கல்வியங்காடு திவ்யஜீவன மண்டபத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலை மகள் வீதி,
நல்லூர் வடக்கு,கல்வியங்காடு.

தியாகராசா சுகுணகுமாரி,
விஜி, கஜெந்தி, சஞ்ஜீவ், தாரணி,
ஜெகதீஸ்வரன் குடும்பம், R.ராஜ்குமார், கஜிலா.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர்

### திருமதி பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம்

(யா/ போதனா வைத்தியசாலை முன்னாள் பெண்பரிசாரகர்)



தோற்றம்
31.07.1928
மறைவு
10.10.2010



மின்னாமல் முழங்காமல்
போய்விட்டீர்கள் தாயே!
எங்களை அழவைத்து
விட்டு ஆண்டவனை
அடைய
என்ன அவசரமோ
ஆலம் விழுதுபோல்
உறவுகள் ஆயிரம்
இருந்தாலும்
நீங்கள் எங்களுக்கு
ஆயிரம் யானை பலம்
அம்மா! நாங்கள் அழுதால்
யார் கேட்பார் தாயே
ஆறுதல் சொல்ல யார்
உள்ளார்- நீங்கள் தான்
எங்களை ஆசீர்வதித்து
அன்பு செய்ய வேண்டும்
அம்மா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.56, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம்



திருநெல்வேலி சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை (முடமாவடி) வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (08.11.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், மாலினிதேவி (கனடா), பாஸ்கரன் (கனடா), மஞ்சுளா (கனடா), சுகந்தினி (விரிவுரையாளர் தே.க.கல்லூரி, கோப்பாய்), சுபாசினி அகியோரின் அன்புத் தந்தையும் கோபிநாத் (கனடா), தவச்செல்வம் (ஆசிரியர் பரந்தன் இ.ம.வி.), சிவாகரன் (கனடா), சுகிர்தராசா (சாலைப் பரிசோதகர், யாழ். சாலை C.T.B), ஆகியோரின் அருமை மாமனும், பிரவின் (கனடா), பானுஜா, யதுர்ஜியா, சந்தோஸ், கஸ்தூரிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.69, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (105737)

தகவல்:
குடும்பத்தினர்.

## அறிவித்தல்

லயன் முருகுப்பிள்ளை தர்மலிங்கம் ஆகிய நான் 1998இல் வடமராட்சி லயன்ஸ் கழகத்தில் இணைந்து இன்று வரை கழகத்தினூடாக இயன்ற சேவைகளைச் செய்துள்ளேன். தொடர்ந்து 31.12.2010 வரை கழக அங்கத்தவராகச் செயற்பட எண்ணியுள்ளேன். 01.01.2011 இல் இருந்து கழக அங்கத்துவத்தில் இருந்து விலகுவேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

எனது கழகத்தை விட்டு விலகுவது வேதனையானது. விலகலுக்கு கழகம் காரணமில்லை. கழகம் அங்கம் வகிக்கும் 306 B1 மாவட்டத்தின் ஒழுங்கற்ற செயற்பாடே எனது தீர்மானத்துக்குக் காரணமாகும். கடந்த வைகாசி மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற வருடாந்த மாவட்ட மாநாட்டிலே தனிச் சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அழகு தமிழிலும் தேசிய கீதம் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் அதனையும் இசைத்து இன ஒற்றுமையைப் பேணி இருக்கலாம். ஆனால் ஆளுநர் ஆகியோர் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. வருங்காலத்திலாவது தமிழிலும் தேசிய கீதத்தை இசைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆளுநர் ஆகியோருக்கு 22.05.2010, 23.06.2010, 05.08.2010 ஆகிய திகதிகளில் தொடர்ந்து மூன்று கடிதங்கள் என்னால் அனுப்பப்பட்டும், இன்று வரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

சர்வதேச லயன்ஸ் கழகமானது இன, மத, குல அரசியற் பேதங்கள் அற்ற மாபெரும் சேவை அமைப்பாகும். ஆனால் இலங்கையில் இயங்கும் அதன் அங்கமான 306B1 மாவட்டம் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் கோட்பாட்டுக்கு நேரெதிரான போக்கையே கடைப்பிடிப்பது போலத் தென்படுகிறது. அதனாற்றான் எனக்காகவும் நான் சார்ந்த சமூகத்துக்காகவும் கௌரவம் வேண்டி கழக அங்கத்துவத்தில் இருந்து விலகுவதற்கு முடிவு செய்தேன்.

எனது நியாயமான கோரிக்கையையும், அது நிராகரிக்கப்பட்டமையால் நான் மேற்கொண்ட தவிர்க்க முடியாத தீர்மானத்தையும் வடமாகாணத்தின் லயன்ஸ் கழகங்களின் அங்கத்தவர் அனைவரதும் தகவலுக்காக தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

லயன் எம். தர்மலிங்கம் (ஜே.பி.)
முன்னாள் தலைவர் (2004/ 2005)
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(சி-572744)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் பரமநாதன்

(முன்னாள் இ.போ.ச நடத்துநர்)



சிவன்கோயிலடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரமநாதன் நேற்று (08.11.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - இரத்தினம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் சந்திரவதனன் - மோகன் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சோதிமலர் ஐயம்பிள்ளை, பூங்கோதை, குண ரட்ணம் (மட்டக்களப்பு), சண்முகராஜா (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன்கோயிலடி,*
*சாவகச்சேரி.*

(105732)

*தகவல் :*
*மனைவி சிவபாக்கியம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஒபாமா இந்தியத் தரப்புடன் பேச வேண்டும்

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு வலியுறுத்து

வாஷிங்டன், நவ.9

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள இந்த வேளையில் இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சு நடத்த வேண்டும்.இந்த சந்தர்ப்பத்தை ஒபாமா தவறவிடக் கூடாது.இவ்வாறு ஒபாமாவுக்கான் தமிழ் அமைப்பு கோரியுள்ளது.

சூடானில் இடம்பெற்ற இன வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்துவரும் ஒபாமா நிர்வாகம், அதேபோன்று ஈழத் தமிழர் பிரச்சினையிலும் கூடிய கருணை காட்ட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மிக நெருங்கிய உறவுகள்காணப்படுவதைச் சுட்டிக்காட்டும் ஒபாமாவுக்குதமிழ் அமைப்பு, சூடான் மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளிலும் நீண்டகால இன முரண்பாட்டு அவலங்கள் காணப்படுகின்ற அதேவேளை, ஒரே பருவ காலத்தில் இரண்டு நாடுகளிலும் போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்ற அமெரிக்காவுக்க எதிரான நாடுகளின் உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் இலங்கை அரசாங்கம் பெற்று வருகிறது.

அந்த நாடுகள் அமெரிக்காவுக்கு மாத்திரம் இன்றி, இந்தியாவுக்கும் எதிராவை என்பதைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளது.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கருதி ஈழத்தமிழர் கள் தொடர்பில் இந்திய அரசாங்கமும் அமெரிக்காவுக்கு தெளிந்த இணக்கப் பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் - என்று அந்த அமைப்பு அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளது. (ஒ)

## யானை விரட்டும் நடவடிக்கையில் இராணுவம்

வவுனியா, நவ. 19

இலங்கை இராணுவத்தினர் தற்போது யானைகளை விரட்டியடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா, சேமமடு பகுதியில் மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்து அட்டகாசம் புரியும் யானைகளை விரட்டுவதற்கே இராணுவத்தினரும் வனவளத் திணைக்களத்தினரும் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இத் தகவலை வனவளத்திணைக்கள வவுனியாப் பொறுப்பதிகாரி டபிள்யு .ஜெ. கே. கேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் 11 பேரும் இராணுவத்தினர் 48 பேரும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று ஆரம்பித்த இந்தநடவடிக்கை தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறும் என்றும் சேமமடுவில் இருந்து யானைகள் வடக்குநோக்கி விரட்டப்பட்டு பின்னர் கிழக்குநோக்கித் திருப்பி நெடுங்கேணியின் அடர்ந்த காட்டுப்பகுதியில் விடப்படவுள்ளன – என்றார். (ஒ-10)

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துகளை தெரிவிக்கவுள்ளோம்.

குறிப்பாக கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதியில் மீள் குடியமர்வு, முகாமில் தொடர்ந்து வசித்துவரும் மக்களின் நிலைமை குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறவுள்ளோம்.

இதேவேளை, இச்சந்திப்பின் ஓர் அங்கமாக சிங்கள மக்களின் அத்துமீறல்கள், குடியேற்ற முயற்சிகள் தொடர்பாகவும் ஜனாதிபதியின் கவனத்தைத் திருப்புவதற்கு எண்ணியுள்ளோம்.

-இப்படித் தெரிவிக்கப்பட்டது.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள், மீள்குடியமர்வு மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வுப்பொதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்திருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனா சென்றதால் இந்தச் சந்திப்பு கைகூடவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் சில தினங்களில் இப்பேச்சு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடவுள்ளது. (உ-சி)

## வெலிக்கடைச்சிறையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் அவை தொடர்பாக விசாரணை செய்ய சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி.சில்வா மூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் அதிகாரிகளுக்குத் தொடர்பு உள்ளதா என ஆராயப்பட்டு வருகின்றது என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு பிரதியமைச்சர் காமினி விஜிதமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமது அமைச்சு விசாரணைகளைத் துரிதமாக ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மோதல் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸார் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என கொழும்பு தேசிய வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (சி)

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல் போன்ற வேலைகள் குறித்த காலத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்துகொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

தொடர்புகளுக்கு : 0776679564, 0213207202, 0213218088

## இலங்கை செய்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்பன தொடர்பான முழுமையான விவரங்களை அறிந்து கொள்ள அனைத்துலக சுயாதீன விசாரனை ஒன்று தேவையென பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் ஹம்ரூண் தமது நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதி தனது லண்டன் விஜயத்தை ஒத்திவைத்ததற்கான காரணம் அவருக்கிருந்த வேலைப்பளுவே தவிர வேறுகாரணம் இல்லையென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-10)

## மீசாலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி வீடென்றில் சென்று பணம் கேட்டபோது வீட்டில் இருந்த பெண் நீதிமன்றத்தில் இருந்த கணவருக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியதை அடுத்து சம்பவம் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இரண்டு சிங்கள இளைஞர்களையும் கைதுசெய்ததுடன் பணம் கொடுத்தவர்களையும் கூட்டிச் சென்று விசாரித்துள்ளனர் . (ஒ-10-131)

## மன்னாரிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலாளர் அனுப்பியுள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக் கும் நேரடியாகச் சென்று, பொது மக்களின் சாட்சியங்களை பதிவு செய்ய திட்டமிட்டுள்ளது. எனினும் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான திகதிகள் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

(உ-சி)

ACA கோயில் வாசல், கே.கே.எஸ் வீதி, இணுவில்.

பௌதீகவியல் A/L - 2011

சடப்பொருளியல் (மேற்பரப்பு விசை)

திரு. குமரன்

ஆரம்பம் : 10.11.2010 (புதன்) 4.30 மணி.

A/L - 2011 DAY BATCH

அன்றும்.... இன்றும் .... என்றென்றும்

கணக்கீடு

திரு.பாலகஜன் (H.N.Dip.in/Acc)

கம்பனி ⇔ காசுப்பாய்ச்சல் கூற்று

புதன் ⇨ மாலை 3 - 5

ஆரம்பம் : 10.11.2010 புதன் மாலை 3 மணி

BEACON - பெருமாள் கோயில் அருகில் (வெலிங்டன் சந்தி அருகில்)

## நல்லிணக்க ஆணை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

15ஆம் திகதி வரை இந்தக் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்றுத் தெரிவித்துளள்ளது.

பெரும் எண்ணிக்கையானவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தமது சாட்சியங்களைப் பதிவு செய்ய வேண்டி இருப்பதால் இந்தக்கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

ஆணைக்குழுவின் கால எல்லை இந்த மாதம் நடுப்பகுதியுடன் முடிவடைய இருந்தது இதேவேளை இந்த நீடிப்பில் ''ஆணைக்குழுவின் விசாரணைகள் போலியானவை'' என்று மனித உரிமை ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர்.

இந்தக் கால நீடிப்பு ''எந்த ஒரு தெளிவான சிபாரிசுகளையும் வழங்காமல் காலத்தை இழுத்தடிக்கும் செயல்'' என்று கொழும்பில் உள்ள சமூக ஜனநாயகத்துக்கான நிலையத்தின் ஆய்வாளர் குஸன் பெரேரா தெரிவித்துள்ளார். (ஒ-10)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் தவிர்ந்த அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## நாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டு மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்கும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், கடன் வழங்குநர்களிடம் இருந்து அதிக வட்டிக்கு கடன்களைப் பெற்று இந்நாட்டு மக்களின் கடன் பளுவை அரசு மேலும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்திய அரசு, 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து சர்வாதிகார ஆட்சியின் ஊடாக இந்நாட்டின் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

இப்போது புதிதான சட்டமூலம் ஒன்றை அரசு கொண்டுவர முயற்சிக்கிறது. இந்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு இன்னும் ஓரிரு தினங்களில் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இலங்கையின் பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாத அரசு, சூதாட்ட சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தி இந்நாட்டின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்த எத்தனிக்கிறது. டொலர்களுக்கு ஆசைப்பட்டு இந்த நடவடிக்கையில் அரசு ஈடுபடுகிறது.

- இப்படி அவர் கூறினார். (அ-சி)

## தீர்வு குறித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்சிகளிடம் கோரியுள்ளோம்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், பொருளாதாரம், வாழ்க்கைத்தரம் என்பவற்றில் மேம்பாட்டைக் கொண்டுவருவதே அரசின் இலக்காகும்.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சுகள் அடங்கிய இடைக்கால அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. அதில் -

உயர்பாதுகாப்பு வலயங்களைக் குறைத்தல், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களைச் சமூக நீரோட்டத்தில் இணைத்தல், தமிழ் மொழியை நிர்வாக மொழியாக முழு அளவில் அமுல்படுத்தும் நடவடிக்கையில் வேகத்தை ஏற்படுத்தல், தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தல்

மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்களும் உடனடியாகக் கவனிப்புக்கு உள்ளாகவேண்டியவையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனவே, மேலே குறித்த விடயங்கள் சார்ந்த அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

மனிதாபிமான நடவடிக்கைகளிலும் அரசு தொடர்ந்து கவனம் செலுத்திவருகின்றது. நலன்புரி நிலையங்களில் அகதிகளாக ஆரம்பத்தில் 2 லட்சத்து 97 ஆயிரம் பேர் இருந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 18 ஆயிரமாகக் குறைந்துள்ளது. ஏனையோர் மீள்குடியேற்றப்பட்டு விட்டார்கள். இதேபோன்று தடுத்துவைக்கப்பட்டிருந்த 11 ஆயிரத்து 691 பேரில் 5 ஆயிரத்து 221 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது தடுப்பிலுள்ள தீவிரமாக இயங்கிய முன்னாள் போராளிகளையும் விரைவில் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவுள்ளோம்.

போரால் சீரழிந்த பகுதிகளில் மீளக்கட்டியெழுப்பும் பணிகள் புலம்பெயர்ந்த தமிழர்களையும் இணைக்க அரசு உத்திகளை வகுத்துள்ளது.

புலிகள் இருந்தபோது ஒரே குடையின் கீழ் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட்டார்கள். எனினும் தற்போது அவர்கள் வெவ்வேறான கருத்தியல்களுடன் பிரிந்து இயங்குகின்றார்கள். அதில் முக்கியமான ஒரு பிரிவினர் போருக்குப் பின்னர் நாட்டில் சமூக - பொருளாதாரத் துறையைக் கட்டியெழுப்ப அரசுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர்.

அத்துடன் வடக்கின் அபிவிருத்திக்கு தனியார் துறையினரும் தம்மாலியன்ற பங்களிப்புகளைச் செய்து வருகிறார்கள்.

- என்றார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org